# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-17 Issue-8 ஆகஸ்ட்-2024 மொஹரம்-ஸபர் 1446



சுதந்திரப் போர் சிறப்பிதழ்

- கட்டபொம்மன் படையில் முஸ்லிம்கள்
- தளவாய் வேலுத்தம்பி கால முஸ்லிம்கள்
- ஊமைத்துரையும் முஸ்லிம்களும்
- சுதந்திரப் போரில் கோவை புரட்சியும் முஸ்லிம்களும்...






## ஏன் இந்த புதிய குற்றவியல் சட்டங்களை எதிர்க்க வேண்டும்?



தங்களைத் தாங்களே கொலை செய்து அனுதாபத்தை தேடிய ஜியோனிஸ்ட்டுகள் 1

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ


# வைகறை வெளிச்சம்


ஆகஸ்ட்-2024 ■ மொஹரம்-ஸபர் 1446

■ தனிஇதழ் - ரூ. 40

■ ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ. 480

■ வெளிநாடு - ரூ. 5000

மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன்-49:13.

## உள்ளே...!





ஏன் இந்த புதிய குற்றவியல் சட்டங்களை எதிர்க்க வேண்டும்? 4





தங்களைத் தாங்களே கொலை செய்து அனுதாபத்தை தேடிய ஜியோனிஸ்ட்டுகள் 54






கட்டபொம்மன் படையில் முஸ்லிம்கள் 26

| | |
|---|---|
| தளவாய் வேலுத்தம்பி கால முஸ்லிம்கள் - 21 | சிலுவைப் போர் 2.0 - 50 |
| சுதந்திரப் போரில் கோவை புரட்சியும் முஸ்லிம்களும் - 30 | குழந்தை வளர்ப்பு - 56 |
| ஊமைத்துரையும் முஸ்லிம்களும் - 37 | மருத்துவம் - 58 |
| சாவர்க்கரின் சாயம் வெளுத்தது... - 44 | தலையங்கம் - 60 |
| இந்தியாவில் முஸ்லிம்கள் - 45 | ஈத் மிலன் - 62 |
| | பெரியார் தொண்டர் பன்னீர்செல்வம் (எ) அமீர் பாஷாவை அல்லாஹ் அழைத்துக் கொண்டான் - 64 |



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only

10நிமிடம் ஒதுக்கி இந்த
கட்டுரையினை படிக்கவும்




# ஏன் இந்த புதிய குற்றவியல் சட்டங்களை எதிர்க்க வேண்டும்?

## புதிய முப்பெரும் குற்றவியல் சட்டம் : புதிய காலனிய பாசிசச் சட்டம் - முழுக் கட்டுரை தொகுப்பு

**தற்போது** மோடி அரசு கொண்டு வந்துள்ள மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள் நீதிமன்றத்தின் அதிகாரங்களை பறித்து போலீஸ் ராஜ்ஜியமாக கட்டியமைக்க கொண்டு வரப்பட்டிருக்கிறது. அனைத்து மக்களையும் குற்றவாளியாக மாற்றுகிறது. கார்ப்பரேட்டுகளுக்கு சேவை செய்யவும் இந்துத்துவ ஆட்சியை நிலைப்படுத்தவும், பாசிச மயமாக்குவதற்காகவுமே இந்த சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கிறது. காலனிய கால சட்டத்தை ஒழிப்பதாக கூறிக் கொண்டு அதைவிட கொடூரமான மக்கள் விரோத புதிய காலனிய சட்டத்தை கொண்டு வந்துள்ளது.

ஏற்கெனவே அமலில் இருக்கும் 3 குற்றவியல் சட்டங்களை - சட்டப் பிரிவுகளை மாற்றியும் திருத்தியும் - புதிய பெயரில் டிசம்பர் 2023, 20ஆம் நாளில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது பாஜக அரசு.

குற்றத்தின் தன்மையை வரையறுப்பது, அதற்கான தண்டனை என்ன என்பதை வரையறுக்கும் இந்திய தண்டனைச் சட்டத்திற்கு (Indian Penal Code, 1860) மாற்றாக 358 பிரிவுகளைக் கொண்ட பாரதிய நியாய சன்ஹிதா - BNS (பாரதிய நீதிச் சட்டம்) என்ற சட்டமும்;

குற்றத்தை வரையறுத்த பிறகு அதை நீதிமன்றத்தில் நிறுத்தி அவர்களுக்கு தண்டனை பெற்றுத் தரும் நடைமுறை சட்டமான 533 பிரிவுகளைக் கொண்ட குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டத்திற்கு (Crimal Procedure Code, 1983) பதிலாக, 531பிரிவுகளைக் கொண்ட பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா - BNSS (பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம்) என்ற சட்டமும்;

அந்த தண்டனையை நிரூபிக்க சாட்சியத்தை கையாளும் வழிமுறைகளை வரையறுக்கும் இந்திய சாட்சியச் சட்டத்திற்குப் (Indian Evidence Act, 1872) பதிலாக 170பிரிவுகளைக் கொண்ட பாரதிய சாக்ஷ்ய அதிநியாயம் - BSA (பாரதிய சாட்சிய சட்டம்) என்ற சட்டமும் கொண்டு வரப்பட்டுள்ளது.


vaigarai velicham official

இச்சட்டத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா டிசம்பர் 12ஆம் நாள் மக்களவையில் அறிமுகம் செய்தார். டிசம்பர் 20ம் தேதி குரல் வாக்கெடுப்பு முறையில் நிறைவேற்றப்பட்டு, டிசம்பர் 25ல் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவின் ஒப்புதலும் பெறப்பட்டுவிட்டது. ஜூலை 1 முதல் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது (notification).

இந்த சட்டங்களுக்கான முதல் கட்ட வரைவை கடந்த ஆண்டு ஆகஸ்ட் 11ஆம் தேதி மக்களவையில் அமித்ஷா தாக்கல் செய்தார். பிறகு இந்த மூன்று சட்டங்களையும் நாடாளு மன்ற நிலைக்குழுவுக்கு அனுப்பியது பாஜக அரசு. அக்குழுவின் பாஜக எம்.பி.க்களே கூட சட்டத்தின் பல அம்சங்களை ஏற்காமல் திருத் தங் களை கூறியிருக்கிறார்கள்.

ஏனெனில் இச்சட்டத்தின் நோக்கம் எவ்வளவு வன்மமானது என்பதை அறியலாம். நிலைக் குழுவின் மற்ற கட்சி உறுப்பினர்களும் இச்சட் டத்தில் எங்கும் விரவிக் கிடக்கும் தெளிவற்ற கூறுகளை எதிர்த்துள்ளார்கள். ஆனால், சிலவற்றை மட்டுமே பெயரளவிற்கு திருத்தியது. ஆனால் திருத்தம் செய்த சட்டத்தை தாக்கல் செய்வதற்கு மாறாக அச்சட்டத்தையே திரும்பப் பெற்றுக் கொள்வதாக நாடகமாடியது.

மக்களை ஏமாற்ற பெயரளவுக்கு திருத்திய அச்சட்டதையே மீண்டும் மக்களவையில் தாக்கல் செய்து சட்டத்தை நிறைவேற்றியும் விட்டது. இரண்டாவது முறை திருத்தி தாக்கல் செய்தபோது அமித்ஷாவே ஒவ்வொரு எழுத் தையும் பிழை திருத்தம் பார்த்ததாக கூறியதுதான் நகைப்புக்குரிய ஒரு மோசடி. (BNSSல்பிரிவு187ல் police custody என்பதை policy custody என குறிப்பிட்டுள்ளதும், பிரிவு 532ல் சன்ஹிதா என்பதை முன்பு பயன்படுத்திய code என்ற வார்த்தையையே திருத்தாமல் பயன்படுத்தியும் இருக்கிறது. அமித்ஷா பிழை திருத்தம் செய்வதற்குகூட தகுதியில்லாதவர் என்பது தனிக் கதை). ஜனநாயகத்தை காப்பாற்றுவது எழுத்துப் பிழைகள் அல்ல. ஜனநாயகத்தின் புதைகுழியாக உருவாக்கியிருக்கும் சட்டப் பிரிவுகளே. அவை பிழையற்று இருக்கிறது என்பது, எள்ளளவும் திசைவிலகாமல் செயல் படுத்தி மக்களின் இரத்தம் குடிக்கும் நோக்கோடு கோரப்பற்களோடு காத்திருக்கிறார்கள் என்பதேயாகும்.

இதை தாக்கல் செய்தபோது கோயபல்ஸ் அமித்ஷா, முப்பெரும் குற்றவியல் சட்டங்களில் உள்ள 475 காலனியக் கால அடிமை சரத்துகளை நீக்கியுள்ளோம் என்று கூச்சநாச்சம் இல்லாமல் பொய் பேசினார். உண்மையில், புதிய காலனி யத்திற்கு சேவை செய்யும் - போலீஸ் ராஜ்ஜிய மாக மாற்றும் நோக்கோடு முன்பிருந்ததை விட கொடிய கருப்புச் சட்டங்களாக கொண்டு வரப்பட்டிருக்கிறது. மக்களை கைது செய்தது முதல் விசாரணை நடத்தி அவர்களுக்கு தண்டனை அளிக்கப்பட்டு கருணை மனு செய்வது வரையிலான அனைத்து நிலைகளி லும் கொஞ்ச நஞ்ச ஜனநாயக மற்றும் அரசியல் உரிமைகளைக்கூட இச்சட்டங்கள் விழுங்கிவிட்டன. மக்கள் மீது சுமத்தப்படும் நெருக்கடியால் எழும் எதிர்ப்புகளை நசுக்கவும், பாசிசத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் ஏதுவாக இந்த மூன்று குற்றவியல் சட்டங் களையும் மாற்றியமைத்திருக்கிறார்கள் என்பதே உண்மை.

## புதிய குற்றவியல் சட்டத்தை உருவாக்கிய முறையே ஜனநாயக விரோதமானது

2023 ஆகஸ்ட் மாதம் எதிர்கட்சிகள் மணிப்பூர் பிரச்சினையில் வெளிநடப்பு செய் திருந்தபோது முதல் சட்ட வரைவை கொண்டு வந்தது. அதை ஆய்வுக்கு என்ற பெயரில் நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு அனுப்பியது. 3 மாதத்திற்கு பிறகு டிசம்பர் 12 அன்று அதையே திருத்தி புதிய சட்டமாக உள்துறை அமைச்சர் மீண்டும் தாக்கல் செய்தார்.

இந்த சட்டம் தாக்கல் செய்த மறுநாள் டிசம்பர் 13 அன்று நாடாளுமன்றத்தில் மஞ்சள் புகை குண்டு வீச்சு நடத்தப்பட்டது. நாடாளு மன்றத்தில் பாதுகாப்பு இல்லை என எழுந்த விவாதத்தை காரணம் காட்டி 144 எம்.பி.க்கள் அவையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட் டார்கள். மீதமிருந்த ஆளுங்கட்சி எம்பிக்களின் பலத்தைக் கொண்டு மட்டுமே குரல் வாக்கெடுப்பு மூலம் டிசம்பர் 20ல் எவ்வித விவாதமுமின்றி இந்த மூன்று சட்டங்களுடன் சேர்த்து மொத்தம் ஏழு சட்டங்களையும் பாசிச முறையில் நிறைவேற்றியிருக்கிறது பாஜக அரசு. இதில் பத்திரிகையாளர், சமூக ஊடகம் ஆகியவற்றின் சுதந்திரத்தை பறிக்கும் சட்டமும், டிஜிட்டல் தனிநபர் தகவல் பாதுகாப்பு

மசோதாவும் அடங்கும்.

**அரசியலமைப்புச் சட்டத்திற்கும் மொழிவுரிமைக்கும் எதிரான புதிய குற்றவியல் சட்டங்கள்**

உயர்நீதிமன்றங்களில் அந்தந்த மாநில மொழியை அதிகாரப்பூர்வ மொழியாக மாற்ற வேண்டும் என்று இன்றும் போராடிக் கொண்டிருக்கிற வேளையில் இன்னொரு இந்தி மொழி திணிப்பை (அதாவது சட்டங்களின் பெயரை (சமஸ்கிருதமயமான) இந்தி ஒலி அமைப்பில் ஆங்கில எழுத்தில் அதாவது வாட்ஸ்அப்பில் பயன்படுத்தப்படும் விசைப்பலகையில் தமிழை ஆங்கிலத்தில் டைப் செய்வது போல) கொண்டு வரப்பட்டதையும் எதிர்த்து போராட வேண்டியிருக்கிறது.

இதில் பாரதீய என்ற வார்த்தை இந்துத் துவத்தை குறிக்கும் வார்த்தையாகும். ஹெட்கேவர் 'ராஷ்டிரிய' என்பதற்கும் 'இந்து' என்று பொருள். அதனால் இந்து என்ற முன்னொட்டு தேவையில்லை என்று கூறினார். அதே வழிமுறையில் கோல்வால்கரும் தனது சிந்தனைக் கொத்து என்ற நூலில், "பாரதீய" என்ற வார்த்தைக்கு இந்து என்ற பொருளைத் தான் குறிக்கிறது என்று கூறியுள்ளார்.

கோல்வார்க்கரின் வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால் "இந்து நீதிச் சட்டம்", "இந்து மக்கள் பாதுகாப்புச் சட்டம்", "இந்து சாட்சிய சட்டம்" என்றே சொல்ல வேண்டும். அதனால் தான் பாரதிய ஜனதா கட்சி (இந்து மக்கள் கட்சி) பாரதிய என்ற சொல்லை திட்டமிட்டே சேர்த்திருக்கிறது.

உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் மற்றும் சட்டங்கள், சட்ட வரைவுகள் போன்றவற்றில் எந்த மொழி பயன்படுத்தப்பட வேண்டும் என்பதைப் பற்றி அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 348 கூறுகிறது. இந்தப் பிரிவின் படி அனைத்து சட்டங்கள், கட்டளைகள், விதிகள், ஒழுங்குமுறைகள், உத்தரவுகள் மற்றும் துணைச் சட்டங்கள் ஆகியவை ஆங்கிலத்தில் இருக்கும் என்றும் அந்த விதி கூறுகிறது. இந்த அந்நிய மொழி திணிப்பு திருத்தமே அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்படும்போதும் விவாதம் இல்லாமலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதேபோல் இந்தியாவில் உள்ள மாநிலங்கள் ஒவ்வொரு சட்டத்தையும், தீர்ப்புகளையும், ஆணைகளையும் அந்தந்த மாநில அலுவலக மொழியில் வெளியிடலாம், ஆனால் ஆங்கில மொழியாக்கத்தை அதனுடன் வெளியிட வேண்டும் என்கிறது ஆட்சி மொழிச் சட்டம்; ஏற்கெனவே 8வது அட்டவணையில் சேர்க்கப் பட்டுள்ள மாநில அலுவலக மொழியாக இருக்கக்கூடிய 22 மொழிகளை மறுத்து இன்று அனைத்து அலுவலக நடவடிக்கைக்கும் ஆங்கிலம், இந்தியை மட்டுமே ஏற்கிறது. இதை மாநிலத்திற்குள்ளேயே ஒன்றிய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டு இயங்கும் அனைத்து மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் ஒன்றிய அமைப்புகளுக்கும் நீட்டிக்கிறது. மொழி பயன்பாட்டில் ஆங்கிலம், இந்தி என்ற இரண்டு தளைகளை இந்தியாவின் அனைத்து தேசிய இனங்களும் சுமக்க வேண்டியுள்ளது. இதை எதிர்த்து அனைத்து தேசிய இனங்களின் மொழிகளையும் ஆட்சி மொழியாக அங்கீகரிக்க வேண்டி நாம் போராட வேண்டியிருக்கிறது.

**புதிய சட்டங்களில் முக்கியமான மாற்றங்களாவன:**

**பாரதிய நியாய சன்ஹிதாவில்**

அரசு பயங்கரவாதத்தை நியாயப்படுத்தவும், அனைத்து அரசியல் உரிமைகளையும் ஒடுக்குவதற்கும் பயன்படுத்தப்படுகின்ற வார்த்தைகளான தேசப் பாதுகாப்பு, இறையாண்மை, ஒற்றுமை சீர்குலைவு என்பதை 7 பிரிவுகளில் திட்டமிட்டு சேர்த்திருக்கிறது.

அரசியல் சட்டத்திற்கு விரோதமான சிறப்புச் சட்டமான ஊபா சட்டத்தினை நீக்குவதற்கு மாறாக அந்தச் சட்டத்தின் பயங்கரவாத சரத்துகளை பிரிவு 113ல் சேர்த்திருக்கிறார்கள்.

124ஏ தேசத்துரோக குற்றத்தை நீக்கியதாக கூறிவிட்டு, அதை பிரிவு 152ஆக மாற்றிய தோடு இந்திய இறையாண்மை அல்லது ஒருமைப்பாட்டிற்கு ஆபத்து ஏற்படுத்துதல் என்ற தெளிவற்ற வார்த்தையை கூடுதலாக இணைத்து பிரிட்டிஷ் காலனியச் சட்டத்தை விட மிகக் கொடிய புதிய காலனியச் சட்டமாக மாற்றப்பட்டுள்ளது.

கும்பல் கொலையை பிரிவு 103(2)ல் தனியாக வரையறுத்திருக்கிறது. மதம் என்ற வார்த்தையை


vaigarai velicham official

# Three bills introduced in Lok Sabha

**Indian Penal Code (IPC), 1860**

TO BE REPLACED BY

**Bharatiya Nyaya Sanhita Bill, 2023**

- It will have **356 sections** (instead of 511 sections in IPC)
- 175 sections have been amended
- 8 sections have been added, and 22 sections have been repealed

**Code of Criminal Procedure (CrPC), 1973**

TO BE REPLACED BY

**Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023**

- It will have **533 sections** (instead of 478 sections in CrPC)
- 160 sections have been changed
- 9 sections have been added, and 9 sections have been repealed

**Indian Evidence Act, 1872**


TO BE REPLACED BY

**Bharatiya Sakshya Bill, 2023**

- It will have **170 sections** (instead of 167 sections in IEA)
- 23 sections have been changed
- 1 section has been added, and 5 sections have been repealed




"From 1860 to 2023, the country's criminal justice system functioned as per the laws made by the British. I can assure the House that these bills will transform our criminal justice system. The aim will not be to punish, it will be to provide justice."
— **AMIT SHAH**



**WHAT NEXT**

**The three bills will be studied by the standing committee on home affairs, which is chaired by BJP MP Brijlal (who is a retd IPS officer).**

திட்டமிட்டு இப்பிரிவில் தவிர்த்து இந்துத்துவ பயங்கரவாதிகளுக்கு வெளிப்படையாகவே விதிவிலக்கை அளித்திருக்கிறது இச்சட்டப் பிரிவு.

“வஞ்சகமான வழிமுறைகளில்... அடையாளத்தை மறைத்து.. திருமணம் செய்து கொள்வது” (பிரிவு 69) என்ற வார்த்தைகள் சங்கிகளின் லவ் ஜிகாத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறையாக இச்சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

இனி உண்ணாவிரதப் போராட்டம் (பிரிவு 226) நடத்தினால் அவர்களை குற்றவாளிகளாக சிறையலடைத்து தண்டிக்க முடியும். இத்திருத்தம் மூலம் அமைதிவழியில் போராடும் அரசியல் உரிமை முற்றிலுமாக பறிக்கப்பட்டிருக்கிறது.

இனி கருணையைக் கூட இந்த ஆளும் வர்க்கத்திடம் எதிர்பார்க்க முடியாது என்பதை இச்சட்டத்தின்மூலம்தெளிவுபடுத்தியிருக்கிறது. கருணை மனு தாக்கல் செய்வதற்கு கால வரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதன் மீது குடியரசு தலைவர் முடிவு செய்வதற்கான கால அளவு வரையறை நிர்ணயம் செய்யப்படவில்லை. காலதாமதமானால் நீதிமன்றத்திற்கு செல்லும் உரிமை வெளிப்படையாக மறுக்கப்பட்டிருக்கிறது.

**பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதாவில்**

தண்டனைகளை நிறுத்தி வைத்தல், தள்ளுபடி செய்தல், மாற்றியமைத்தல் (பிரிவு 475 மற்றும் பிரிவு 476 BNSS) ஆகிய அதிகாரங்களை மாநில அரசிடமிருந்து பறித்துவிட்டது.

கைவிலங்கு இடுவது (பிரிவு 43(3)) இனி காவல்துறையின் உரிமையாக மாற்றப்பட்டுள்ளது.

முதல் தகவல் அறிக்கை பதியாமலேயே குற்றம் நடந்திருக்கிறதா என விசாரணை நடத்த 14 நாட்கள் அவர்களுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது (பிரிவு 173 BNSS). அதேபோல், எந்தவொரு நபரையும் காவல்நிலையத்தில் கைது செய்யாமலேயே 24 மணி நேரத்திற்கு

போலீஸ் வசம் வைத்துக் கொள்ளலாம்

போலீஸ் காவலில் வைத்து விசாரிக்கும் காலத்தை 15 நாட்களுக்கும் மேலாக நீட்டித்து போலீஸ் பிடியிலேயே குற்றவாளியை கொண்டு வந்துள்ளது (பிரிவு 187 BNSS).

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கான காலம் 90 நாட்களுக்கு மேல் நீட்டிக்கும் அதிகாரத்தையும் (பிரிவு 193ன்படி) கொடுக்கப் பட்டுள்ளது. எவ்வளவு காலம் வரையில் நீட்டிக்கலாம் என வரையறை செய்யவில்லை. அதனடிப்படையில் பிணை மறுக்கப்படும் நிலையை உருவாக்கியுள்ளது.

காவல்துறை சாட்சிகளின் விசாரணையை இனி செல்போன் உட்பட டிஜிட்டல் முறை யிலேயே பேசி பதிவு செய்ய அதிகாரம் வழங்குகிறது (பிரிவு 180 BNSS). இது நியாயமான விசாரணைக்கும், சாட்சிகள் புரிந்து கொண்டு சாட்சியத்தை பதிவு செய்வதற்கான வாய்ப்பில்லாமல் தவறான முறையிலேயே இது பயன்படுத்தப்படும். இந்த டிஜிட்டல் பதிவு ஆவணத்தை வைத்தே தண்டனையை வழங்குவது ஆபத்தானது.

ஆயுதப் படையை வைத்து பலப்பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைப்பதற்கு நடைமுறை யிலிருக்கும் கு.வி.மு.ச சட்டம் 130 (1)ன் படி மாவட்ட ஆட்சியர் அல்லது துணை மாவட்ட ஆட்சியர் அனுமதி வழங்கி ஆணையிட வேண்டும். ஆனால் BNSS 150ன்படி வட்டாட் சியரே ஆயுதம் கொண்டு கூட்டத்தைக் கலைக்க காவல்துறைக்கு ஆணையிட முடியும். கீழ்நிலை அதிகாரிகளை பலிகடாவாக்கி தன் விருப்பம் போல் காவல்துறை அதிகாரிகள் செயல்பட வழி வகுத்துள்ளது.

காவல் விசாரணை அனைத்தையும் வீடியோ பதிவாக செய்ய வேண்டும் (பிரிவு 176(3)). தடவியல் நிபுணர்களின் அறிக்கையும் கட்டாய மாக தாக்கல் செய்யப்பட வேண்டும். பிரிவு 349 BNSSன்படி கைது செய்யப்படாத சூழ்நிலையிலும் எவரிடமிருந்தும் கட்டாயப் படுத்தி கையெழுத்து, கைரேகை, குரல் மாதிரி ஆகியவற்றை பெற முடியும்.

சொத்துக்களை பற்றுகை செய்வதற்கும், பறிமுதல் செய்வதற்கும், அதை முடக்கி வைப்ப தற்கும் காவல்துறைக்கு எல்லையில்லா அதிகாரம் கொண்ட கொடிய சட்டம் காவல்துறை யிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது (பிரிவு 107).

குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேர் நிறுத்தப்படாமலேயே அதாவது தேடப்படும் குற்றவாளியாக அறிவித்து (Without appearance) நீதிபதியும் காவல்துறையும் உடன்பாட்டுக்கு வந்து ஒருதலைபட்ச விசாரணை நடத்தி தண்டனை அளிக்க முடியும் (பிரிவு 356).

பொது சேவை (பிரிவு 23) என்ற தண்டனை முறையை கொண்டு வந்திருக்கிறது. இதை இன்னொரு முறையில் சொல்ல வேண்டு மென்றால் வெட்டி வேலை என்பார்களே, கூலி இல்லாமல் வேலை செய்யும் முறையைத்தான் பொதுச் சேவை என்கிறார்கள். எது பொதுச் சேவை என்பதை வரையறுக்கவில்லை. இதை தவறாக பயன்படுத்தவும் பிற்போக்கான கருத்துகளையும், மதவாதத்தையும் புகுத்த வழிவகை ஏற்படும்.

**பாரதீய சாக்ஷ்ய அதிநியாவில்**

டிஜிட்டல் முறையில் தாக்கல் செய்யப்படும் சாட்சியங்களை கணினியை இயக்கும் நபர்கள் கூட அங்கீகரித்து வழங்கப்படும் சான்றை சாட்சியமாக ஏற்கப்படும்.

டிஜிட்டல் முறையில் தாக்கல் செய்யப்படும் சாட்சியங்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் அல்லாதவர்கள் வழங்கிய சான்றைக் கொண்டு தாக்கல் செய்த ஆவணங்களையும் முதல்நிலை சாட்சியங்களாக (Primary evidence) வரையறுக் கப்பட்டுள்ளன.

இவை குற்ற வழக்குகளில் தண்டிக்கவே பயன்படும். உரிமையியல் வழக்கில் எவ்வித சரிபார்ப்புமின்றி மோசடியாக உருவாக்கப் பட்ட ஆவணங்கள்கூட ஏற்கப்படும் சூழலை உருவாக்கியுள்ளது.

மேற்கண்ட மாற்றங்கள் யாவும் நாம் அரைகுறையாக அனுபவித்து வந்த அரசியல் மற்றும் சிவில் உரிமைகளை கூட குற்றங்களாக மாற்றப்பட்டுள்ளதை தெளிவுபடுத்துகிறது. ஊபா, என்.ஐ.ஏ. போன்ற கருப்புச் சட்டங் களையும் இந்த குற்றவியல் சட்ட வரைவின் சட்டப்பிரிவுகளுள் மோடி அரசு சேர்த்திருக் கிறது. இதை பொதுச் சட்டங்களில் கொண்டு


vaigarai velicham official

வந்ததன் மூலம் அனைவரையும் பயங்கரவாதிகளாக சித்தரிக்க எத்தனிக்கிறது. அதேபோல் நாடு எப்போதும் பயங்கரவாதத்தின் பிடியிலேயே இருப்பதாக அச்சுறுத்துகிறது.

### சிவில் உரிமையை பறித்து போலீசு ராஜ்ஜியமாக மாற்றும் குற்றவியல் சட்டங்கள்

அரசியல் உரிமை, சிவில் உரிமை, தனி மனித உரிமை என அனைத்தையும் பயங்கரவாதமாக மாற்றுக்கின்ற பாரதிய நியாய சன்ஹிதா - BNS (பாரதிய நீதிச் சட்டம்)

காவல்துறை சொல்லுகின்ற எந்த செயலையும் ஒருவர் செய்ய மறுத்தாலே அவருக்கு சிறை நிச்சயம் என்கிறது புதிதாக சேர்க்கப்பட்ட பிரிவு 172 BNSS. கைவிலங்கிடும் உரிமையை தன்விருப்பம் போல் செயல்படுத்த காவல் துறைக்கு அதிகாரம் வழங்கியிருகிறது. புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவதற்கும் காவல்துறைக்கே அதிகாரம். புகார் பதியப் பட்டாலே அவர்களின் பெயர்களை பொது வெளியில் அறிவிப்பு செய்கின்ற அதிகாரத்தை வழங்கியிருக்கிறது.

ஏற்கெனவே உயர் அதிகாரப் பதவியிலிருந்தவர்கள் அமல்படுத்திக்கொண்டிருந்த அதிகாரமெல்லாம் புதிய சட்டத்தில் கீழ்நிலை அதிகாரிகளே அதிகாரத்தை செலுத்த முடியும் என மாற்றப்பட்டுள்ளது. இதுவரையில் நாம் போராடி பெற்ற அனைத்து அரசியல் உரிமைகளையும் இந்த சட்டம் பறித்துவிட்டது. அந்த உரிமைகளை குற்ற நடவடிக்கையாகவும் வரையறுத்துள்ளது.

தேசப் பாதுகாப்பு, இறையாண்மை, ஒற்றுமை சீர்குலைவு என்ற பெயர்களில் அரசு பயங்கரவாதத்தினை நியாயப்படுத்தி ஒடுக்கும் கருவியாக இச்சட்டம் இருக்கிறது.

அரசு பயங்கரவாதத்தை நியாயப்படுத்தவும், அனைத்து அரசியல் உரிமைகளையும் பறித்து ஒடுக்குவதற்கும் பயன்படுத்தப்படுகின்ற இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கு ஊறுவிளைவித்தல் என்ற தெளிவற்ற வார்த்தைகளை பெருங் குற்றங்களுக்கான பிரிவு உட்பட 7 இடங்களில் சேர்த்திருக்கிறது. இவ்வார்த்தைகள் இதுவரையில் அரசியல் உரிமைக்காக போராடுகின்ற இயக்கங்கள், ஜனநாயக சக்திகளை ஒடுக்கவே பயன்படுத்தி வந்திருக்கிறது. இது பாசிசத்தை மேலும் பலப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும்.

இனி எவரும் கேள்வி கேட்கக்கூடாது. அரசின் கொள்கைகளை எதிர்த்து போராட மட்டுமல்ல பிரச்சாரம் செய்து மக்களை திரட்ட முயற்சிக்கக் கூட அனுமதியில்லை. வழக்கமாக செய்யப்படும் ஸ்டிரைக், பந்த் மட்டுமல்லாமல் உண்ணாவிரதம் கூட இனி குற்ற நடவடிக்கையாக பார்க்கப்படும். இது பிரிட்டிஷ் காலனிய ரௌலட் சட்டத்தை விடவும் மிகக் கொடூரமான சட்டமாக மாற்றப்படும் வார்த்தைகளாகும். இந்த வார்த்தைகளை பயன்படுத்திய கொடூர சட்டப் பிரிவுகளைப் பார்ப்போம்.

### பாரத நீதிச் சட்டம் பிரிவு 113

இந்திய ஒற்றுமை, ஒருமைப்பாடு, பாதுகாப்பு, இறையாண்மை, அல்லது பொருளாதார பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தினாலோ அல்லது அச்சுறுத்தலுக்கு வாய்பிருந்தாலோ தீவிரவாத செயல் என்று வரையறுக்கிறது. இதை புதிய பிரிவாக இணைத்திருக்கிறது.

### பாரத நீதிச் சட்டம் பிரிவு 152

வேண்டுமென்றே அல்லது தெரிந்தே, பேச்சிலோ அல்லது எழுத்திலோ, அல்லது அடையாளமாகவோ, அல்லது காணக்கூடிய வகையிலோ, அல்லது மின்னணு தகவல் தொடர்பு முறையிலோ பிரிவினைவாத நடவடிக்கைகளின் உணர்வுகளை ஊக்குவித்தல் இந்தியாவின் இறையாண்மை அல்லது ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கு ஆபத்தை ஏற்படுத்துகிறது என்று வரையறுக்கிறது.

### பாரத நீதிச் சட்டம் பிரிவு 197 (1)

எப்போதுமே மக்கள் மீது தவறாகப் பயன்படுத்தக்கூடிய மற்றொரு சட்டப் பிரிவு மிறிசி பிரிவு 153B, அதை தற்போது புதிய BNSS பிரிவு 197ஆக உருமாற்றப்பட்டுள்ளது. இதில் "இந்தியாவின் இறையாண்மை ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு அல்லது பாதுகாப்பிற்கு இடையூறு விளைவிக்கும் தவறான தகவல்களை உருவாக்குதல் அல்லது வெளியிடுதல்" என்று முந்தையச் சட்டத்தோடு "மின்னணு சாதனங்களின் வழியாகவும்" என்று கூடுதலாக சேர்க்கப்பட்டு தொடர்கிறது.

மேற்கண்ட மூன்று பிரிவுகளிலும் கருத்துகளை பரப்புதல், சட்டத்தின் மீதான நம்பிக்கைக்கு எதிராக பேசுதல், அதாவது சதி செய்தார்கள், தயாரித்தார்கள் என பொய்யாக தேசியவெறி கூச்சல் எழுப்பி பயங்கரவாதிகளாக சித்தரித்து சாய்பாபா முதல் எல்லோரையும் எப்படி சிறையிலடைத்து தண்டித்தார்களோ அதையே இப்போது இந்த பொது குற்றவியல் சட்டத்தின் மூலம் செய்யப்போகிறார்கள். இச்சட்டத்தின் படி சமூக ஊடங்களில் செய்யும் அரசியல் பரப்புரையை கூட உணர்வைத் தூண்டினார்கள், ஊக்குவித்தார்கள் என்று கூறி தண்டிப்பதற்கு இந்த தெளிவற்ற சொற்கள் பயன்படப் போகிறது. தேசத்தின் பாதுகாப்பு, தேசத்தின் இறையாண்மை ஆகியவை எல்லாம் பாசிசவாதிகள் வழக்கமாக எழுப்புகிற கோஷங்கள். அதாவது, மக்களை ஒடுக்குவதற்கும், அரசு பயங்கரவாதத்தை நியாயப்படுத்துவதற்கும் இந்த வார்த்தைகளையே கருவியாக பயன்படுத்தி வருகிறார்கள். இப்போது அந்த வார்த்தைகளுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**அரசு பயங்கரவாத சட்டமான ஊபா சட்டத்தின் மறு உருவமாக தண்டனைச் சட்டம்**

ஆள்தூக்கி சட்டமான ஊபா சட்டத்தில் உள்ள பிரிவு 18ஐ பாரதிய நீதிச் சட்டப் பிரிவு 113(3)ஆகவும், பிரிவு 19ஐ பிரிவு 113(6)ஆகவும், பிரிவு 20ஐ பிரிவு 113(5)ஆகவும், பிரிவு21ஐ பிரிவு 113(7)ஆகவும் வார்த்தைகளைக் கூட மாற்றாமல் அப்படியே கொண்டு வந்திருக்கிறது. ஊபா சட்டத்திலாவது ஒரு இயக்கத்தையோ அல்லது நபரையோ தீவிரவாத இயக்கம் என அறிவித்து பட்டியலிட வேண்டும். அதுபோன்ற முறைகளைக்கூட இச்சட்டம் வலியுறுத்த வில்லை. அதாவது ஒரு அமைப்பை பயங்கரவாத அமைப்பாக எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இச்சட்டத்தின் மூலம் சிறையிலடைக்க முடியும், தண்டிக்க முடியும். இது ஊபா சட்டத்தைவிட கொடிய சட்டமாக மாறப் போகிறது என்பதையே காட்டுகிறது.

**பாரதிய நீதிச் சட்டப் பிரிவு 113**

சமூகத்தின் வாழ்க்கைக்கு அவசியமான ஏதேனும் பொருட்கள் அல்லது சேவைகளை சீர்குலைத்தல், இந்தியாவில் அல்லது வெளிநாடு




களில் உள்ள இந்திய பாதுகாப்புக்கு பயன்படுத்தும் சொத்துக்களுக்கு இழப்பை ஏற்படுத்துதல்; அல்லது அரசு தேவைக்கு வைத்திருக்கும் சொத்துகளை அழித்தல், சேதத்தை உருவாக்குதல் போன்றவை பயங்கரவாதமாக சித்தரிக்கப் பட்டுள்ளது. அதாவது வழக்கமான மக்கள் போராட்டங்களை எல்லாம் பயங்கரவாத செயல்களாக மாற்றப்படும் ஆபத்தான பிரிவு இது.

அரசாங்கத்தின் ஏகாதிபத்திய-உள்நாட்டு கார்ப்பரேட் ஆதரவு திட்டங்களை கேள்விக் குட்படுத்தினால் அவர்களை தீவிரவாதிகளாக அறிவித்து இந்த சட்டத்தின் 113வது பிரிவின் மூலம் ஒடுக்க முடியும். எல்கர்பரிஷத் வழக்கில் பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், சிறைக்காவலில் இறந்த பாதிரியார் ஸ்டான் சுவாமி உட்பட மொத்தம் 16 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் பெரும்பாலனோர் இன்னும் கொடுஞ் சிறைக்குள்தான் இருக்கின்றனர். இந்த வழக்கில் இதுவரையில் யாருக்கும் தண்டனை வழங்கப்படாமலேயே அவர்கள் பலவருடங்களாக சிறைக்கொடுமைகளை அனுபவித்து வருகின்றனர்.

சமீபத்தில் எவ்வித ஆதாரமில்லாத நிலையில் தானே குற்றமற்றவர் என நிரூபித்து சாய்பாபா விடுதலையானார் என்பதே இந்த வழக்கின் நிலைமையை புரிந்துக்கொள்ள ஆதாரமாகும். ஆனால் 3,600 நாட்கள் பிணையில் வெளிவர முடியாத வகையில் பொய் வழக்கு போட்ட


vaigarai velicham official

வர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. பாதிக்கப்பட்ட இவருக்கு இழப் பீடும் இல்லை. இவ்வளவு கொடுமையான கருப்புச் சட்டமான ஊபா சட்டத்தின் பிரிவுகளை ஒரு முழு பிரிவில் அடக்கியிருக்கிறது. பாரதிய நீதிச் சட்டமல்ல, இது இந்துத்துவ அநீதிச் சட்டம்.

ஸ்ரீமதி படுகொலைக்காக நியாயம் கோரிய போராட்டம், என்.எல்.சி.க்கு எதிரான போராட் டம், விவசாயிகள் நடத்திய போராட்டம் போன்ற மக்கள் போராட்டங்கள் கூட இனி தீவிரவாதிகளின் செயல்கள் என்று மாற்றப் படலாம். இனி அரசாங்கத்தை எதிர்த்து போராடும் சாதாரண பொதுமக்கள் உள்ளிட்ட எவரும் தீவிரவாதியாக சித்தரித்து சிறையி லடைக்கப்படலாம். அசாதாரணமான சூழ்நிலை எப்போதும் இந்தியாவில் நிலவிக் கொண்டிருப்பதாக கருத்துருவை உருவாக்கி அவர்களை அச்சுறுத்தல் மனநிலையிலேயே வைக்கப்படவே இந்த பிரிவு ஆளும் வர்க்க த்திற்கு தேவைப்படுகிறது.

பிரிட்டிஷ் காலனிய ஆட்சியில் கொண்டு வந்த இதச பிரிவு 124ஏ, புதிய காலனிய பாரதிய நீதிச் சட்டப் பிரிவு 152ல் தேசத் துரோக குற்றமாக ஒப்பனை மாற்றம்

பிரிட்டிஷ் காலனிய ஆட்சியில் இந்திய தண்டனைச் சட்டத்தில் ராஜதுரோக சட்டம் 124ஏ கொண்டுவரப்பட்டது. அன்று சுதந்திரத் திற்காக போராடியவர்களை அடக்குவதற்கு கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம், அதிகார மாற்றத்திற்குப் பிறகும் புதிய காலனிய ஆட்சி யிலும் தொடர்கிறது. 2019ம் ஆண்டில் மட்டும் 96 வழக்குகளை எதிர்கட்சிகளை ஒடுக்குவதற்கு இதை பயன்படுத்தியுள்ளது. கொரோனா காலத்தில் மோடி ஆட்சியின் அவலங்களை வெளியிட்ட டெல்லி பத்திரிகையாளர் வினோத் துவா, உத்திரபிரதேசத்தில் நடந்த பாலியல் வன்கொடுமை குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற சித்திக் காப்பான் ஆகியோரின் மீது பாய்ந்த தேச துரோக வழக்குகள் எந்தளவுக்கு பாசிச சட்டமாக பயன்படுத்தப்பட்டது என்பதை அனைவரும் அறிவர்.

மே 2022ஆம் ஆண்டு அன்றைய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் தலைமையி லான மூன்று பேர் கொண்ட அமர்வு பட்கரே எதிர் ஒன்றிய அரசு (S.G. VOMBATKERE Versus UNION OF INDIA) என்ற வழக்கில் 124ஏ தேசத் துரோக பிரிவை, அடுத்த உத்தரவு வரும் வரை அமல்படுத்தக் கூடாது என நிறுத்தி வைத்துள்ளது. ஆனால் அந்த தீர்ப்பை கேலிக் கூத்தாக்கும் வகையில் அமித்ஷா, “இந்த மூன்று புதிய மசோதாக்கள் இந்திய சிந்தனையின் அடிப்படையிலான நீதி அமைப்பை நிறுவ முயல்கின்றன...

முன்மொழியப்பட்ட மூன்று குற்றவியல் சட்டங்கள் காலனித்துவ மனநிலையிலிருந்தும் அதன் சின்னங்களிலிருந்தும் மக்களை விடு விக்கும்” என்று மக்களவை குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதாக்களை நிறைவேற்றும் முன் கூறினார். காலனிய சட்டத்தை முற்றிலும் நீக்குவதாக இந்த சட்டத்தை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தபோது உள்துறை அமைச்சர் அமித்ஷா வாய்கூசாமல் பொய் பேசினார். அதற்கு மாறாக கொல்லைப்புறத்து வழியாக 124ஏ பிரிவையே புதிய சட்டத்தில் 152வது பிரிவாக கொண்டு வந்துள்ளது. இது மக்களை ஏமாற்றுவது மட்டுமல்ல நீதிமன்றத்தையும் அவமதிக்கும் செயலாகும்.

124ஏ பிரிவானது “அரசாங்கத்தின் மீது வெறுப்பு அல்லது அவமதிப்பை ஏற்படுத்தினால் அல்லது ஏற்படுத்த முயன்றால் அல்லது அவநம்பிக்கையைத் தூண்டினால் அல்லது தூண்ட முயன்றால்” என்பதைத்தான் தேசத் துரோக குற்றமாக வரையறுத்திருக்கிறது. இப்பிரிவை ஒழித்துவிட்டதாகக் கூறி வேறு வார்த்தைகளில் கொண்டுவரப்பட்ட புதிய BNSS சட்டப் பிரிவின்படி, ‘நாசகார நடவடிக் கைகள்’, ‘பிரிவினைவாத நடவடிக்கைகளின் உணர்வுகளை ஊக்குவித்தல்’, இந்தியாவின் இறையாண்மை அல்லது ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கு ஆபத்தை ஏற்படுத்துவது... மின்னணு தகவல்தொடர்பு அல்லது நிதி வழியைப் பயன்படுத்துதல்...” ஆகிய வார்த்தை களை கூடுதலாக சேர்த்துள்ளது. இதில் எந்த வார்த்தைகளுக்கும் தெளிவான வரையறை யில்லை. முந்தைய சட்டத்திலாவது குறைந்த பட்ச தண்டனையாக 3 வருடம் என இருந்தது. அதையும் இன்னும் கொடூரமாக புதிய சட்டத்தில் 7 வருடமாக உயர்த்திவிட்டது.

அதிகபட்ச தண்டனையாக மரண தண்டனை புதிய சட்டத்திலும் தொடர்கிறது.

அமித்ஷா சொல்வது போல் எந்த காலனிய சட்டமும் நீக்கப்படவில்லை. அவற்றை புதிய காலனிய சொல்லாக்கத்தில் நிரப்பியிருக்கிறார் என்பதே அந்த மாற்றம். இதைத்தான் இவர்கள் இந்தியமயம் என்கிறார்கள். அவர்களின் வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால் மேக் இன் இந்தியா என்றுதான் சொல்ல வேண்டும்.

மதவெறியர்கள் செய்தால் கொலையல்ல என்கிறது கும்பல் கொலை பற்றி பாரதிய நீதிச் சட்டப் பிரிவுகள் 103(2) மற்றும் 117(4) (BNS)

கும்பல் கொலை பிரிவு 103(2), BNS அல்லது ஒரு குழுவால் ஏற்படுத்தப்படும் கடுமையான காயத்திற்கான (பிரிவு 117(4), BNS). கும்பல் கொலை பற்றிய பிரிவில் "ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் கும்பல் கொலை குற்றத்தில் இனம், சாதி அல்லது சமூகம், பாலினம், பிறந்த இடம், மொழி, தனிப்பட்ட நம்பிக்கை அல்லது வேறு ஏதேனும் அதை ஒத்த காரணங்கள் அடிப்படையில் ஒன்றாக செயல்பாட்டால்" என்ற வரையறை வைக்கப்பட்டிருக்கிறது. இதில் மதம் என்ற வார்த்தையை திட்டமிட்டு தவிர்த்திருக்கிறார்கள். அதாவது மதவெறியை வெளிப்படையாகக் குறிப்பிடுவதை இந்துத்துவ அநீதிச் சட்டத்தில் தவிர்திருக்கிறார்கள். இந்த சட்டத்தின் மூலம் சங்பரிவாரின் குஜராத், மணிப்பூர் போன்ற மதவெறி கொலைகளை அரங்கேற்றுவதற்கு பாதுகாப்பை கொடுக்கின்றது இந்தச்சட்டம்.

### பெண்களின் மீதான வன்முறை தொடுப்பவர்களுக்கும், லவ் ஜிகாதிகளுக்கும் பாதுகாப்பு கொடுக்கிறது

உச்சநீதிமன்றம் மற்றும் சட்ட ஆணையத்தால் பலமுறை சுட்டிக் காட்டப்பட்ட கணவனால் செய்யப்படும் பாலியல் வன்புணர்வு குற்றத்தை தடுக்க இந்த பிற்போக்கு மதவாதிகள் மாற்றம் கொண்டுவரத் தயாரில்லை. அதே நிலையே புதிய சட்டத்தில் நீடிக்கிறது. ஆனால் உலகெங்கிலும் சுமார் 150 நாடுகளில் கணவனால் பெண்களுக்கு இழைக்கும் பாலியல் கொடுமையை குற்றமாக மாற்றப்பட்டிருக்கிறது. 77 நாடுகளில் அது சட்டமாகவும் மாற்றப்பட்டிருக்கிறது. பாரதிய நியாய சன்ஹிதா என்ற புதிய சட்டம் பெண்களை சமமாக நடத்துவதை மறுக்கிறது. அதே போல் அவர்களுக்கு அவர்களின் உடலின் மீதான உரிமையை மறுக்கிறது, அவர்களின் சுயமரியாதையை ஏற்கவில்லை.

இப்புதிய சட்டத்தில் (BNSS) "மோசடி செய்தோ அல்லது வஞ்சக வழிமுறைகளிலோ... அடையாளத்தை மறைத்து... திருமணம் செய்து கொள்வது" (பிரிவு 69) குற்றமாக்கப்பட்டிருப்பது பெண்களின் வாழ்க்கைத் துணை தேர்வு உரிமையை மறுக்கும் உள்நோக்கோடுதான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இங்கு பாலினம், சாதி, நம்பிக்கை அல்லது மதம் போன்ற எதுவொன்றும் வஞ்சகமான முறையில் மறைத்தல் என்ற குற்றத்திலேயே சேரும். இளைஞர்களின் சுதந்திரமான இணைத் தேர்வை இது முற்றிலுமாக ஒழித்துக் கட்டும். காதல் திருமணங்களை குற்றமாக இது மாற்றும் அல்லது மாற்றப்படும். காதல் திருமணங்கள் செய்துகொள்பவர்களை ஆதிக்க சாதி வெறியர்களும், இந்துத்துவ மத வெறியர்களும் ஆணவப் படுகொலைகளை நாடு முழுவதும் செய்துகொண்டிருக்கும் நிலையில் இந்தச் சட்டம் அவர்களுக்கு சட்ட பாதுகாப்பை வழங்குகிறது. சங்கிகளின் லவ் ஜிகாத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த திருத்தம் வழி செய்திருக்கிறது. பெண்கள் சுயமாக வாழ்க்கைத்துணையை தேர்வு செய்து திருமணம் செய்து கொள்வது என்பதன் அடிப்படையையே இது தகர்க்கிறது.

திருமணத்திற்கு முன்பும், அதற்குப் பின்பும் பெண்களை ஆண்களின் சொத்தாகவே கருதுவதும், அவர்கள் ஆண்களின் அதிகாரத்திற்கு உட்பட்டு வாழ மட்டுமே அனுமதிக்கிற ஆணாதிக்கத்தை நிலைநாட்டுகிற சட்டங்களாகும்.

### உண்ணாவிரதப் போட்டத்தை குற்றமாக மாற்றியுள்ளது

அகிம்சை போராட்டம் என அறியப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் (பிரிவு 226) அரசுக்கு எதிரான குற்றமாக தண்டிக்க வழிவகை செய்துள்ளது. தற்போதுள்ள இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 309ல் உள்ளதை பாரதிய நீதிச் சட்டம் பிரிவு 226 மாற்றியும் கூடுதலாக. "அரசு ஊழியரை சட்டப்படியான கடமையை செய்யவோ அல்லது தடுக்கும்


vaigarai velicham official




நோக்கத்துடனோ தற்கொலைக்கு முயற்சிக்கும் எவரும்" என்ற வார்த்தைகளை சேர்த்து அரசுக்கு எதிரான குற்றமாக மாற்றப்பட்டிருக்கிறது. ஒருவர் தற்கொலை செய்துகொள்ள முயற்சிப் பதைக் கூட அரசுக்கு எதிரானது எனக் கருதும் இந்த ஆளும் வர்க்கத்தின் இரக்கமற்ற ஆன்மாவை புரிந்துகொள்ள முடியும்.

தற்போதுள்ள குவிமு சட்டம், சங்கமாக ஓர் இடத்தில் கூடி அரசியல் இயக்கமாக இயங்கு வதை, சட்டவிரோதமாக கூடுவதாக கருதி தடுப்பதற்கும், அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் பிரிவுகள் 154-156ஐ கீழ் அதிகாரம் வழங்கியிருக்கிறது. இந்த எதேச்சதிகார சட்டப் பிரிவை நீக்குவதற்கு மாறாக அதை அப்படியே பிரிவு 193 (BNSS) ஆக மாற்றிகொண்டு வந்திருக்கிறது. எந்தவொரு குற்ற செயலும் நடக்கவில்லை என்றாலும், தனது சொந்த நிலத்தில் கூடும் அரசியல் உரிமையைக் கூட இச்சட்டம் தடுக்கிறது. அது புதிய சட்டத்திலும் தொடர்கிறது.

### குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்ட கருணை மனு மீது நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யும் உரிமை பறிக்கப்பட்டுள்ளது

இந்த பாசிச கொடுங்கோலர்களால் தண்டிக் கப்பட்ட பின்பும் தண்டனையிலிருந்து தப்பித்து உயிர்வாழ கருணை மனு கொடுப்பதற்கு கூட கால நிர்ணயம் செய்துள்ளது. தூக்குத் தண்டனை கைதிகள் கருணை மனுவை கவர்னரிடம் 30 நாட்களுக்குள்ளும், அம்மனு நிராகரிக்கப் பட்டால் குடியரசுத் தலைவரிடம் 60 நாட்களுக்குள்ளும் அளிக்கப்பட வேண்டும். குடியரசுத் தலைவர் எந்த கருத்தும் தெரிவிக் காமல் கிடப்பில் போட்டாலும் அதை எதிர்த்து நீதிமன்றத்தில் முறையீடு செய்ய முடியாது. அந்த கருணை மனு மீது எவ்வளவு காலத்திற்குள் பதில் அளிக்க வேண்டும் என்பதற்கு எந்த வரையறையும் இச்சட்டத்தில் இல்லை. மரண தண்டனையை விட மரணம் ஏற்படப் போகிறது என்ற அச்சத்துடன் வாழும் கொடூரமான நிலையை உருவாக்கியிருக்கிறது. இந்த சட்டத் தில் பல குற்றங்களுக்கு உச்சபட்ச தண்டனை மரண தண்டனையாக மாற்றிய நிலையில் இது மன்னர் காலத்து சட்டத்துக்கு ஒப்பாக பழிவாங்கும் தண்டனை முறைமையாகவே அமையும். புதிய சட்டப்படி பேரறிவாளன் உட்பட எழுவர் விடுதலை என்பது சாத்தியமே ஆகியிருக்காது. இதன் பொருள் அரசியல் கைதிகள் பொய்யாக புனையப்பட்ட வழக்கில் எப்போதும் அரசு பயங்கரவாதத்தால் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டே இருப்பார்கள்.

பாரதீய நகரிக் சுரக்ஷா சன்ஹிதா - BNSS (பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம்) என்ற பெயரில் காவல்துறையே அனைத்தையும் தீர்மானிக்கும் அதிகாரம்

புதிய குற்றவியல் சட்டம் ஏற்கெனவே இருந்த மாநில உரிமைகளையும் பறித்துள்ளது

தற்போது உள்ள குற்றவியல் விசாரனை நடைமுறைச் சட்டத்தில் (CrPC) தண்டனைகள் வழங்கப்பட்ட பிறகு மாநில அரசு அதை மாற்றும். குறிப்பாக மரண தண்டனை வழங்கப் பட்டிருந்தால் அதை மாற்றி விடுதலைகூட செய்வதற்கான அதிகாரம் இருந்தது (பிரிவு 433). ஆனால் இந்த புதிய சட்டம் BNSS பிரிவு 475ன் படி ஆயுள் தண்டனையாக மட்டுமே மாற்ற முடியும். அதுமட்டுமல்ல, முன்பு ஆயுள் தண்டனை மற்றும் கொடுஞ்சிறை ஆகிய தண்டனையை அபராதமாக மாற்றி விடுதலை செய்வார்கள். ஆனால் இனி இந்த தண்டனை களை அபராதமாக மாற்றி விடுதலை செய்ய முடியாது.

இந்த தண்டனையை மாற்றுவதை மட்டு மல்ல அதை செயல்படுத்துவதற்கான அதிகாரத் தையும் பறித்திருக்கிறது. தற்போது உள்ள CrPC பிரிவு 435ன் படி தண்டனைகளை நிறுத்தி வைத்தல், தள்ளுபடி செய்தல், மாற்றியமைத்தல் ஆகிய அதிகாரங்களை, மாநில அரசு மத்திய அரசுடன் ஆலோசனையை (Consultation) மட்டும் செய்துவிட்டு செயல்படுத்தியது. ஆனால், புதிய BNSS பிரிவு 477ன் படி மத்திய

அரசு உடன்பட்டால் (Concurrence) மட்டுமே இனி மேற்கண்ட அதிகாரத்தை செயல்படுத்த முடியும். அதாவது ஏற்கெனவே இருந்த மாநில அரசின் அதிகாரத்தையும் பறித்திருக்கிறது இச்சட்டம்.

தற்போதைய இந்த அதிகாரத்தின் கீழ்தான் பேரறிவாளன் உட்பட எழுவர் விடுதலை சாத்தியமானது. இப்படிப்பட்ட மாநில அதிகாரத்தை மாநில அரசுகளின் சட்டமன்ற விவாதங்கள், அல்லது மாநிலங்கள் அவையில் கூட விவாதம் இல்லாமல் மாற்றி இருப்பது கூட்டாட்சி என்பதெல்லாம் வார்த்தை ஜாலம் என்பதை நிரூபித்திருக்கிறது. இதை எதிர்த்து போராட எந்த மாநில அரசும் தயாரில்லை. தமிழக கட்சிகளான திராவிடக் கட்சிகளும் வாய்மூடி மவுனியாக இருக்கிறது.

மக்களை கைவிலங்கிட்டு விலங்கினும் கீழாக நடத்த அதிகாரமளிக்கும் BNSS பிரிவு 43(3)

கைவிலங்கு பயன்படுத்துவது முன்பு மனித உரிமையை பறிப்பதாக பார்க்கப்பட்டது. கைதிகளை மனிதர்களாக நடத்தாமல் இழிவாக நடத்துவதாக கருதப்பட்டது. ஆனால் புதிய சட்டத்தில் கைவிலங்கு பூட்டுவது இனி காவல் துறையின் உரிமையாக கருதப்படும். சுனில் பத்ரா (1980) வழக்கில் உச்ச நீதிமன்றம் கைவிலங்கிடுவது அரிதிலும் அரிதான வழக்கில் மட்டுமே கைவிலங்கிட வேண்டும் என்ற வழங்கிய தீர்ப்பு தற்போது செல்லாகாசாக்கி விட்டது இச்சட்டம்.

கைவிலங்கிடும் அதிகாரத்தை எந்த சூழ்நிலையிலும் சிறை உட்பட எவ்விடத்திலும் கூடாது என்றும், தப்பித்து போகும் கைதிகள் என தெரிந்தால் நீதிமன்றத்தின் அனுமதி பெற்று கைவிலங்கிடலாம் என மாலிமத் கமிட்டி பரிந்துரைத்த மாற்றத்திற்கு எதிராக இச்சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

விசாரணை என்ற பெயரில் முதல் தகவல் அறிக்கை பதியாமலேயே காவல் நிலையத்தில் அடைத்து வைக்கும் அதிகாரம்

முதல் தகவல் அறிக்கை பதிதல் (பிரிவு 173 BNSS). தற்போது ஜீரோ FIR என்ற புதிய முறையை உருவாக்கியிருக்கிறார்கள். 3லிருந்து 7வருடம் வரையிலான தண்டனை உடைய குற்றங்களுக்கு முதல் தகவல் அறிக்கை பதியாமலேயே குற்றம் நடந்திருக்கிறதா என விசாரணை நடத்த 14 நாட்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதுவரையில் அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இது லாக் அப் கொடுமைகள் அதிகரிக்கவும், அதனால் ஏற்படும் லாக் அப் மரணங்கள் நடக்கவுமே வழிவகை செய்துள்ளது.

எந்தவொரு நபரையும் காவல்நிலையத்தில் அடைத்து வைக்கும் அதிகாரத்தை (பிரிவு 170) காவல்துறைக்கு வழங்கியுள்ளது. அதாவது கைது செய்யாமலேயே காவல்நிலையத்தில் 24 மணி நேரத்திற்கு அவர்கள் வசமே தடுத்து வைத்துக் கொள்ளலாம். ஏற்கெனவே யாரை வேண்டுமென்றாலும் விசாரணை என்ற பெயரில் சட்டவிரோதமாக காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று பல நாட்கள் விடாமல் சித்தரவதை செய்கிறார்கள். இப்போது 14 நாட்கள் விசாரணை என்ற பெயரிலேயே புகாரை காவல் அதிகாரி வைத்திருக்க முடியும் என்பதோடு ஒப்பிட்டுப் பார்த்தால் காவல் துறைக்கு வழங்கப்பட்டுள்ள கொடிய ஆயுதத்தை புரிந்துகொள்ள முடியும்.

**கைது செய்யப்படவர்களை போலீஸ் காவலில் எடுக்கும் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.**

போலீஸ் காவலில் வைத்து விசாரிக்கும் காலத்தை (பிரிவு 167 CrPC) நடைமுறையில் இருக்கும் 15 நாட்களுக்குள் எடுத்து விசாரித்து விட வேண்டும். மிக கொடுங் குற்றத்திற்கு கூட மொத்த காலத்தை 15 நாட்களுக்குள் இருக்கவேண்டும். ஆனால் புதிய சட்டத்தில் (பிரிவு 187 BNSS) போலீஸ் காவலில் எடுத்து விசாரிப்பதை 40-60 நாட்கள் வரை நீட்டித்து



அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. குற்றத்திற்கு தகுந்தாற் போல் 2-3 மாதம் என இருந்ததை 4 மாதம் வரை நீட்டித்துள்ளது. எப்போதுமே அச்சத்தின் பிடியில் வைத்திருக்கவே போலீஸ் அதிகாரம் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக செந்தில் பாலாஜி, அரவிந்த் கேஜ்ரிவால் உட்பட எதிர்கட்சிகள் மீது போடப்பட்ட பல வழக்குகள் போலீஸ் காவலில் எடுத்து அவர்களுக்கு அழுத்தம் கொடுப்பதற்கே ஆளும் கட்சிகள் பயன்படுத்துகிறது. அறிவியல் முறையை பயன்படுத்தி விசாரணை செய்வதற்கு மாறாக துன்புறுத்தி வாக்குமூலம் பெறவே இது போன்ற அதிகாரங்கள் பயன்படுத்தப்படுகிறது.

**குற்றப்பத்திரிகையை குறித்த காலத்தில் தாக்கல் செய்யாதபோது மறுக்க முடியாத பிணை உரிமையை இச்சட்டம் 4 மாத காலம் நீட்டிக்கிறது**

முந்தைய சட்டத்தில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்ய குற்றத் தன்மையை பொறுத்து 60 அல்லது 90 நாட்கள் கால அவகாசம் கொடுக்கப்பட்டது. புதிய சட்டத்தின் கீழ், குற்றப்பத்திரிகையை 90 நாட்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும், விசாரிக்க மேலும் 30 நாட்களுக்கு நீதிமன்றம் நீட்டிக்க முடியும். குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கான காலம் 90 நாட்களுக்கு மேல் நீட்டிக்கும் அதிகாரத்தையும் (பிரிவு 193ன் படி) இதில் கொடுக்கப்பட்டுள்ளது. எவ்வளவு காலம் வரையில் நீட்டிக்கலாம் என வரையறை செய்யவில்லை. குறிப்பிட்ட காலத்திற்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லை என்றால் சட்டப்படியாகவே மறுக்கமுடியாத பிணை உரிமையின் அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும். ஆனால் புதிய சட்ட வரைவு பிணை உரிமையை மறுத்து பிணையில் விடாமல் 4 மாதம் வரை சிறையில் வைத்திருக்க முடியும் என்கிறது. இது ஊபா, குண்டாஸ், தேசிய பாதுகாப்புச் சட்டம் போன்ற சிறப்புச் சட்டங்களில் இருந்ததை பொதுச் சட்டத்திற்கு கொண்டுவந்திருக்கிறது. மக்கள் எல்லோரையுமே பயங்கரவாதிகளாகவும், அச்சுறுத்தலாகவும் கருதுகிறது. காரணம் இன்றைய பாசிச ஒடுக்குமுறை சட்டத்தில் அவர்களை எதிர்த்துப் போராடுபவர்களை சிறையிலடைத்தே இவர்களின் அதிகாரத்தை தக்கவைக்க வேண்டியிருக்கிறது.

**தனி மனித உரிமையை சட்டப்படியே பறிக்கும் அதிகாரம்**

குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டால் மட்டுமே அவரிடம் உயிரியல் மாதிரிகள், கைரேகைகள் ஆகியவை சேகரிக்க முடியும். ஆனால் இப்போது நீதித்துறை நடுவர், குற்றவியல் BNSS சட்டப் பிரிவு 349 படி கைது செய்யப்படாத சூழ்நிலையிலும் எவரிடமிருந்தும் கட்டாயப்படுத்தி கையெழுத்து, கைரேகை, குரல் மாதிரி ஆகியவற்றை பெற முடியும். இது முற்றிலும் ஆபத்தானது. தனி நபர் உரிமையை பாதிக்கக் கூடியது. குற்றவியல் ஆளறி அடையாளச் சட்டம், 2022ன் படி காவல்துறை துணை ஆய்வாளரே கைது செய்யாமல் சந்தேகத்தின் பேரிலேயே உயிரியல் மாதிரிகளைப் பெற அதிகாரம் உண்டு. மறுத்தால் கைது செய்து சிறையிலடைக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் குற்றவியல் சட்டங்களில் கட்டாயமாக பெறப்படுகின்ற தகவல்களை பாதுகாப்பதற்கு மாறாக அவற்றை பொது நோக்கத்திற்கு என்ற வரையறையின் கீழ் அனைவருக்கும் பகிர்வதற்கு தகவல் பாதுகாப்பு சட்டம் வழிவகை செய்கிறது.

காவல்துறை கட்டுப்பாட்டு அலுவலகத்திற்கு வெளியே கைது செய்யப்பட்ட நபர்களின் தகவல்களை அறிவிப்பு பலகையில் அறிவிப்பு செய்ய வேண்டுமென்ற தற்போதைய குவிமுச சட்டப் பிரிவு 41C சட்டப் பிரிவில் கூறியுள்ள வார்த்தையோடு டிஜிட்டல் முறையிலும் பட்டியலிடவேண்டும் எனவும் புதிய BNSS சட்டப் பிரிவு 37 கூறுகிறது. இது முற்றிலுமாக தனி மனித உரிமையை ஒழித்து வழக்கு பதிவு செய்த ஒரே காரணத்திற்காக அவர்களை அவமானப்படுத்தி மன உளைச்சலுக்கு ஆளாக்குகிறது. வங்கிகளில் கடன் தராதவர்களின் பட்டியலை வெளியிட்டதால் தற்கொலை செய்துகொண்ட நிகழ்வுகளை நாம் யாவரும் அறிந்ததே. அதே போன்றதொரு நிலையை இப்பிரிவு உருவாக்கியிருக்கிறது. இதை நீக்குவதற்கு மாறாக அதை உலகறியச் செய்ய டிஜிட்டல் வடிவிலும் செயல்படுத்த முனைந்திருக்கிறது.

யூனியன் ஆஃப் இந்தியாவுக்கு எதிராக புட்டசாமி தொடுக்கப்பட்ட (2017) வழக்கில், "குடிமக்களின் தனியுரிமையை பாதுகாப்பதற்கு

அவரின் தனி மனிதத் தகவலை திருடப்படும், கசிவு ஆகும் சூழ்நிலையில், காப்பதிலிருந்து மீறப்படுவதோ அல்லது சேதப்படுத்தப்படுவது போன்றவற்றிலிருந்து பாதுகாப்பதற்கு, நமது உள்கட்டமைப்பு வலுவாகவும் பிரமாண்ட மாகவும் இருக்க வேண்டும். இதில் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகும் பட்சத்தில் அது தனியுரிமைக்கான உரிமையை மீறுவதற்கு சமம்" என்று உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியிருந்த போதிலும் அதை ஒரு துளியும் அக்கறைக் கொள்ளவில்லை இச்சட்டம்.

இந்த மூன்று குற்றவியல் சட்டங்களோடு "குற்றவியல் ஆளறி அடையாளச் சட்டம் 2022" (ஆகஸ்ட் 2022லேயே நடைமுறைக்கு வந்து விட்டது) "டிஜிட்டல் தனிநபர் தகவல் பாது காப்புச் சட்டம் 2023" (ஆகஸ்ட் 2023ல் கொண்டுவரப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவர அறிவிப்பு செய்ய வேண்டிய தயார் நிலையில் இருக்கிறது) ஆகிய இரண்டு சட்டங்களையும் இணைத்துப் பார்க்கவேண்டும். இந்த சட்டங்கள் அனைத்துமே குற்றவியல் சட்டங்களின் ஒரு அங்கமாக மாறுகிறது. தற்போது கொண்டுவந்துள்ள டிஜிட்டல் தகவல் பாதுகாப்புச் சட்டமானது அரசு முகமைகளுக்கு விதிவிலக்கு வழங்கியிருக்கிறது. இது தனியார் நிறுவனங்கள் தனிநபரின் தகவல்களை தவறாகப் பயன்படுத்துவதை கட்டுப்படுத்தும் பிரிவுகள் இல்லை. இவை அனைத்தும் தனி நபர் உரிமையை பறிப்பதாக உள்ளது. அது தகவல்களை பாதுகாப்பதற்கு மாறாக வணிக மயப்படுத்தியிருக்கிற சூழ்நிலையில் எந்த தனிமனித உரிமையும் இல்லாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சூழ்நிலையில் காவல்துறையும், நீதித்துறையும் தனி மனித உயிரியல் மாதிரிகளை எவரிடமிருந்தும் எளிதாக பெறுவதற்கு வழிவகுத்துள்ளது என்பது இந்த நாட்டு மக்களை மனிதர்களாகவே நடத்த தயாரில்லை. டிஜிட்டல் எண்களாக பாவிக்கிறது என்பதே.

**எதேச்சதிகார விசாரணை முறையும், சொத்துகளை முடக்கிவைத்தலும் பறிமுதல் செய்தலும்**

காவல் விசாரணை அனைத்தையும் வீடியோ பதிவாக செய்ய வேண்டும் (பிரிவு 176(3). 7 வருடங்களுக்கு மேல் தண்டனை உள்ள வழக்கு களில் தடவியல் நிபுணர்களின் அறிக்கையும் கட்டாயமாக தாக்கல் செய்யப்பட வேண்டும், கைப்பேசியில் காட்சிப் பதிவு செய்து தாக்கல் செய்யலாம் என்று இந்த சட்டம் கூறுகிறது. குற்றம் சாட்டப்பட்டவர்களை அச்சுறுத்தி நடிக்க வைத்து பதிவுசெய்யப்படும் வீடியோக்கள் மற்றும் மிரட்டி பெறும் வாக்குமூலங்களை ஆதாரங்களாக கொண்டே அவர்களை தண்டிக்க வழிவகை செய்துள்ளது.

அதைவிட கொடிய சட்டப்பிரிவு காவல் துறையிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதல் தகவல் அறிக்கை பதிந்துவிட்டாலே சொத்துக் களை பற்றுகை செய்வதற்கும், பறிமுதல் செய்வ தற்கும், அதை முடக்கி வைப்பதற்கும் காவல் துறைக்கு எல்லையில்லா அதிக்காரம் வழங்கப் பட்டிருக்கிறது (பிரிவு 107). தேடப்படும் குற்றவாளி என அறிவித்துவிட்டால் அவர்களின் சொத்துக்களை பற்றுகை செய்வதற்கு பிரிவு86 BNSS அதிகாரம் வழங்கியிருக்கிறது. இந்த பாசிச ஆட்சியில் எவரெல்லாம் இந்த ஆட்சியை எதிர்த்து கேள்வி எழுப்பினார்களோ அவர்களின் வீடுகளையெல்லாம் புல்டோசர் கொண்டே அகற்றப்பட்டது. இப்படிப்பட்ட சொத்துக்களை சூறையாடும் புல்டோசர் ஆட்சியில் இது போன்ற காவல்துறை அதிகாரம் இவர்கள் செய்யும் அனைத்து பாசிச நடவடிக்கைக்கு சட்ட அங்கீகாரம் கொடுப்பதாக மாற்றி-யிருக்கிறது. இந்த பிரிவானது அரசியல் சட்டம் வழங்கியுள்ள சொத்துக்கள் மீதான உரிமையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

**குற்ற வழக்குகளிலும் இனி ஒரு தலைபட்ச விசாரணை முறையில் தீர்ப்புகள் வழங்கப்படும் (பிரிவு 356)**

மிக உச்சபட்சமாக பிரிவு 356ன்படி, குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்திற்கு வராத போதும் விசாரணை செய்து தண்டனை வழங்க முடியும். விசாரணையைத் தவிர்ப்பதற்காக தலைமறைவாகி விட்டால், உடனடியாக அவரைக் கைது செய்வதற்கான வாய்ப்பு இல்லை என்ற நிலையில் அத்தகைய நபர் நேரில் ஆஜராகி வழக்கு நடத்துவதற்கான உரிமையை மறுக்கிறது. வழக்கறிஞரை அமர்த்திக்கொள்ளும் உரிமையும் இதில் சேர்ந்தே பாதிக்கப்படும். தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்க எந்த சட்டரீதியான வரையறையையும் உருவாக்க



vaigarai velicham official

வில்லை. பெரும்பாலும் காவல்துறை குற்றவாளிகளை தேடாமலேயே தேடப்படுகின்ற குற்றவாளி என்று அறிவித்துவிடும். இனி புதிய சட்டத்தின் கீழ் விசாரணை நடத்தி தீர்ப்பும் வழங்கலாம் என்றால் எல்லோரும் காவல் துறையால் தண்டிக்கப்படும் நிலையே உருவாகும். குறிப்பாக பல்வேறு இடங்களில் தனது உரிமைகளுக்காக மக்கள் போராடு கிறார்கள். அவர்கள் மீது கொத்தாக வழக்கும் பதிவு செய்யப்படுகிறது. பிறகு அதில் விசாரணை நடத்தியதாக கூறி நீதிமன்ற விசாரணக்கும் வருகிறது. எப்போதோ நடந்த அந்த போராட்டத்தில் பங்கெடுத்தவர்கள் அதன்பிறகு எங்கு குடியிருப்பார்கள் என்று தெரியாது. ஆனால் அவர்கள் அங்கு இல்லை என்று கூறி அவர்களை தேடப்படும் குற்றவாளியாக அறிவிப்பார்கள். நீதிமன்றத்தில் நீதிபதியும் காவல்துறையும் மட்டுமே கூட்டு சேர்ந்து விசாரணை நடத்துவார்கள். தனக்கு தோதான சாட்சிகளை நிறுத்தி தண்டனையும் வழங்கி விடுவார்கள். இவை அனைத்தும் இதில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு தெரியாது. தண்டனை உறுதி செய்யப்பட்டப் பிறகு சுலபமாக தேவைப் படும் நேரத்தில் தேடி சிறையில் அடைத்து விடுவார்கள். இதுபோன்ற பயங்கரத்தை நினைத்துப் பார்த்தால் பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தை விட இன்றைய புதிய காலனிய தாசர்களின் அடக்குமுறைகள் மிக பயங்கரமாக இருக்கிறது. இது அரசு பயங்கரவாதத்தின் உச்சம்.

**பாரதீய சாக்ஷ்ய அதிநியாம் என்ற சாட்சியச் சட்டம் கருப்புச் சட்டங்களின் நகலாக மாறிவிட்டது.**

**டிஜிட்டல் மற்றும் வீடியோ பதிவுகள் முதல்நிலை சாட்சியாக மாற்றப்பட்டுள்ளது**

காவல்துறை புகார் பதிவிலிருந்து, குற்ற விசாரணை, வழக்கு விசாரணை என அனைத்து விசாரணைகளும் இனி வீடியோ கான்பரன்சிங் முறையில் செய்ய முடியும். மின்னணு வடிவில் தயாரிக்கப்படும் வீடியோ பதிவில்லாமல் எதுவும் செல்லாது என்று சொல்லப்பட்டாலும், பாரதிய சாட்சிய அதிநியாயம் மூலம் மட்டுமல்ல அதிலிருந்து பெறப்படும் அனைத்து ஆவணங்களையும் முதல்நிலை சாட்சியமாக மாற்றியுள்ளதே ஆபத்தானது. ஏற்கெனவே கைது செய்யப்படுபவர்களிடமிருந்து எப்படி வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படுகிறது என்பதை நன்கு அறிவோம். செயற்கை நுண்ணறிவைப் (AI) பயன்படுத்துவதன் மூலம் தவறான சான்றுகள் உருவாக்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது. இந்நிலையில் இரண்டாம் நிலை சான்றுகளாக ஏற்பதற்கு கூட உண்மைத் தன்மைக்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இதன் பொருள் அது முதல்நிலையிலேயே சான்றாக ஏற்கப்படும். அதை மறுக்க வேண்டுமென்றால் அதை குற்றம் சாட்டப் பட்டவரே அது போலியானது, புனைவாக உருவாக்கப்பட்டது என நிருபிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். இதை பயங்கரவாதச் சட்டத்தின் இன்னொரு பதிப்பாக மாற்றியுள்ளது பாசிச மோடி அரசு.

2021 பிப்ரவரியில், ரோனா வில்சனின் லேப்டாப்பில் மோடியை கொல்ல சதித் திட்டம் தீட்டிய கடிதக் கோப்பு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக பாசிச பாஜகவின் ஏஜென்சியான என்ஐஏ கூறியது. அதை ஆய்வு செய்த போது வில்சனின் கணினியிலேயே இல்லாத மைக்ரோசாப்ட் வேர்டின் புதிய பதிப்பைப் பயன்படுத்தி அந்த போலிக் கடிதம் இந்த கைக்கூலி ஏஜென்சியால் உருவாக்கப்பட்ட உண்மை வெளிவந்தது. ஆவணங்கள் அல்லது மறைக்கப்பட்ட கோப்புறைகள் (folders) எப்போதாவது திறக்கப்பட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்று அறிக்கை கூறியது. ஏப்ரல் 2021ல், டிஜிட்டல் தடயவியல் துறையில் ஒரு முன்னணி நிறுவனம், வில்சனின் கணினி ஹேக் செய்யப்பட்டதற்கான "மறுக்க முடியாத" ஆதாரம் இருப்பதாகக் கூறியது. பீமா-கோரே கான் வன்முறைக்கு 11 நாட்களுக்குப் பிறகு,



ஜனவரி 11, 2018 அன்று இந்த கோப்புகள் அதில் சொருக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட மோசடியான டிஜிட்டல் ஆதாரங்களைத்தான் முதல் நிலை ஆதாரமாக எடுத்துக் கொள்ள இச்சட்டம் வழிவகுக்கிறது. இத்தகைய ஆபத்தான சட்டப்பிரிவு தொழில்நுட்பச் சட்டத்தின் டிஜிட்டல் ஆதாரங்களை சமர்ப் பிக்கும் முறைகளை கேலிக்கூத்தாக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

குற்றவியல் சட்டத் திருத்தத்திற்கான பல்வேறு கமிட்டிகளின் பரிந்துரைகளைப் பற்றி மவுனம் சாதிக்கும் அமித்ஷா

இன்றைய அரசியல் நெருக்கடியான பாசிசக் காலகட்டத்தில் மக்களை ஒடுக்குவதற்கும், பாஜகவின் செயல்தந்திரங்களை செயல்படுத்திக் கொள்ளவும் இந்த சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்த குற்றவியல் சட்டத்தை மாற்றியமைக்க ஏற்கெனவே மத்திய உள்துறை அமைச்சகத்தால் மே 2020ல் அமைக்கப்பட்ட டெல்லி தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் நிறுவனரும் துணைவேந்தருமான பேராசிரியர் ரன்பீர் சிங் தலைமையிலான குழுவை அமைத்திருந்தது. இந்தக் குழு 2020ம்ஆண்டு உலகமே முடங்கிப் போயிருந்த கொரோனா காலத்தில் ஆன்லைனில் கருத்துக் கேட்புக் கூட்டத்தை நடத்தி ஒரு வரைவை இறுதி செய்து அளித்திருந்தது. அந்த அறிக்கையிலிருந்த பரிந்துரைகளின் அடிப்படையில்தான் இச்சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்ற தகவலை கூட சொல்ல மறுக்கிறது.

காவல்துறை விசாரணை முறையை சீர்திருத்த சட்ட ஆணையம் 154வது அறிக்கையில் விசாரணை முகமையையும், சட்ட ஒழுங்கு பிரிவையும் தனித்தனியான அதிகாரத்தின் கீழ் கொண்டுவர பரிந்துரைத்தது. அதையே மாலிமத் கமிட்டியும், காவல்துறை சீர்திருத்தம் சம்பந்தமாக அமைக்கப்பட்ட பத்மநாபய்யா கமிட்டியும் பரிந்துரைத்தது.

அதாவது விசாரணை முகமையை அரசியல் அதிகாரத்தின் கீழ் விசாரணை செய்யப்படாமல் சுதந்திரமாக செயல்பட நீதிமன்றத்தின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவர பரிந்துரைத்தது. இது சட்ட ஒழுங்கு துறை காவலர்களை வைத்து அடித்து துன்புறுத்தி சாட்சியம் பெறுகின்ற வழிமுறையை குறைத்து அறிவியல் பூர்வமான விசாரணை முறையை கொண்டுவருவதற்கு வழிவகுக்கும் என்று ஆணையம் பரிந்துரைத்தது. இதற்கு நேரெதிராகவே காவல்துறையில் அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாநில காவல்துறையின் அதிகாரம் பறிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட என்.ஐ.ஏ. போன்ற வானளாவ அதிகாரம் கொண்ட ஏஜென்சிகளை இந்த சட்டத்தின் எந்த பிரிவும் கட்டுப்படுத்தாது என்பதே உண்மை.

காவல்துறை அதிகாரிகளுக்கு எதிரான புகார்களை விசாரிக்கும் எந்த வழியும் இதில் சொல்லப்படவில்லை. காவல்துறை சீர்திருத்தம், சிறை சீர்திருத்தம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தாமலேயே நீதித்துறை முறைமையை மாற்றியமைத்துள்ளதாக கூறுவது ஏமாற்று. அதாவது விசாரணை கைதிகளை எல்லாம் தண்டனைக் கைதிகளாக மாற்றுவதை நோக்கமாக கொண்டதே இச்சட்டம். குற்றவியல் ஆளறி அடையாளச் சட்டத்தை 2022ல் கொண்டுவந்த போது, பாராளுமன்றத்தில் "விசாரணை ஏஜென்சி களுக்கு குற்றத்தை நிரூபிப்பதற்கும், தண்டனை களை அதிகரிப்பதற்கும் தேவை" என அமித்ஷா பேசிய அதே நோக்கத்தின் அடிப்படையி லேயே இந்தச் சட்டங்களும் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

## சட்டம் உருவாக்கப்படுவதற்கான அரசியல், பொருளாதர சூழ்நிலை என்ன? அதன் நெருக்கடிகள் என்ன?

2008ல் ஏற்பட்ட உலக பொருளாதார நெருக்கடி உச்சத்தை தொட்டது. அதன் பிறகு அதிலிருந்து மீள்வதற்கான எந்த வழியும் இதுநாள் வரை ஏற்படவில்லை. மேற்கண்ட உலகப் பொருளாதார மந்த நிலையால் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வந்த அமெரிக்கா மிகப்பெரிய நெருக்கடியை சந்தித்தது. அதன் தொடர்ச்சியாக ஐரோப்பா, ஆசியா என பரவியது. இந்நிலையில் கொரோனா முடக்க காலத்தில் மக்களின் வாங்கும் சக்தியின் வீழ்ச்சி ஒரு பக்கம் நெருக்கடியை ஆழப்படுத்தியது,

ஒருசில ஏகாதிபத்திய நாடுகளின் கார்ப்ப ரேட்டுகள் முன்னிலும் அதிகமான லாபங்களை


vaigarai velicham official



கொழித்ததும் நடந்தேறியது. இது ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான போட்டியை கூர்மைப்படுத்தியதோடு, ஒடுக்கப்பட்ட நாடுகளை சுரண்டுவதை இன்னும் கடுமையாக்கியது. ஒடுக்கப்பட்ட நாடுகளில் உள்ள உள்நாட்டு கார்ப்பரேட்டுகள் இந்த சுரண்டலுக்கு தேவையான அனைத்தையும் தனது ஆட்சியதிகாரத்தின் மூலமாக செய்யத் தொடங்கியது. அதற்கு ஏற்கெனவே உள்ள பழைய முறைகளை எல்லாம் தூக்கியெறிந்து முன்னிலும் பிற்போக்கான அடிமைத் தனமான முறைகளை கைக்கொள்ள வேண்டியிருந்தது. அதற்கு ஒரு புறம் வன்முறை மூலமாக அடக்குவதும், இன்னொருபுறம் முந்தைய அவர்களுக்கு ஒத்துவராத சட்டங்களை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இதே நிலைத்தான் இந்தியாவை ஆளும் வர்க்கத்திற்கும் ஏற்பட்டது. அதனால்தான் இந்தியாவை முன்னிலும் அதிகமான ஆழமான அடிமைப்படுத்தும் ஒப்பந்தங்களை அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் செய்து கொண்டது. உலக மேலாதிக்க நலனுக்காக அமெரிக்க-நேட்டோ அணி சீன-ரஷ்ய அணியோடு முட்டி மோத வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. குறிப்பாக மூலப்பொருளுக்கான போட்டி, மலிவான கூலி உழைப்பைச் சுரண்டல், மிகப் பெரிய சந்தையை அப்படியே கபளிகரம் செய்ய அமெரிக்கா சீனாவுடன் போட்டியிட இந்தியாவை தன்னோடு பிணைத்துக் கொண்டது. அதற்கு இங்குள்ள பல பழையச் சட்டங்களை திருத்தி எளிதாக தனது சுரண்டலுக்கு உகந்த நிலைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

அப்படி மாற்றப்பட்ட சட்டங்களில் மூலப் பொருட்களை கொள்ளையடிக்க உகந்ததாக சுற்றுச் சூழல் சட்டம் (EIA), வனப் பாதுகப்புச் சட்டம், பல்லுயிர் பெருக்கச் சட்டம் ஆகிய சட்டங்களையும், நீர் வளங்களை தனியார்மய வணிகமயமாக்க அணை பாதுகப்புச் சட்டம், சுரங்கம் மற்றும் கனிமங்கள் திருத்தச் சட்டம் போன்ற சட்டங்கள் கொண்டுவரப்பட்டது. அரசு நிதிமூலதன நிறுவனங்களைக் கையகப் படுத்த காப்பீட்டுச் சட்டம், வங்கி ஒழுங்கு முறைச் சட்டம் என பலச் சட்டங்களை கொண்டுவந்தது. மலிவான கூலி உழைப்பைச் சுரண்டுவதற்கு உகந்த தொழிற்சாலைச் சட்டம், தொழிலாளர் சட்டம், நிறுவனச் சட்டம் போன்ற சட்டங்களை கொண்டு வந்தது. எல்லாத் துறைகளிலும் சில கார்ப்பரேட்டுகள் மட்டும் ஏகபோகத்தை அடைவதற்குத் தடையாக இருந்த ஏகபோகங்கள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட வர்த்தக நடைமுறைகள் MRTP என அறியப்பட்ட சட்டங்களை ஒழித்து போட்டிச் சட்டம் ஏற்கெனவே கொண்டு வந்திருந்தது சுரண்டலுக்கு மிக வசதியாக இருந்தது. 2023ல் அது இன்னும் வசதியாக திருத்தப்பட்டு ஏகபோகத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த சட்டங்கள் மூலம் இந்திய மக்களின் வாழ்வில் மிக மோசமான மாற்றங்களை உருவாக்கிவிட்டது. வேலையின்மை, நிரந்தர மற்ற அடிமை ஒப்பந்த குறைந்த கூலி முறை, விலையேற்றம் அதை எதிர்த்து போராடுகின்ற தொழிலாளர்கள், விவசாயிகள், வணிகர்கள், அரசு ஊழியர்கள் என அனைத்து தரப்பு மக்களும் எதிர்த்து போராடுகின்ற நிலையில்தான் தற்போதுள்ள காவல்துறை, நீதிமன்றம் ஆகியவற்றைக் கொண்டு மக்களை ஒடுக்குகின்ற குற்றவியல் சட்டத்தையும் அவசர அவசரமாக திருத்தியுள்ளது.

இதனடிப்படையிலேயே இந்த மூன்று சட்டங்களையும் ஜனநாயகமற்ற வழிமுறை யோடும் ஏற்கெனவே இருக்கிற அரசியல் சட்டம் வழங்கியுள்ளதும், ஏற்கெனவே நீதி மன்றத் தீர்ப்புகளின் மூலமாகவும் வழங்கப் பட்டுள்ள உரிமைகளை பறிக்கின்ற வகையிலும் இந்த குற்றவியல் சட்டம் கொண்டுவரப் பட்டுள்ளது.

**பாசிச சட்டங்களை எதிர்ப்போம்!**
**சுதந்திரத்திற்காகவும்,**
**ஜனநாயகத்திற்காகவும் போராடுவோம்!!**

சில நிமிடங்களில் பல சட்டங்களை விவாதங்களே இல்லாமல் சட்டமாக்கப்படுவது பல பத்தாண்டுகளாக தொடர்கிறது. இப்படி சட்டவிரோதமான பல சட்டங்கள் நிறைவேற் றப்பட்டுள்ளது. அதை எதிர்த்து அந்த சட்ட திருத்தங்கள் அரசியலமைப்புக்கு விரோதமாக உள்ளது என வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. அந்த வழக்குகளில் பல நீதிமன் றங்களில் விசாரணை செய்யப்படாமலேயே தூங்குகிறது, பல வழக்குகள் விசாரணைக்கு உகந்தது அல்ல என தள்ளுபடியும் செய்யப் பட்டிருக்கிறது. இவை அனைத்தையும் இந்த பாசிச அரசு சட்டவிரோதமான முறையில் பாராளுமன்றத்தில் எவ்வித விவாதமும் இன்றி அவசரச் சட்டங்களாக நிறைவேற்றியது.

சட்ட வழியில் பாசிசத்தை கொண்டு வருவதும், மக்களுக்கிடையில் சாதி, மதம், இனம் என அனைத்து வேற்றுமைகளையும் பயன்படுத்தி தனது பெரும்பான்மைவாதத்தை விதைத்து மக்களுக்குள் மோத விடுவதும், ஆயுதம் தாங்கிய குண்டர்படைகளை கட்டியமைத்து தாக்குவதும், அதையும் மீறி அரசை எதிர்த்து போராடுபவர்களை இராணுவம், போலீஸ், அரசு எந்திரத்தை கொண்டு அடக்குவதும் என சகல வழிகளிலும் தனது பாசிச ஆக்டோபஸ் கொடுங் கரங்களை நீட்டுகிறது. அமித்ஷாவின் மொழியில் சொல்ல வேண்டுமென்றால் "இப்போது நாட்டின் பாதுகாப்புதான் முக்கியம். அரசுக்கு எதிராக யார் வேண்டுமானாலும் எதுவும் கூறலாம், ஆனால் நாட்டின் கொடி, பாதுகாப்பு, சொத்துக்களில் யாராவது தலை யிட்டால் அவர்கள் சிறைக்குச் செல்வார்கள்" என்ற பாசிச வெறிக் கொண்ட பேச்சே அதற்கு சாட்சி.

இதற்கு சேவை செய்கிற வகையில் தற்போது கொண்டு வரப்பட்டு ஜூலை 1 முதல் நடைமுறைக்கு வரவுள்ள மூன்று குற்றவியல் சட்டங்களை எதிர்த்துப் போராடுவது உழைக்கும் வர்க்கத்தின் கடமையாகும். இல்லை என்றால் நாம் அடிமையினும் கீழாக நடத்தப் படுவது தவிர்க்க முடியாததாகும். இது அனைத்து தரப்பு மக்களையும் பாதிக்கப் போவதால், இதை எதிர்த்து அனைத்து மக்களும் ஒன்றாக கரம் கோர்த்து போராடவேண்டியது நமது கடமையாகும். **நன்றி : சமரன் இதழ்**




நூலைப்பெற
போன்:
7401213394
7358278146
8148129887
விலை
ரூ.50/-

முஸ்லிம்களை ஏன் கட்டுப்படுத்தாது என்றால், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25 முஸ்லிம்களுக்கும், சிறுபான்மையினருக்கும் மத விவகாரங்களில் முழு சுதந்திரத்தை வழங்குகின்றது. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் ஆற்றல் மிக்கவையா? வழிகாட்டும் கொள்கைகள் ஆற்றல் மிக்கவையா என வருகின்றபோது அடிப்படை உரிமைகளே ஆற்றல் மிக்கவை. ஆகவே வழிகாட்டும் கொள்கையில் அமைந்துள்ள பிரிவு 44 நம்மை எந்த விதத்திலும் முஸ்லிம்களை கட்டுப்படுத்தாது. (ஆதாரம் *The Muslim of India. A Documentary Record by A.G.Noorani P.157-158)*

- நூலிலிருந்து

# தளவாய் வேலுத்தம்பி கால முஸ்லிம்கள்



**கேரளத்தில்** கைளிக்கார பத்மநாப பிள்ளை சிறந்த வரலாற்று நாடக ஆசிரியர். இவரது "வேலுத்தம்பி தளவா" மிக்க சிறப்பு வாய்ந்தது. புரட்சியாளனின் வீரவாழ்வும், மரணமும் உணர்ச்சி வேகத்துடன் இதில் சித்தரிக்கப்படுகின்றன. (ச.வே. சுப்பிரமணியன், திராவிட மொழி இலக்கியங்கள், பக், 447)

வேலுத்தம்பி தளவாயின் வீரமரணத்தைச் சித்தரிக்கிறது.

கே.எம். பணிக்கர் வேலுத்தம்பி தளவா என்னும் சிறுகவிதைக் காப்பியத்தைத் தந்துள்ளார். வேலுத்தம்பி தளவாயின் வீரவரலாற்றில் வெள்ளையர் எதிர்ப்பில், முஸ்லிம்களும் பங்கேற்றனர். அந்த வீரவரலாறு இதோ...

**தலக்குளம் தந்த தவப்புதல்வர்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம் தாலுகாவில் உள்ள இரணியலுக்கு அருகில் உள்ள சிறிய ஊர் தலக்குளம். அங்கு பரம்பரைச் செல்வாக்குடைய நாயர் குடும்பத்தில் குன்னு மாயாறி பிள்ளைக்கும், வள்ளியம்மா தங்கச்சிக்கும் புதல்வராக மலையாள ஆண்டு 940 சித்திரை 23ஆம் நாள், கி.பி 1765 மே 6ல் பிறந்தவர் வேலுத்தம்பி. இரணியல் குஞ் சாதிப் பிள்ளையிடம் கல்வி பயின்ற வேலுத்தம்பி, இளவயதிலேயே போர்ப் பயிற்சியையும் பெற்றார்.

**இரணியலின் காரியக்காரர்**

கி.பி. 1785ல் திருவிதாங்கூர் அரசர் ராமவர்மா ராமேஸ் வரத்திற்குத் தீர்த்த யாத்திரை சென்றார். அப்போது அரசரது உடைவாளும், தங்க அணிகலன்களும் களவுபோனது. அதனைக் கண்டுபிடித்து களவுபோன பொருட்களை மீட்டுக்கொடுத்த இருபது வயது நிரம்பிய வேலுத்தம்பியின் திறமையைப் பாராட்டி அரசர் அவரை இரணியலின் காரியக்காரர் ஆக்கினார்.

(அ.கா. பெருமாள், தென் குமரியின் கதை, சென்னை, 2003 பக் 160)

நாஞ்சில் நாட்டில் வேலுத்தம்பியின் புகழ் பரவிக் கொண்டிருந்த வேளையில் 1798ல் திருவிதாங்கூர் அரசர் தர்மராஜா என்ற ராமவர்மா மறைந்தார். அவரது மருமகன் அவிட்டம் திருநாள் (16 வயது) ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தார். திருவனந்தபுரம் அரண்மனையில் திவானாகப் பணிபுரிந்த திறமை மிகுந்த கேசவ தாஸின் பகைவர்கள், மன்னரிடம் அவர் மீது வெறுப்பை ஏற்படுத்தினர். திவான் கேசவதாஸ் சிறையில் அடைக்கப்பட்டு மனம் ஒடிந்து 1799ல் சிறை யிலேயே மடிந்தார்.

**மூவர் செய்த மோசடிகள்**

கேசவதாஸ் மறைவிற்குப் பின் ஜெயந்தன் சங்கரன் நம்பூதிரி என்பவர் வலிய சர்வாதிகாரி யானார். தக்கலையில் வாழ்ந்த குளத்தூரான் சங்கரன் நா ராயணன் செட்டியும், மதுதாரகன் என்ற சிரியன் கிறிஸ்தவரும் சங்கரன் நம்பூ

தி ரியின் கூட்டாளிகள். இவர்கள் மூவரும் அரசியல் அறியாத மன்னரை கைக்குள் வைத்துக் கொண்டு, மன்னர் பெயரால் மகாமோசடிகள் புரிந்தனர். மக்களைக் கசக்கிப் பிழிந்தனர்.

இந்த நிலையில் நாஞ்சில் நாட்டு மக்களிட மிருந்து 3000 பணம் பிரித்துத் தர வேண்டும் என்ற இரணியல் காரியக் காரரான வேலுத் தம்பிக்கு கட்டளை வந்தது.

நேர்மையாளரும், வீரருமான வேலுத்தம்பி அநீதியை ஒழிக்க முடிவெடுத்தார். அமைச்சர் களிடம் வரி யைக் கட்டாயமாகப் பிரித்திட சில நாட்கள் அவகாசம் கேட்டார். ஆனால் அந்த அவகாச நாட்களில், அநீதியை எதிர்த் திட நாஞ்சில் நாட்டு பன்னிரெண்டு பிடாகை மக்களிடமும் நிலையை எடுத் துக்கூறி, மக்களை அணி திரட்டினார்.

## திருவனந்தபுரத்தில் தீரர் கூட்டம்

மலையான ஆண்டு 947 பங்குனி 6ம் நாள் (1799) வேலுத்தம்பி தலை மையில் நாஞ்சில் நாட்டுப் பொதுமக்கள் அரண்மனையின் முன்னால் பெருந்திரளாகக் கூடியது கண்டு மன்னன் பெயரால் மோசடிகள் செய்துவரும் மூவரும் தலைமறைவாயினர். வேலுத்தம்பி மன்னரிடம் உண்மையை உரைத்தார். சூழ்ச்சிக் காரர்கள் பிடிக்கப்பட்டு, ஜெயந்தன் சங்கரன் நம்பூதிரி நாடு கடத்தப்பட்டார். சங்கரன் நாராயணன் செட்டியை முக்காலியில் கட்டி வைத்து கசையடி கொடுக்கப்பட்டது. மதுதார் களின் காதுகள் வெட்டப்பட்டன. மக்கள் மனம் ம கிழ்ந்தனர். மாவீரன் வேலுத்தம்பியை மன்னர் திருவிதாங்கூரின் தளவாய் ஆக்கினார்.

## சங்குண்ணிமேனன்

திருவிதாங்கூர் திவான் பேஷ்காரராகப் பணியாற்றிய பி. சங்குண்ணிமேனன் திருவிதாங்கூர் சரித்திரத்தை கி.பி. 1878ல் 523 பக்கங்களில் வெளியிட்டுள்ளார். அந்த நூலில் பக்கம் 301ல் அவர் தரும் செய்தி இதோ.

## வேலுத்தம்பியும் முஸ்லிம் சட்டமும்

தளவாய் வேலுத்தம்பி மனுதர்ம சாஸ்திரத் திலும் இஸ்லாமியச் சட்ட விதிகளைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தபடியால் அவைகளில் கூறப்பட்ட தண்ட னைகளை கண்டிப்புடன் அமுல்படுத்தி வந்தார் என்று சங்குண்ணி மேனன் தளவாய் வேலுத்தம்பி முஸ்லிம் சட்டப்படி தண்டனைகளை வழங்கிய செய்தியை தெரிவித் திருக்கிறார்.

## வி.நாகமய்யா

கி.பி.1906ல் வி.நாகமய்யா திருவிதாங்கூர் வரலாற்றை மூன்று பாகங்களாக 1886 பக்கங் களில் வெளியிட்டுள்ளார். அதில் முதல்பாகத்தில் பக்கம் 421ல் தளவாய் வேலுத்தம்பியின் நிர்வாகம் குறித்து அவர் தருகின்ற செய்தி இதோ...

தளவாய் வேலுத்தம்பியின் நீதி விசாரணை கள் திறந்த வெளியிலும், மரங்க ளின் அடியிலும் நடத்தப்பட்டன. தானே இருபக்கத்து சாட்சி களையும் நேரில் விசாரிக்கின்ற போது ஹிந்து சாஸ்திரி யும், முஸ்லிம் முப்தியும் (முஸ்லிம் நீதிபதி) உடன் இருப்பர் என்று தெரிவித்துள்ளார்.

## எஸ்.எம்.சுப்பிரமணியம்

வார இதழ் ஒன்றில் எஸ்.எம்.சுப்பிர மணியம் எழுதிய "மானம் காத்த மாவீரன்" எனும் "தளவாய் வேலுத்தம்பி" பற்றிய தொடரில் 3வது அத்தியாயத்தில் அவர் தந்துள்ள செய்தி இதோ... "தளவாய் வேலுத்தம்பி, கூடவே ஓர் நீதிநெறி அறிந்த முகம்மதியரும் (முஸ்லிம்) ஓர் சாஸ்திரியும் மற்றும் அறிஞர் பலரும் வருவார்கள். வாதி பிரதிவாதி இரு தரப்பையும் அவரே விசாரித்து நியாயம் வழங்குவார். குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்க வேண்டிவருமானால், கோர்ட்டு நடந்த அதே மரத்தின் மீது குற்றவாளியைத் தூக்கிலிட்டு, ஒழிந்தான் ஒரு குற்றவாளி என்று நிம் மதியுடன் அந்த இடத்தை விட்டுச் செல்வார். அச்சம் என்பதை அவர் முகத்தில் காணவே முடியாது, என்று வேலுத் தம்பியின் நீதிமுறை பற்றி விளக்கி யுள்ளார். வேலுத்தம்பிக்கு நீதிமுறைகளை அறிவித்திடும் இடத்தில் முஸ்லிம்கள் உடனிருந்து பணியாற்றியதை சங்குண்ணி மேனன், நாகமய்யா, எஸ்.எம்.சுப்பிரமணியம் ஆகியோர் குறிப்புகளிலிருந்து அறிய முடிகிறது. இனி வெள்ளையர்களை எதிர்த்து வீரப்போர் நடத்தியபோது வேலுத்தம்பிக்கு முஸ்லிம் படைவீரர்கள் பெரிதும் உதவினார்கள் என்பதும் வரலாற்றின் பக்கங்களில் காணக் கிடக்கின்றது.

## கர்னல் மெகாலே

கி.பி. 1765ல் திருவிதாங்கூர் அரசு ஏற்கெனவே ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியுடன் உடன்படிக்கை செய்திருந்தது.


vaigarai velicham official

கி.பி 1765 ஜூலை முதல் திருவிதாங்கூர் நிரந்தரமாகவே கும்பெனியாருக்கு அடிமையாகி இருந்தது. அதன்படி திருவிதாங்கூரின் தலைநகரான திருவனந்தபுரத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ரெசிடென்ட் தங்கிச் செயல்பட வேண்டும் என்ற ஆங்கிலேயரின் கட்டளையைத் திருவிதாங்கூர் அரசு முழுவதுமாக ஏற்றிருந்தது. அதன்படி திருவிதாங்கூர் ரெசிடென்டாக கர்னல் மெகாலே அப்போது (1800-1810) அங்கு இருந்தார்.

### வேலுத்தம்பி மெகாலே மன வேறுபாடு

தளவாய் வேலுத்தம்பியின் நேர்மை, நல்ல திறமையான நிர்வாகம், துணிவு, ஆற்றல் மெகாலேயைக் கவரவில்லை.

முந்தைய மைசூர்ப் போர்களில் திருவிதாங்கூருக்கு வெற்றியைத் தேடித் தந்த நாயர் படைப் பிரிவை கலைத்திட மெகாலே யோசனை கூறினார். அரச ரின் ஆணைப்படி படை கலைக்கப்பட்டாலும், இது விஷயத்தில் வேலுத்தம்பிக்கு மெகாலேயுடன் மனவேறுபாடு ஏற்பட்டது.

### கப்பத் தொகை

கி.பி.1805ல் திருவிதாங்கூர் அரசு கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் செலுத்த வேண்டிய கப்பத் தொகை எட்டு லட்சத் திற்கும்மேல் பாக்கி இருந்தது. இதனை முழுவதுமாக கட்ட வேண்டுமென்று கர்னல் மெகாலே வற்புறுத்தினார். திருவிதாங்கூர் மக்களின் ஏழ்மை நிலையையும், பொருளாதாரச் சீரழிவையும் கண்ட வேலுத் தம்பி கப்பம் செலுத்திட மறுத்தார். கோபமடைந்த கம்பெனியார் தளவாய் வேலுத் தம்பியை பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று மன்னரிடம் கேட்டார்கள்.

### 16.1.1808 குண்டரைப் பிரகடனம்

குப்பொனிர் கவர்னர், வேலுத்தம்பி வினை தாக்கி அறிக்கை வெளியிட்டார். அதற்குப் பதிலாக வேலுத்தம்பி குண்டறை எனுமிடத் யரை எதிர்த்து வீரப்பிர செய்தார். ஒண்டிர் பிழைக்க ஓடத்துரத்துகிறார்

அழ்த்தத் தொலைத்திட ஆர்ப்ப இவர்களை நாசமாக்கிட வேண்டும். இது இங்கு தோன்றிய ஒவ்வொரு ஆன் மக்களின் பிறவிக் கடன் என்றார்.

(தேபெருமாள், தளவாய் வேலுத்தப்பி சென்னை, 1962, பக் 315)

### கொச்சிப் போர்

திருவிதாங்கூர் வேலுத்தம்பியின் படைகள் கொச்சியில் வெள்ளையர் படையைத் தாக்கியது

### திரும்பவும் கொல்லம் போர்

மூன்றாம் முறையாக கொல்லத்தில் பிரிட்டிஷ் படைகளை எதிர்த்து தளவாய் வேலுத்தம்பி 40000 வீரர்களுடன் சென்று போரிட்டு பலத்த சேதத்திற்குள்ளாயினர். ரகசிய ஆலோசனை, பாகம், 38, (பக்.1073-1074)

### 6.2.1808

திருச்சியிலிருந்து வெள்ளையர் படைகள் விரைந்தது. ஆரல்வாய் மொழி கணவாய்க் கோட்டையினைத் தாக்கியது.

9.2.1805ல் கர்னல் வெல்ஷ், திரு விதாங்கூர் படைகளுக்கு எதிராகத் தாக்குதலைத் தொடுத்தார். 10.2.1809 காலைக்குள் கோட்டை வெள்ளையர் வசமாயிற்று. போரில் 69வது ரெஜிமண்டின் கேப்டன் கன்னிங்காமும், சிப்பாய் ஒருவரும் கொல்லப்பட்டார்கள். ஒரு சார்ஜண்டும், மூன்று தனி வீரர்கள், ஒரு சுபேதார், மற்றும் ஆறு - சிப்பாய்கள் காயம்பட்டனர் என்று கர் னல் வெல்ஷ் எழுதியுள்ளார்.

### கர்னல் வெல்ஷ்

10ம் தேதி காலை நாங்கள் வெற்றியடைந்தோம். 50 பீரங்கிகளாலும் 10,000 ஆட்களாலும் (வீரர்களாலும்) பாதுகாக்கப்பட்டு வந்த போதிலும் இரவு நேரத்தில் பலம் வாய்ந்த தெற்குக் கோட்டையை கைப்பற்றியபின், காலை 8 மணிக்குள் எதிரியின் கோட்டைப்பகுதி முழுவதும் எங்கள் வசமா யிற்று என்று கர்னல் வெல்ஷ் தெரிவித்துள்ளார். எதிரிகளின் ஆயுதங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டது" என்றும், ஆரல்வாய்மொழிக் கோட்டையை பாதுகாத்திட பத்தாயிரம் வீரர்கள் பணியாற்றியதை கர்னல் வெல்ஷ் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்தப்படையில் வெள்ளையரை எதிர்த்து முஸ்லிம் வீரர்களும் பணியாற்றினர் என்பது வரலாற்றில் மறைந்து கிடக்கும் செய்தியாகும்.

வெள்ளையரின் திரளான படைபலத்திற்கு முன் திருவிதாங்கூர் படைகள் தாக்குப்பிடிக்க முடியாமல் பின்வாங்கி ஓடின. வெள்ளையர் கோட்டாற்றையும், நாகர்கோவிலையும் கைப்பற்றினார்கள். கொச்சி அமைச்சர் பாலியத்

தக்சன் ஆங்கிலேயர்கள் பக்கம் உதவி புரிய வாக்களித்தார்.

**மன்னரைக்காணச் சென்றார்**

அனைத்து வழிகளிலும் வெள்ளையர் முன்னேறி வருவதை அறிந்த வேலுத்தம்பி மன்னரைக் காணச் சென்றார். லெப்டினன்ட் கர்னல் சென்டுலெஜர் 24 மணிநேத்திற்குள் வேலுத்தம்பியைப் பிடித்துத் தருபவர்களுக்கு 50,000 ரூபாயை பரிசாக அறிவித்தார்.

**அந்தணர் வீட்டில்**

தளவாய் வேலுத்தம்பி மாறு வேடத்தில் பயணித்தார். குன்னத்தூருக்கு அடுத்துள்ள மண்ணடி என்னுமிடத்தில் தளவாய் வேலுத்தம்பி கோயில் வளப்பிலுள்ள ஓர் அந்தணர் வீட்டில் தனது இளைய சகோதருடன் இருந்தபோது பிரிட்டிஷ் படை அவர்களை வளைத்தது. சில நிமிடங்களில் எதிரிகளின் கைகளில் சிக்க நேரிடும் என்று அறிந்த வேலுத்தம்பி, தனது சகோதரரிடம் தனது கழுத்தை வெட்டுமாறு உத்தரவளித்தார். சகோதர நேசம் இதற்கு இணங்கவில்லை. தளவாய் வேலுத்தம்பி தானாகவே தனது கட்டாரியை எடுத்து தனது மார்பினில் செலுத்தினார். மரணம் வரவில்லை. தனது மரண வேதனையை நிறுத்தச் சொல்லி தன் சகோதரினடம் வேண்டினார். தம்பி வீரமிகு காரியமாற்றினார். தளவாய் வேலுத்தம்பியின் தலை தனியாயிற்று. அனால் கும்பெனிப்படை அவரது உயிரற்ற உடலையும் தண்டித்தது.

**கண்ணம் மூலை**

கண்ணம் மூலை என்னுமிடத்தில் தளவாய் வேலுத்தம்பியின் உடல் எல்லோரும் காணும்படி கழுமரத்தில் கட்டித் தூக்கிலிடப்பட்டது. உயிரற்ற உடலை வீதிகளிலே இழுத்துச் சென்றனர். (திருவிதாங்கூர் சர்க்கார். திருவிதாங் கூர் சரித்திரம், திருவனந்தபுரம், 1939,பக்.189)

வேலுத்தம்பியின் இளைய தம்பி பத்மநாபன் கைகளில் விலங்கு மாட்டப்பட்டு கொல்லத் துக்கு கொண்டு சென்றனர். வேலுத்தம்பியின் வீடு தரைமட்டமாக்கப்பட்டது. அந்த இடத்தில் கொட்டை முத்துப் பரப்பினர். (ஆமணக்கு விதைக்கப்பட்டது) இது கழுதை ஏரோட்டல் என்ற பண்டைய வழக்கத்தை ஒத்தது. வேலுத்தம்பியின் உறவினர் பலர் மாலத்தீவிற்கு நாடு கடத்தப்பட்டனர். அவர்கள் கடலில் சிறு தொலைவு சென்றதும் அங்கு கொடுங்காற்று வீசியதால் அவர்களை ஏற்றிச் சென்ற கலம் தூத்துக்குடிக்கு திரும்ப நேர்ந்தது. அவர்களில் சிலர் தற்கொலை செய்து கொண்டனர். சிலர் சிறைகளில் செத்தனர். எஞ்சியவர்களுக்கும் கசையடி தந்து அவர்களைத் திரும்பவும் நாடு கடத்தினர்.

**கே.எம்.பணிக்கர்**

தனது "சுயராஜ்ஜிய அபிமானி" என்ற நூலின் முன்னுரையில் கே.எம்.பணிக்கர், இந்திய சரித்திரத்தில் இந்தியாவின் சுதந்திரத்திற்காக போராடிய போராளி என்ற வகையில் வேலுத்தம்பியின் நாமத்தை காலை நேரங்களில் பிரார்த்தனையுடன் நினைவு கூறுவதற்குத் தகுதியானது என்று நாம் கருதுகிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

**ஆரல்வாய் மொழிக்கோட்டையில் முஸ்லிம்கள்**

அரன்+வாய்+மொழி ஆரல்வாய் மொழி எனத் திரிந்தது. ஆரல்=மதில். "கோட்டை வாயிலிருக்குமிடம்" என்று பொருள். அரன்வாழ் மொழி சிவபெருமான் வாழ்கின்ற இடம் என்று பலவாறாக கூறப்பட்டாலும், ஆரல்வாய் மொழியினை கோட்டை வாயிலின் வழியென்றும், கணவாய் (மலைவாய்) வழியி லிருக்கும் ஊர் என்றும் சொல்லலாம். ஆரல்வாய் மொழியில் மீனாட்டி டிசுந்தரர் கோயில் உள்ளது. இங்குள்ள கோட்டையில் முஸ்லிம் வீரர்கள் பணியாற்றிய செய்தி கேரள வரலாற்றில் சொல்லப்பட்டுள்ளது.

**டி.கே.வேலுப்பிள்ளை**

திருவிதாங்கூர் அரசு மானுவல் நூலில் டி.கே. வேலுப்பிள்ளை 1940இல் கூறியுள்ள செய்தி இதோ...

திருவிதாங்கூரை ஆண்ட மன்னர்கள் முஸ்லிம்களை மிகுந்த அன்புடனும் தாராள மனப்பான்மையுடனும் எப்பொழுதும் நடத்தி வந்தனர்.

அரச குடும்பத்தினருடன் முஸ்லிம்களுக்கு இருந்த பாசமும், பற்றும் எத்தகைய மிகுதியாக இருந்தது என்றால், 17வது நூற்றாண்டின் மத்தியில் முகலாய சர்தார் படையெடுத்து வந்தபோது ஆரல்வாய்மொழி, உள்ளூர் முஸ்லிம்கள் படையெடுத்து வந்தவர்களை ஆராம்பொழி எல்லைக்கு அப்பால் விரட்டு


vaigarai velicham official

வதற்கும் திருவிதாங்கூர் அரசுக்கு தங்களுடைய முழு ஆதரவைத் தந்தனர் என்று டி.கே.வேலுப் பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

திருவிதாங்கூர் அரசை எதிர்த்து முகலாயர் பிரதிநிதிகள் படையெடுத்து வந்தபோது முஸ்லிம்கள் திருவிதாங்கூரின் பக்கமே நின்று தாய்நாட்டிற்காகப் போராடியுள்ளார்கள்.

**ஆர்.பத்மநாபப் பிள்ளை**

இந்த மதப்பிரசங்கியரான ஆர்.பத்மநாபப் பிள்ளை 1943ல் "ஆரை வாய்மொழி வரலாறும் மீனாஷி சுந்தரர் கோயிலும்" என்னும் நூலினை 216 பக்கங்களில் 2 ரூபாய் விலையில் வெளியிட்டுள்ளார். அதில் பக்கம் 195ல் கூறியுள்ள செய்தி இதோ...

**கோட்டைக்குள் முஸ்லிம்கள்**

17வது நூற்றாண்டின் மத்தியில் முகலாய ஸர்தார் படையெடுத்தபோது முஸ்லிம்கள் அவனோடு சேராமல் திருவிதாங்கூருக்கு உழைத்து, ஆரைவாய்மொழிக் கோட்டைக்கு வெளியில் துரத்தினர். இதில் இந்நாட்டிலுள்ள முஸ்லிம்களும் உண்டு. அப்போதே இங்கு கோட்டைக்குள் முஸ்லிம்களும் தங்கி வருகின்றனர். மற்றையூர் முஸ்லீம்களுடன் இவர்களும் சேர்ந்து துரத்தினர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**நுழைவாயில்**

மேற்குத் தொடர்ச்சி மலையினின் றும் கிழக்கே செல்ல ஐந்து புழைகள் உளவென்றும், இது ஆறாம்புழை யென்றும் நாவலர் சோம சுந்தரபாரதி கூற்றுப்படி, ஆரைவாய் மொழி, திருவிதாங்கூர் ராஜ் யத்தின் நுழைவாயிலாக இருந்தது. அங்கு 1809ல் நடைபெற்றபோரில், ஆங்கிலேயக் கும்பெனியாரின் 10,000 படைவீரர்கள் 50 பீரங்கிகளுடன் போரிட்டனர். இந்தப்படையில் தளவாய் வேலுத் தம்பியின் அணியில்பலமுஸ்லிம்வீரர்களும்போரிட்டனர்.

**கோட்டாற்றில் ஈசாங்கல்**

நாகர்கோவில் கோட்டாற்றில் இளங்கடை குத்பாபள்ளியில் உள்ள மையவாடி (இறந்தவர்களை அடக்கம் செய்கின்ற இடம்) மாலிக் கான் தோட்டம் என்று அழைக்கப்படுகிறது.

இங்குள்ள கல்லறைத் தோட்டத் தில் ஷஹீத் செய்யது ஃபக்கீர் இபுன் செய்யது என்பவரின் அடக்கஸ்தலம் உள்ளது. அதன் இருபுறமும் அடையாள கற்கள் நிறுத்தப்பட்டுள்ளது. அதன் ஒரு கல்லில் வாளும் உருவப்பட்ட கட்டாரியும் காட்சியளிக்கின்றது. மறுகல்லில் வாளும் உறையில் போடப்பட்ட கட்டாரியும் காட்சியளிக்கின்றது.

கபர் செய்யது ஃபக்கீர் இபுன்ஸய் யித்வலி ஷஹீத் தர்மஷ்ஹார் என்பவரது அடக்கஸ்தலமும் இங்குள்ளது. இவரது கல்லறைக்கு அருகில் மாலிக் கான் அடக்க இடமும் உள்ளது.

அரிப்புத் தெரு பாஷில் ஷா ஒலி யுல்லா அடக்க இடத்தின் கீழ்புறத்தில் நௌமியா, சௌமியா என்பவர்களது அடக்கஸ்தலம் உள்ளது. (பெட்டகம், குமரி மாவட்ட முஸ்லிம்களின் வரலாற்றுப் பொக்கிஷம், 2001, பக்258

**விரிவான ஆய்வு நடத்திட**

கோட்டாறு பகுதிகளில் இஸ்லாமிய வீரர்களது கல்லறைகள் பல இன்றும் உள்ளன. கால கதியில் பல கல்லறைகள் மறைந்திருக்கவும் கூடும். 1809ல் ஆரல்வாய்மொழிக் கணவாயில் நடைபெற்ற போரில், ஆங்கிலக் கும்பெனியாரின் படைகளை எதிர்த்து, திருவிதாங்கூரின் புரட்சித் தளபதி தளவாய் வேலுத்தம்பியின் பக்கம் நின்று, இந்த நாட்டின் விடுதலைக்காகப் போரிட்ட பல்லாயிரக்கணக்கான படைவீரர்களில் முஸ்லிம் தீரர்களும் அடங்குவர். அது குறித்து முழுவதுமாக விவரங்களை வெளிக்கொண்டு வர இன்னும் விரிவான ஆய்வினை ஆய்வாளர்கள் செய்திட வேண்டிய நிலையே இன்றும் உள்ளது.

**வீரகாவியம் விரைவில்**

கி.பி.1741 முதல் 1809 வரையிலான சரித்திரத்தில் தாய்த்திருநாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட, போரிட்ட வீரமிகு முஸ்லிம்களின் பங்களிப்பினை இயன்றவரை இந்நூலில் சுட்டிக்காட்டியுள்ளேன். ஹைதர் அலி, தீரன் திப்பு சுல்தான், அவர்தம் பிள்ளைகள், அவர்தம் வாரிசுகள், அவர்களைப் பின்பற்றியவர்கள் ஆகியோர் நடத்திய விடுதலைப்போரின் வீர காவியத்தை முழுவதுமாக விரைவில் தர இருக்கின்றேன். (இறைவன் நாடினால்)

மறைந்து போன தியாகசீலர்களை நினைத்தும், மறக்கடிக்கப்பட்ட அவரது தியாகம் குறித்தும் போற்றிப் புகழ்வோமாக!

# கட்டபொம்மன் படையில் முஸ்லிம்கள்



**அன்றைய** நெல்லைச் சீமை பாஞ்சாலங் குறிச்சியில் 1760ல் வீரபாண்டிய கட்ட பொம்மன் பிறந்தார்.

2.2.1790ல் அவர் பட்டத்திற்கு வந்தார். 1793 லிருந்து கிழக்கிந்தியப் பெனியார் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக கப்பம் கேட்டு வந்தார்கள். கி.பி. 98ல் 'ஆலன்' என்ற ஆங்கிலேயர் ரும்பவும் கம்பெனியாருக்கு திரை செலுத்தக்கேட்டு பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு வந்தார், கப்பம் கேட்டார். கட்டபொம்மன் மறுத்தார்.

கலெக்டர் ஜாக்சனை கட்டபொம்மன் சந்திக்க வேண்டுமென்று சொல்லிச் சென்ற போது ரணசிங்கனும், துரைசிங்கம், சின்ன பொம்மையாவும், சிவசுப்பிரமணிய பிள்ளையும் இது கேட்டு சீறினர். ஊமத்துரை உறுமினார்.

24.8.1798ல் காசுத்தி வருடம் பூவணி மாதம் ஒன்பதாம் தேதி வியாழக்கிழமை தசமி தினத் தன்று ஜாக்சனைக்கான கட்டபொம்மனுடன் வேலாளர், வாளார், வில்லாளர் முதலிய நாலாயிர 'வீரர்கள் புறப்பட்டனர்.

(ஜெகவீர பாண்டியனார், பாஞ்சாலங் குறிச்சி வீரசரித்திரம், முதல் பாகம் 1939, பக்கம் 84)

கட்டபொம்மனுடன் ஜாக்சனைக் காண இராமநாதபுரம் சென்ற 4000 படை வீரர்களைப் பற்றிய குறிப்பு பீரபாண்டிய கட்டபொம்மனின் கதைப் பாடலில் இருக்கிறது.

இந்தக் கதைப் பாடல் முஸ்லிம் தோழர் ஒருவர் பதிப்பித்து அவர் சுட்டுக்கட்டி சேர்த் திருப்பாரோ என்றுவரும் எண்ணிட வேண்டாம். அன்றைய மதுரைப் பல்கலைக் கழகம் (இன்றைய மதுரை காமராசர் பல்கலைக் கழகம்) நாட்டுப் பாடல்களைத் தொகுத்து 1971ல் வெளியீடு செய்தது.

முதலாவது நாட்டுப்பாடல் வெளியீடு நூலான 'வீரபாண்டிய கட்டபொம்மனின் கதைப் பாடல்' நூல் நா. வானமாமலை அவர்கள் பதிப்பித்தது அதில் பக்கம் 33ல் கட்டபொம்ம னுடன் இராமநாதபுரத்திற்கு ஜாக்சனைக் காணச் சென்ற படைவீரர் கள், போர்த்தளகர்த்தர்களைப் பற்றி குறிப்பிடும்போது வரிசையாக சொல்லிக் கொண்டே

"மம்மது தம்பியும் முஹம்மது தம்பியும் மார்க்கமுள்ள சின்ன வரிசையும், தர்மகுணவான் இபுராமு சாயுபும் தம்பி இசுமாலு ராவுத்தனும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சிரஞ்சீவி என்பவர் எழுதிய 'வீர பாண்டி கட்டபொம்மன்' நூலின் பக்கம் 211ல்...

"மம்மது தம்பி, முஹம்மது தம்பியும் மார்க்கமுள்ள சின்ன வரிசையுந்தான், தர்ம குணவான் இபுராமு சாகிபும் தம்பியிசுமாலு ராவுத்தனும்" என்று அதனைக் குறிப்பிட் டுள்ளார்.



vaigarai velicham official

அன்றைய சென்னை அரசாங்கத் தின் (இன்றைய தமிழ்நாடு) பதிப்புத் துறையினரால் ஒரியண்டல் மானுஸ் கிரிப்ட் வரிசையில் 67வது நூலாக 1960ல் 'டி. சந்திரசேகரன்' என்ற அரசு மானுஸ்கிரிப்ட் நூலகப் பாதுகாவலர் பதிப்பித்த "கட்டபொம்மன் வரலாறு' என்ற நூலில் பக்கம் 10ல் அதே விஷயத்தைச் சொல்லும் போது...

மஹம்மதுத் தம்பி கசப்பு கலப்பையும் மார்க்கமுள்ள குப்பை ராவுத்ததும். தர்ம குணவானும் மாமுஞ்சாமி தம்பி இஸ்மானு ராவுத்தனும் என்ற வரிகளைக் குறிப்பிட்டுள்ளர் அதற்கு ஈகப்பு லெப்பைவிளக்கம் எதி அவரே பக்கம் 12ல் "மகமது தம்பி லெப்பை, குப்பராவுத்தன், இராவுத்தன்" என்றும் சொல்லி யிருக்கிறார்.

**குப்பராவுத்தர்**

இவைகளை ஆய்ந்து பார்க்கிறபோது. முஹம்மது தம்பி, யூசுப் லெப்பை இரண்டும் ஒரே பெயராகவோ அல்லது தனித் தனியாகவோ இருக்க வாய்ப்புள்ளது. வரிசை என்பது சின்ன வரிசை என்று வழங்கும் பெயரைக் குறிக்கலாம். குப்பராவுத்தன் என்பதை எளிதில் எவரும் உணர்வர், கயத்தாற்றில் இவர் பெயரால் தெருவொன்றும் இருந்தது. இது பத்தாண்டு களுக்குமுன் காஜா முகைதீன் தெரு என்று அது பெயர் மாற்றப்பட்டுள்ளது.

பேரூராட்சியின் பழைய ஆவணங்களில் குப்பராவுத்தர் தெரு என்று இருந்ததை அறிவிக்கின்றன.

10.9.1798ல் ஜாக்சனை கட்டபொம்மன் இராமநாதபுரத்தில் சந்தித்ததும் அங்கே லெப்டி னெண்ட் கிளார்க் வெட்டிக் கொல்லப்பட்டதும் இங்கு நடந்த போரில் பாஞ்சைப் பகுதி வீரர்கள் பலர் வெள்ளையரை எதிர்த்துப் பலியான தும் சரித்திரத்தில் சாகாத செய்திகள். அதன்பின் கட்டபொம்மன் தப்பி வந்ததும், சுப்பிரமணிய பிள்ளை பிடிட்டதும் 5.7.1799ல் பாஞ்சாலங் குறிச்சியில் திரும்பவும் போர் மூண்டதும் 6.10.1799ல் கட்டபொம்மன் கயத்தாற்றில் கட்டைப் புளிய மரத்தில் தூக்கில் வீரச் சாவைத் தழுவியதும் சரித்திரத்தின் பின் நிகழ்ச்சிகள்.

வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் புரிந்த கட்டபொம்மனது படையில் பணியாற்றிய வீர முஸ்லிம் தியாகிகளான முஹம்மது தம்பி, யூசுப்பு லெப்பை, குப்ப ராவுத்தர், இஸ்மாயில் ராவுத்தர் ஆகியோரின் சுதந்திர உணர்வினை இந்திய நாடு விடுதலையைக் கொண்டாடும் நாளில் அனைவரும் எண்ணிப் பார்ப்போமாக.

**மருதுபாண்டியரின் மறைவிற்குப் பின் சேக் உசேன்**

ராமநாதபுரம் அருப்புக்கோட்டைக்கு கிழக்கே 18 மைல் தூரத்தில் முக்குளத்தில் 1748ல் உடையார் சோர்வை என்ற மொக்கபழனியப்பன் சோர்வையின் மகனாகப் பிறந்த பெரியமருதுவும் 1753ல் பிறந்த சின்னமருதுவும் வீரத்திற்கும், விசுவாசத்திற்கும் நாட்டுப் பற்றுக்கும் இலக்கணமாய் விளங்கிய மானங்காத்த மருதுபாண்டியர்கள் ஆவார்கள்.

இராமநாதபுரம் மறவர் சீமையை கம்பெனிப் படைகள் வளைத்துக் கொண்ட போது, சிவகங்கைச் சீமை யின் அதிபதியாக இருந்த முத்து வடுகநாதர் போரில் கொல்லப்பட்டதும் அவரது மனைவி வீராங்கனை வேலு நாச்சியார் மருது சகோதரர்களுடன் திண்டுக்கல்லில் இருந்த ஹைதர் அலீ யிடம் அடைக்கலம் புகுந்தனர். காலப் போக்கில் ஹைதர் அலீயின் உதவியுடன் திரும்பவும் சிவகங்கைச் சீமையை மருதுபாண்டியர் ஆட்சி புரியத் துவங்கினர்.

கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டதற்குப் பின்னால் ஊமைத்துரை சிவகங்கைச் சீமையில் அடைக்கலம் புகுந்ததும் ஆங்கிலேயர் வெகுண்டதும் பெரும் போர் நடந்ததும் கடைசியாக காளையார் கோவில் பிடிபட்டதும் "ஆங்கிலேயே ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட விடாது. பெருங்கேடு சூழ்ந்த சிவகங்கையை அடக்கிவிட்டோம்" என்று சென்னை இராணுவ வரலாற்றில் மேஜர் லிபர்ட் சொல்லியதும் 27.10.1801ல் மருதுபாண்டியர்கள் தூக்கிலிடப் பட்டதும் உடலைத் திருப்பத்தூரிலும் தலையை காளையார் கோவிலிலும் அடக்கம் செய்யப் பட்டதும் இன்றும் அந்த மானங்காத்த மருதிருவரின் வீர வரலாறு வழி வழியாக தமிழகத்தில் போற்றப்பட்டு வருவதும் நாம் அறிந்த செய்திகளாகும். இந்த வீரவரலாற்றில் முஸ்லிம்களின் பங்கினைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

இராமநாதபுரம், திருநெல்வேலி உள்ளிட்ட பகுதிகளில் 24.12.1800களின்போது இருந்த கலெக்டர், அரசுக்கு அளித்த அறிக்கையில்

மருது பாண்டியர் தூக்கிலிடப்பட்டதற்குப் பின்னால் தென்னாட்டில் ஓங்கி உயர்ந்து நின்ற கோட்டைகள் எல்லாம் தரைமட்ட மாக்கப் பட்டதையும் தொன்று தொட்டு வாளும், வேலும் ஏந்திய வீரவாழ்வு வாழ்ந்த மறவர்களிடமிருந்த பல ஆயிரக்கணக்கான போர்க்கருவிகள் பறிமுதல் செய்யப்பட்ட விபரத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

மருதுபாண்டியரைச் சேர்ந்த வீரர்களும் உறவினர்களும் வேட்டையாடப்பட்டார்கள். பதினைந்து வயதான சின்னமருதுவின் இளையமகனான துரைசாமி என்பவரும் மற்றும் 71 பேரும் நாடு கடத்தப்பட்டதையும் அதன்பின் நடந்த சரித்திரத்தில் சோகச் சம்பவங்களையும் கற்போர் மனமும் கசிந்து உருகும் விதத்தில் கர்னல் ஜேம்ஸ் வெல்ஸ் எழுதி இலண்டனில் 18.6.1830ல் வெளியான அந்த நூலின் முதல் பகுதி பக்கம் 133, 135ல் தெளிவாகக் குறிபிட்டிருக்கிறார்.

மலாய் மொழியில் பாக்குத் தீவு என்று வழங்கப்பட்ட பூலோபினாங் என்ற பினாங்குத் தீவிற்கு 11.12.1802ல் தூத்துக் குடி துறைமுகத் திலிருந்து அட்மிரன் நெல்சன் என்ற பதினைந் தாயிர ரூபாய்க்கு பம்பாயிலிருந்து வாடகைக்கு வரவழைக்கப்பட்ட கப்பலில் 73 வீரர்களை கைகளில் விலங்கு பூட்டி அழைத்துசென்றனர். பயணத்தின்போது கொண்டு சென்ற அரிசி, பருப்பு உண வுப் பொருட்கள் காலியாகி 3 பேர் கப்பலிலே பசியால் செத்துப்போய் 75 நாட்கள் பயணத்திற்குப்பின் பினாங்கு தீவின் கரையின் இறக்கி கார்வாலிஸ் கோட்டைக்கு வெளியே வாடகைக்கு அமர்த்திய வீட்டில் அடைத்தனர்.

சின்னமருதுவின் புதல்வர் முத்து வடுகு என்ற துரைசாமியுடன் சென்ற மற்ற 72 சுதந்திரப் போர் கைதிகளின் பட்டியல் "Military Consulations Vol.307" (19.1.1803) பக்கம் 1249ல் குறிக் கப்பட்டிருக்கிறது.

பினாங்குத் தீவிற்கு அனுப்பப்பட்ட 73 பேரில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருவரது பெயர் சேக் உசேன். (Sheik Hussain)

டாக்டர் எஸ்.எம். கமால், "மாவீரன் மருது பாண்டியர்" பக்கம் 182-184

**அமிர்தார் சேக்உசேன்**

இச்சப்பட்டி அமிர்தார் சேக்உசேன் 1800ல் திண்டுக்கல்லில் நடைபெற்ற தீர்த்தகிரி தம்பி கிலேதார், பருவதம் எனும் ஆறு குழந்தைகள் பிறந்தனர். இதில் கி.பி 1776ல் இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தவர் தீர்த்தகிரி, வளரும் இளமையிலேயே சிறந்த ஆற்றலும் திறமையும் நிறைந்தவராகத் திகழ்ந்தார் தீர்த்தகிரி.

கொங்குநாட்டின்பல்வேறு பகுதிகளிலிருந்து வரிவசூல் செய்து வரும் எல்லாம் சங்ககிரிக் கோட்டைக்கு கொண்டு வரப்பட்டு, பின்னர் அங்கிருந்து மைசூருக்குப் போய்ச் சேர்ந்து தொண்டிருந்தது. ஒரு நாள் தீர்த்தகிரி தனது சகோதரர்களுடன் வேட்டையாடித் திரும்பும் வழியில் அவ்வாறு சென்று கொண்டிருந்த வரி வசூல் பண மூட்டைகளைப் பிடுங்கினார். அப்போது பணத்தை இழந்த வீரர், "சங்ககிரிக் கோட்டை திவானுக்கு என்ன பதில் சொல்வேன் என்று அவரிடம் முறையிட்டார்.

சென்னிமலைக்கும் சிவன் மலைக்கும் நடுவே சின்னமலை

'வடக்கே சிவகிரி முருகனின் சென்னிமலை, தெற்கே சிவன்மலை இதற்கு இடையில் ஒரு சின்னமலை வந்து வரிப்பணத்தை வாங்கிக் கொண்டதாக சொல்' என்றார் தீர்த்தகிரி. தீர்த்த கிரிச் சர்க்கரை என்ற பெயர் சின்னமலை என்று ஆனது. பின்னாளில் வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் புரிந்த தீரன் சின்னமலை இவரே.

**ஹைதர் அலி**

கி.பி. 1767ல் வெள்ளையரை எதிர்த்துக் களங்கள் பல கண்ட கன்னட நாட்டின் போர்வாள், தீரன் திப்புவின் வீரத் தந்தை ஹைதர் அலி 7.12.1782ல் இவ்வுலக வாழ்வைத் துறந்தார். சின்ன மலையின் வீரம் மைசூரில் மிகவும் வியந்து புகழப்பட்டது.

**திப்புவின் படையில் கொங்குவீரர்கள்**

சின்னமலையின் நாட்டுப் பற்றுடைய செயல் திப்பு சுல்தானுக்கு சின்ன மலை மீது பெருமையையே ஏற்படுத்தியது. சின்னமலையின் புகழ் திப்புகல்தானின் சீரங்கப்பட்டணம் அரண் மனையில் எதிரொலித்தது.

**சின்னமலைக்கு அழைப்பு**

அந்தியூர் கச்சேரியில் பணிபுரிந்த திவான் கிரிமிதே சாய்புவிடமிருந்து சிரஸ்தார் அமீர் அலி மூலம் தீரன் சின்ன மலைக்கு ஓர் ஓலை வந்தது.


vaigarai velicham official

"திப்புசுல்தானின் படையில் கொங்கு நாட்டு இளைஞர்களைச் சேர்க்க வேண்டும். ஆங்கிலேயரை விரட்டி சின்னமலை போன்ற வீரர்களின். துணை திப்பு சுல்தானுக்குத் தேவை", என்று அதில் விபரம் இருப்பதும் அத்தோடு தீரன் சின்னமலையைச் சந்திக்கும் விருப்பம் திப்பு சுல்தானுக்கு இருப்பதும் தெரிவிக்கப்பட்டது.

### சீரங்கப்பட்டணம் பயணம்

வெள்ளையரை எதிர்த்திட திப்பு சுல்தானோடு அணி சேர்வது நல்லதோர் திட்டம் என்று முடிவெடுத்தார் சின்னமலை ஆயிரம் இளைஞர்களுடன் நோடியான பாதையில் செல்லாமல் காடு, வனங்களின் வழியாக சீரங்கப்பட்டணம் சென்று அடைந்தார்.

### படைத்தலைவர் சையது சாயபு

தீரன் சின்னமலை சீரங்கப்பட்டணத்திற்கு வந்தபோது திப்புசுல்தானின் படைத் தலைவர் சையது சாயபும் அமைச்சர் பூர்ணய்யாவும் வரவேற்று அவர்கள் வசதியாக தங்க எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்தனர்.

### கொங்குப்படை

சின்னமலையின் வீரமும் நேர்மைப் போக்கும் ஒளிவு மறைவில்லாமல் கலகலப்பாகப் பேசும் தன்மையும் திப்புசுல்தானுக்கு மிகவும் பிடித்திருந்தது.

திப்புசுல்தான் பிரெஞ்சுக்காரர்களை வெளிப்படையாக ஆதரித்ததால் பிரெஞ்சுப் படைத் தளபதிகள் துணையுடன் சின்னமலையும் அவருடன் வந்த இளை ஞர்களும் சிறப்பாகப் போர்ப் பயிற்சி பெற்றனர். 1000 கொங்கு இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உயர்ந்த பயிற்சி அளிக்கப்பட்டு, அந்தப் படை 'கொங்கு படை' என்று அழைக்கப்பட்டது.


தீரன் சின்னமலை திப்புசுல்தானின் படைத் தலைவர்களில் ஒருவராக ஆக்கப்பட்டார். வெள்ளையரை எதிர்த்து சீரங் கப்பட்டணத்தில் நடைபெற்ற இறுதிப் போரில் 4.5.1799ல் திப்பு வீர மரனத்தைத் தழுவினார். புரட்சி இயக்கம் தனது பணி யினைத் தொடர்ந்தது.

### சின்னமலையுடன் சென்ற முஸ்லிம் வீரர்கள்

விருப்பாட்சி கோபால நாயக்கர் விருப்பப் படி மைசூர் தளபதி தூண்டாஜி வாக்கிடம் திப்புசுல்தானின் படைத் தலைவராக இருந்தது மைசூரில் அனு பவம் பெற்றிருத்த சின்னமலை தூதராகச் சென்றார்.

(செ. இராசு. வெள்ளையரை எதிர்த்து வீரப் போர் புரிந்த தீரன் சின்னமலைக் கவுண்டர், சென்னை, 1999, பக்கம் 70)


இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு....!




வேர்கள் வெளியீட்டகம்

- மட்காவ்ன் (கோவா) குண்டு வெடிப்பு (2009):

2009ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் தேதி தீபாவளிக்கு ஒரு நாள் முன்பு மட்கால்ன் நகரைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இந்துக்கள் ஒன்று கூடும் இடத்தை வெடிகுண்டு வைப்பதற்கென தேர்வு செய்திருந்தார்கள், சம்பவ இடத்தில் ஒரு கைப்பையை வைத்து விட்ட்டிருந்தார்கள். அதில் கான் மார்கெட் என அச்சிடப்பட்டிருந்தது.

- அந்தப் பையில் முஸ்லிம்கள் பயன்படுத்தும் அத்தர் நறுமணக் குப்பிகள் இருந்தன.

அதாவது திட்டமிட்டப்படி இந்தக் குண்டு வெடித்திருந்தால் நூற்றுக்கணக்கான அப்பாவி இந்துக்கள் மாண்டிருப்பார்கள். காவல்துறையின் சந்தேகம் உடனடியாக முஸ்லிம்கள் மீது தான் விழும். முஸ்லிம்கள் பலர் சிறைப்பட்டிருப்பார்கள். அவர்களுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகள் புனையப்பட்டு படுபயங்கரமான விஷயங்கள் ஊடகங்களில் பரப்பப்பட்டிருக்கும். அவையாவும் குற்றப்பத்திரிகையாக தாக்கல் செய்யப்படும். அவையும் ஊதி ஊதி பெருக்கப்படும். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இவையாவும் பொய்யானவை, உமையான குற்றவாளிகளை காவல்துறை கைது செய்யவில்லை என்று நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்யும்.......

- இந்த நூலிலிருந்து

விலை ரூ.30/-

படியுங்கள்! நாடு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்!

பாசிசத்தை மாய்க்கவும் - பாரதத்தை பாதுகாக்கவும் முன் வாருங்கள்

போன் : 7401213394 / 7358278146 / 8148129887



# சுதந்திரப் போரில் கோவை புரட்சியும் முஸ்லிம்களும்...

**காவிரிக்கு** வடக்கே கான்-இ-ஜகானும் புரட்சிவீரன் முஹம்மது ஹசமும் (1800) தென்னகத்தில் வெள்ளையரை எதிர்த்துப் போர்க் களத்திலேயே தீரன் திப்பு சுல்தானும், வீரப் போரிட்ட வீரபாண்டிய கட்டபொம்ம னும் வீழ்ந்ததற்குப் பின்னரும் ஆங்கிலே யரை எதிர்த்துப் போர் நடத்திட தென்னாட் டில் முயற்சிகள் நடந்தன.

### திண்டுக்கல்லில்

மதுரை பகுதியின் சார்பில் மானங்காத்த மருது பாண்டியரும், திண்டுக்கல் திருச்சி பகுதிகளின் சார்பில் விருப்பாட்சி (Virupakshi) பாளையக்காரரும் சிறந்த ராஜ தந்திரியுமான கோபல நாயக்கரும் (Gopala Nayak), கோயம்புத்தூர் சேலம் பகுதிகளின் சார்பில் கான்-இ-ஜகான், கேரள வர்மா என்ற (Kerala Varma) பழாசி அரசன் (Rajesh of Pazhassi) மலபார் பகுதியின் சார்பிலும், கிருஷ்ணப்ப நாயக்கர் மேற்கு மைசூரிலும், மராத்திய மாவீரன் தூண்டாஜிவாக் (Dhoontaji Wang) கன்னட நாட்டின் பகுதியிலும் தலைமையேற்று வெள்ளையரை எதிர்ப்பது என்று முடிவெடுத் தனர்.

### கான்-இ-ஜஹான்

கான்-இ-ஜஹான் (Khan-i-Jahkhan) மூதூரைச் (Mudhoor) சேர்ந்தவர் தீரன் திப்பு சுல்தானின் குதிரைப் படையில் தளபதியாகப் பணி புரிந் தவர். வடக்கு தெற்கு புரட்சி அமைப்புகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

### மராத்தியப் பகுதிக்குத் தூதுக்குழு

வெள்ளையரை எதிர்த்து புரட்சி நடத்திட பெரும் திட்டம் தீட்டப்பட்டது. அது குறித்து கருத்துப் பறிமாற்றம் செய்து கொள்ளவும், புரட்சிப் படையினரை திரட்டிடவும் மராத்தி யப் பகுதிக்கு தூதுக்குழு சென்று வந்து கொண்டிருந்தது.

### ரிஷா சாகிப்

திண்டுக்கல் கோபால் நாயக்கரிடம் கருத்துக் களைக் கேட்டதற்குப் பின்னர் அப்பாச்சிக் கவுண்டரும் வெங்கட ரமணாவும் மராத்தியப் பகுதிக்கு மூன்றா வது தூதுக்குழுவை அனுப்பிட முடிவெடுத்தனர்.

கான்-இ-ஜஹான் தன்னுடைய ஆதரவினைத் தெரிவித்ததோடு, தன்னுடைய மருமகன் ரிஷா சாகிப்பை (Riza Sahib) தன்னுடைய பிரதிநிதி யாக தூதுக் குழுவில் அனுப்பி வைத்தார் தூதுக்குழுவினர் திண்டுக்கல்லிருந்து கிளம் பினர். மூதூருக்குப் பக்கத்திலுள்ள நங்கீ குட்டி (Nugges) என்ற இடத்தில் தூதுக்குழுவை சந்தித்தனர். வீரத்தளபதி கான்-இ-ஜஹான் கலந்தாலோசித்தனர். பெரும்பாலான பிரதி நிதிகள் கலந்துகொண்டு எல்லாப் புரட்சி அமைப்புகளுக்கும் நல்ல முறையில் செய்தி



vaigarai velicham official

அறிவித்து, முடிவோடு சென்ற தூதுக்குழு இதுவேயாகும்.

(பொன். முத்தூரமலிங்கம், தென்னாட்டுப் புரட்சி, சென்னை 1990)

### தூண்டாஜி வாக்

மராட்டிய மாவீரன் தூண்டாஜிய வாக் (Dhoondaji Wang) நல்ல மனஉறுதி உயர்ந்த செல்வாக்கும் பெற்றிருந்தாலும் சிமோகா பகுதியிலுள்ள சென்னச்யைச் சார்ந்தவர். கி.பி. 1780ல் ஹைதர் அலீயின் படையில் குதிரை வீரராக பணியில் சேர்ந்தவர். பின் அதிலிருந்து விலகினார். தீரன் திப்பு சுல்தானால் சமாதானம் செய்யப்பட்டு, திரும்பவும் மைசூர் படையில் பணியாற்றினார். திப்பு மறைவிற்குப் பின்னர் மராத்தியப் பகுதிக்குத் தப்பிஓடிய தூண்டாஜி வாக் அங்கிருந்து கொண்டு திப்புவினுடை படையில் பணியாற்றிய வீரர்களோடு தொடர்பு கொண்டும் ஆங்கிலேயர்களால் மைப்படுத்தப்பட்ட மைசூர் மக்களோடு தொடர்பு கொண்டும் 5000 குதிரை படை வீரர்களையும் சேர்த்து வெள்ளையரை வீரா வேசத்தோடு எதிர்த்திட துணிந்தார் மன்னர் (King of Two Worlds). இந்த இரண்டு உலகெங் கிலும் தன்னைப் பிரகடனப்படுத்திய தூண்டாஜி வாக்கின் புரட்சிக்காரர்களுடன் மைசூரிலுள்ள எல்லா இஸ்லாமியர்களும், சேர்ந்து கொண்டனர்.

(Madras Council, 3 June 1800, Military Consultations, Vol. 269, P கிரிக்கோட்டை சந்திப்பு 3259)

### கிரிக்கோட்டை சந்திப்பு

மூதூரிலிருந்து தூதுக்குழுவினர் வடக்கு நோக்கிக் கடும் பயணம் மேற்கொண்டனர்; எதிரிகளின் பார்வையிலும், துரோகிகளின் கண்களிலும் அகப்படாமல் தூண்டாஜி வாக் முகாமிட்டிருந்த கிரிகோட்டைக்கு (Giri Kottai) தேசியப் புரட்சியாளர்கள் (Patriots) சென்றனர். வெள்ளையரை வீழ்த்துவதற்கான திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் கருத்துப் பரிமாற் றங்கள் நடைபெற்றது. அப்போது புரட்சி தூதுக் குழுவினரிடம் கோவைப் பகுதியிலிருந்து ஏற்கெனவே தீரன் சின்னமலை (Chinnan Gour) தம்மைச் சந்தித்ததாகவும், அந்தப் பகுதியில் புரட்சியினை தொடங்கி அவரைத் தலைமை தாங்கிடத் தான் அனுமதித்து அனுப்பியதாகச் சொன்னார் தூண்டாஜி வாக்.

### காவிரிக்கு வடக்கே கான்-இ-ஜஹான்

தூண்டாஜி வாக்கினைச் சந்தித்த தூதுக் குழுவினர் ஓரளவே செல்வாக்குப் படைத்த சின்னமலைக்கு பெரும் பொறுப்பை வழங்கி விட்டதாக எடுத்துக் கூறினர்; அத்தோடு செல்வாக்கு படைத்தவர்களும், பலம் பொருந்தி யவர்களும் தங்கள் பக்கமே இருப்பதாகவும் தெரிவித்தனர். எல்லாப் புரட்சியாளர் களும் ஒத்துக்கொள்ளக் கூடிய ஒருவரை தலைமைப் பொறுப்பிற்கு நியமித்திருக் கலாம் என்றும் கூறினர். தெற்குச் சீமையிலே வெள்ளையரை எதிர்த்து போர் புரியத்தலைமை தாங்கும் பெரும் பொறுப்பை ஏற்றுச் செயல்படப் பொருத்த மானவர் கான்-இ-ஜஹான் தான் என்றும் கூறினார்கள். இந்தப் பேச்சு வார்த்தைக்குப்பின் தமிழகத்தில் காவிரி நதிக்கு வடபுறமுள்ள பகுதிகளுக்குப் புரட்சி அமைப்புகளின் தலை வராக கான்-இ-ஜஹான் நியமிக்கப்பட்டார். (காவிரி நதிக்கு தென் பகுதி முழுமையும் புரட்சி அமைப்புகளின் நடவடிக்கைக்கு மானங் காத்த மருதுபாண்டியர் தலைமையேற்று நடத்தினார்.) என்று வரலாற்றாசிரியர் கு. ராஜய்யன் தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

(K. Rajayyan, South Indian Rebel- lion, the First War of Independence. Mysore. 1971, p. 111)

### புரட்சிக்குழுவின் தலைவர்

மூதூருக்குத் திரும்பி வந்த அப்பாச்சிக் கவுண்டரும், வெங்கடரமணய்யாவும் கான்-இ-ஜஹான் புரட்சிகுழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விவரத்தை அறிவித்து பெரிதும் பாராட்டினார்கள். தூந்தாஜி வாக் கொடுத்தனுப்பிய கடிதங்களும் அவரிடம் கொடுக்கப்பட்டது. பின்னர் இத்தூதுக்குழு திண்டுக் கல்லுக்குச் சென்றது.

கான்-இ-ஜஹானின் இரண்டாவது மருமகனை அவர்களுடன் அனுப்பி வைத்திட விருப்பாச்சியில் அந்தக் குழுவினர் தங்கியிருந் தனர். விருப்பாச்சி கோபால் தங்குவதற்கு ஏற்பாடு செய்தார். நாட்டின் மற்ற இடங் களுக்கு புரட்சிச் செய்திகள் பறந்தன. தலை மல்லா (Thalmallah)விற்குச் சென்ற புரட்சியா ளர்கள் ஆங்கிலேயர்களால் கைது செய்யப் பட்டனர்.

(Confessoin of Appaji Gour, Board of Revenue, 16 June 1800, Proceedings, Vol/ 255. PP/ 5594-5599)

### நாடெங்கும் புரட்சிக் குழுக்களின்

*சீரிய நடவடிக்கைகள், புரட்சிக் கூட்டமைப்பில் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தின. புரட்சிக் குழுவினர் இந்து. முஸ்லிம் என்ற பாகுபாடின்றி வேற்றுமையில் ஒற்றுமை கண்டனர். வீரத் தளபதிகள் கான்-இ-ஜஹானும் மானங்காத்த மருதுபாண்டியரும் தமிழகத்தில் காவிரிக் கரைக்கு வடக்கிலும் தெற்கிலும் வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் நடத்திட வரிந்து கட்டிக்கொண்டு முன் நின்றதை வரலாற்றில் தெளிவாகக் காணமுடிகின்றது.*

### புரட்சித் திட்டங்கள்

*ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் நவடிக்கையை புரட்சிக் கூட்டத்தினர் துவக்கினர். வெள்ளையரை எதிர்த்துப் போர் நடவடிக்கைகளை கவனித்திட இராமநாதபுரம் பகுதிக்கு முத்துக் திருப்பத்தேவரும், தஞ்சாவூர் பகுதிக்கு ஞானமுத்துவையும் மருதுபாண்டியர் நியமித்தார்.*

(Madras Council, 1 December 1801, Military Consultations, Vol. 289 P. 7754.)

### சத்தியமங்கலம்

*கோபால் நாயக்கர், அப்பாச்சிக் கவுண்டர், நீலப்பக் கவுண்டர், காரித் தம்பி, வெங்கடர மணய்யா ஆகிய புரட்சித் தலைவர்கள் ஆயுதம் தாங்கிய புரட்சி வீரர்களோடு சத்தியமங்கலத்தில் கூடினர்.*

*சத்தியமங்கலத்திலுள்ள மலைப் பகுதிகளைச் சாதகமாக்கிக் கொண்டு வெள்ளையர் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப் புரட்சித் தளபதி கான் - இ-ஜஹான் ஆணையிட்டார்.*

### கோயம்புத்தூரைத் தாக்கிட

*ஆயுதம் தாங்கிய புரட்சிப் பெரும் படையோடு விருப்பாச்சி மலையில் முகாமிட்டுக் கொண்டிருந்த கான்-இ-ஜஹான் கோயம்புத்தூரிலிருந்து வெள்ளையரைத் தாக்கிடத் தயாரானார்.*

(Confessoin of Appaji Gour, Board of Revenue, 16 june 1800, Proceedings, Voll 255. PP/5594-5599)

### கேரள வர்மா

*மலபார் தலைவர்கள் பெரியா* (Peria) *என்ற இடத்தில் இரண்டு முறை கூடிப் பேசினார்கள். பழசி அரசன் என்று மக்களால் அழைக்கப்பட்ட மலபார் கோட்டையாட்டுக் குடும்பத்தைச் சார்ந்த இளவரசன் கேரளவர்மா, முதல் முறை நடந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொண் டார். புரட்சித் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட புரட்சித் தலைவர்களுக்கு ஒவ்வொரு பகுதியாகப் பிரித்துக் கொடுக்கப் பட்டது.*

### குன்ஹியாமி மாப்பிள்ளை

*எழம்பலம் குஞ்சனுக்கு கோட்டையாற் றுப் பகுதி கொடுக்கப்பட்டது. வயநாடு எடத்தரா குஞ்சனுக்குக் கொடுக்கப்பட்டது. கார்த்திநாடு செங்கோத்திரி அம்புவுக்குக் கொடுக்கப் பட்டது, ரெண்டாற்றா பகுதி குன்ஹியாமி மாப்பிளாவுக்குக் கொடுக்கப்பட்டது.* (Renda tara was entrusted with Kunhya mi Mopilla)

### ஹைதர் குட்டி

*கஞ்சோட் நம்பியார், ஹைதர் குட்டி ஆகியோருக்கு இரவிநாடு புரட்சிப் படையினை வழி நடத்திச் செல்லும் பொறுப்பு வழங்கப்பட்டது.*

### மஹதாப்கான்

*பெல்நாட்டின் தலைவர் கிருஷ்ணப்ப நாயக்கர் கன்னடத்திலுள்ள விட்டல் ஹெக்டே, சுப்பராவ், மஹதாப்கான்* (Mahatab khan) *ஆகியோருடன் உடன்பாடு செய்து கொண்டார்.*

(Madras Council, 24 July 1800, Political Con sultations, Vol. 1. PP 274-277)

*மைசூரின் வடபாகத்தில் தூந்தாஜி வாக் புரட்சி படைகளுக்குத் தானே தலைமை ஏற்றார்.*

### 29.4.1800

*வெள்ளையரை எதிர்த்துப் புரட்சிக்கான ஏற்பாடுகளைச் செய்து முடித்தபின், புரட்சித் தலைவர்கள் எந்த இடத்தில், எந்த நாளில், புரட்சியினைத் தொடங்க வேண்டுமென்று முடிவு செய்திட விருப்பாட்சியில் 29.4.1800 கூடினர். கோபால் நாயக்கர் அக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.*



vaigarai velicham official

### கோயமுத்தூரைத் தாக்கிட கான்- இ-ஜஹான்

*தென்னகத்தின் தெற்கு வடக்குப் புரட்சிக் குழுவின் தலைவர்கள் கலந்துகொண்ட, வெள்ளையரை எதிர்த்து நடக்கவிருக்கின்ற புரட்சிக்கான திட்டங்களுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்ட கூட்டம் அது என்பதால், தென்னிந்திய புரட்சி கூட்டமைப்பின் முக்கிய மான கூட்டமாக இது வரலாற்றில் கருதப்படு கிறது. இந்தக் கூட்டத்தில், ஆங்கிலேய ரின் பலம் பொருந்திய கோயமுத்தூர் இராணுவக் கோட்டையைத் தாக்கி அழிப்பது என்று முடிவு செய்யப்பட்டது,*

*வீரத்தளபதி கான்-இ-ஜஹான் கோவை செல்லும் புரட்சி படையினருக்கு உறுதுணை யாக 4000 குதிரைப் படையுடன் குஜல்குட்டிக் கணவாய்க்கு வந்துவிடுதாக அப்போது தெரிவித்தார்.*

(8.Hurdis, 8 June 1800, Report to the Board of Revenue, Individual Papers no 34) (Confession of Appaji Gour, Board Revenue, 16 June 1800, Proceedings, Vol, 255 P.5599)

*கோவைப் புரட்சியில் பங்கெடுத்திட புரட்சிப்படை வீரர்களைத் திரட்டியும் போருக் கான ஆயத்தங்களையும் செய்து கொண்டிருந்த கான்-இ-ஜஹான் வெள்ளையர் எதிர்ப்புப் போரில் வீரச் சாவைத் தழுவியிருப்பார்; அவர் புரட்சி வீரர்களைத் தயார் செய்து கொண்டி ருந்த செய்தியை பின்னாளில் ஆங்கில இராணு வத்தில் அகப்பட்டு, நீதிமன்றம் நடத்திய விசாரணையில் 8.6.1800ல் மொஹைதீன் கான் அளித்த சாட்சியம் உறுதிபடுத்துகிறது.*

(Mohiddin khan, declaration, 8 June 1800, Board of Revenue Proceedings, Vol. 255, PP 5752-5759)

### முஹம்மது ஹசம் (1800 ஜூன் கோவை புரட்சியில்)

*புரட்சியாளர்களின் ஆதிக்கத்திலுள்ள தென்கிழக்கு - வடமேற்கு மலைப்பகுதிகளுக்கு இடையே உள்ள கோயம்புத்தூர் இராணுவ முக்கித்துவம் வாய்ந்த இடமாகக் கருதப்பட்டது. இங்குள்ள கோட்டையையும், இந்த நகரத்தை யும் புரட்சியாளர்கள் கைப்பற்றுவதன் மூலம் ஆங்கில ஆதிக்கத்தை இப்பகுதியில் ஒழிப்ப தோடு புரட்சிக் கூட்டமைப்பிலுள்ள தமிழக-கன்னடப் பகுதிகளை இணைக்கும் தொடர்பு மையமாக கோயம்புத்தூர் அமையுமெனப் புரட்சியாளர்கள் கருதினார்கள்.*



**செ.திவான்**
வரலாற்றாசிரியர்

*கோவைப் பகுதி மக்கள் புரட்சிக் குழுவோடு கொண்ட ஆழ்ந்த ஈடுபாடுகளின் காரணமா கவும் புரட்சியாளர்கள் தங்களது திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கினார்கள்.*

### கர்னல் மெகாலிஸ்டர்

*கோயம்புத்தூரில் ஆங்கிலேயரின் இராணு வக் கோட்டை லெப்டிணன்ட் கர்னல் மெகா லிஸ்டர்* (Lieutenant colonel K.Macalister) *தலைமையில் பலத்த பாதுகாப்பில் இருந்தது; இதனை 3.6.1800 அன்று புரட்சிக் குழுவினர் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தனர். இராணுவக்கோட்டையில் இருக்கும் பிரிட்டீ ஷாரின் 5வது ரெஜிமண்ட்டின் குதிரைப் படையைத்* (Fifth Regiment of British Cavalry) *தாக்கிட, புரட்சியாளர்கள் கிராமங்களிலிருக்கும் படைவீரர்களை ஒன்று சேர்த்துக் கோயம்புத் தூருக்கு அருகில் உள்ள மலைப் பகுதியில் தயார் நிலையில் இருக்கச் செய்தனர். தாக்குதல் நடத்தவிருக்கும் புரட்சிப்படைக்கு சேக் உசேனை* (Shaik Hussain) *தலைமை ஏற்றுச் செல்லப் பணித்தனர்.*

*கோவையில் புரட்சிப்படை 30.4.1800ஆம் நாள் திண்டுக்கல் காட்டுப் பகுதிகளிலிருந்து ஐந்து புரட்சிப்படைப் பிரிவினர் ஆங்கில இராணுவ மையங்களைத் தாக்கிட கோவைக்குச்*

சென்று அதற்காக ஆயத்தமானார்கள். திப்பு சுல்தானின் மறைவிற்குப்பின் துவங்கப்பட்ட புரட்சியின் ஆரம்பக்கட்டம் இதுவாகும்.

தமிழகத்தில் வெள்ளையரை எதிர்த்து நடைபெற்ற இந்தப் புரட்சிக்கு வட பகுதியிலிருந்து எந்த ஆதரவும் அப்போது கிடைத்திடவில்லை. எல்லாப் புரட்சியாளர்களும் ஆயுதம் தாங்கியிருந்தனர். அவர்களது பயணம் ரகசியமாக இருந்தது. திப்புசுல்தான் படையில் போர் வீரர்களாகவும், தளபதிகளாகவும் பணியாற்றியவர்களும், விவசாயிகளும், இந்தப் புரட்சிப் படையில் பணிபுரிந்தனர்.

**முஹம்மது ஹசம்**

1800 மே மாதத் தொடக்கத்தில் முஹம்மது ஹசம் தலைமையில் புரட்சிப் படையினர் தாராபுரத்தை தாக்க முனைந் தார்கள். அப்போது தாலமல்லாவிலும் சத்தியமங்கலத்திலும் ஆயுதம் தாங்கிய புரட்சிப்படையினர் குவிந்துகொண்டிருந்தனர். தாராபுரத்தையும் சத்தியமங்கலத்தையும் நோக்கிச் சென்ற புரட்சிப் படையினர் தவிர எஞ்சிய படைவீரர்களை முஹம்மது ஹசம் (Mohammed Hasham), அப்பாச்சிக் கவுண்டர், சாமையா ஆகியோர் தலைமை ஏற்று கோயம் புத்தூரை நோக்கி வழி நடத்தி அழைத் துச் சென்றனர். தீரன் சின்னமலை இந்த வீரர்களுக்கு உரிய ஆணைகளை பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

**ஒசூர் புத்தே முஹம்மது**

அரவக்குறிச்சியைச் சேர்ந்த கௌரக் கவுண்டரும் (Kaurka Gour) ஒசூரைச் சேர்ந்த புத்தே முஹம்மதுவும் (Futteh Mohammed) தாராபுரத்தை நோக்கி படையை வழிநடத்திச் சென்றனர்.

**ருனனுல்லா கான்**

இச்சப்பட்டியைச் சேர்ந்த ருனனுல்லா கான் (Ronoun-Ullah-Khan) தலைமையில் புரட்சிப் படையின் இரண்டாவது பிரிவு காங்கேயத்தை நோக்கிய நடத்திச் செல்லப்பட்டது.

**தாக்குதல் திட்டம்**

1800 ஜூன் 3ம் நாள், நகரின் முக்கியமான இடங்களிளெல்லாம் ஆங்கிலேய எதிரிகளைத் தாக்குவதற்குப் புரட்சிப் படைகள் தயார் நிலையில் இருந்தன. முஹம்மது ஹசம் தலைமையிலான முதல் தாக்குதல் நடத்தப் படையினரின் வரவைப் புரட்சிப் படையினர் எதிர் நோக்கியிருந்தனர்.

(B.Hardis, 8 June 1800, letter to Revenue, Individuval Papers, 3

**தாசில்தார் தந்த தகவல்,**

நன்கு ஆலோசிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு கோயம்புத்தூர் இராணுவக் கோட்டை முற்றுகையிடும் திட்டம் ஆங்கிலேயரும் இரகசிய ஒற்றர்கள் மூலமாகத் தெரிந்தது.

இதனை அறிந்த தாசில்தார் தகவல் ஆங்கிலேயர் மீது தாக்குதல் தொடங்குவதற்கு சில மணிநேரங்கள் முன்பு கிடைத்துவிட்டது உடனடியாக ஆங்கிலேயர் ஆயத்தப்படுத்தப்பட்ட ஐரோப்பிய மற்றும் ராஜபுத படை வீரர்களை முக்கிய இடங்களை பாதுகாவலுக்கும் போருக்கும் தயாராக வெள்ளையர் தளபதிகள் வைத்து கொண்டனர். கோவை நகரின் பாட்டிற்குறியவர்களை அரசாங்கத்தின் இராணுவம் கைது செய்தது.

**மலைப்பகுதியில் மாவீரர்கள்**

நீண்ட நாட்களாகத் தீட்டப்பட்ட திட்டப்படியான கோயம்புத்தூர் முற்றுகைத் திட்டம் தகுந்த பலனைத் தரவில்லை. தேசியப் புரட்சி வீரர்கள் கோவையிலிருந்து பத்து மைல்களுக்கு அப்பாலுள்ள மலைப்பகுதிக்குச் சென்று தூங்கினார். மறைந்திருந்து கோயம்புத்தூரை மீண்டும் தாக்குவதற்கு தங்கள் தலைவர்களிடமிருந்து செய்தி எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று கருதிய பிரிட்டிஷார், தீவிர தேடுதல் வேட்டையில் இறங்கினர்.

தாராபுரத்திலும் சத்தியமங்கலத்திலும் - பிரிட்டிஷாரின் இராணுவ முகாம்களைத் தாக்கும் திட்டம் பலனளிக்காது போயிற்று. தல்லாமுல்லாவில் புரட்சி வீரர்கள் ஆங்கிலேயப் படையினரைத் தாக்கி வெற்றி பெற்றார்கள்.

(Board of Revenue, 23, June 1800, Proceedings, 255, P 5752)

**பிடிபட்ட போர்த் தளபதி**

ஆங்கிலப் படையினர், காட்டுப் பகுதியில் மறைந்திருக்கும் புரட்சிப்படையினரைப் பிடிப்பதற்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் காட்டுப் பகுதியில் புரட்சியாளர்கள் பலரைக்



vaigarai velicham official

கைது செய்தனர். அவ்வாறு கைது செய்யப்பட்ட வர்களில் முக்கியமான தளபதி முஹம்மது ஹசமும் ஒருவராவார்.

(B.Hardis, 8 June 1800, Letter to Board of Revenue, Individuval Papers, Nos. 34-35)

**முக்கிய கடிதங்கள்**

நாட்டுப் பற்றோடும் சுதந்திர தாகத்தோடும் போர்க் களத்திலிருந்து முஹம்மது ஹசமை வெள்ளை கம்பெனியார் கைது செய்யப்படு வதற்கு முன்னர் அவரிடம் ஏராளமான முக்கியக் கடிதங்கள் இருந்தன.

அவைகள் புரட்சியாளர்களின் தலைவர் களால் கொடுத்து அனுப்பப்பட்டிருந்தவை, இவைகளை வெள்ளையர் கண்டு பிடித்து விட்டால் புரட்சித் திட்டங்கள் குறித்த விபரங்களை அறிந்து கொள் வார்களோ என்று எண்ணிய அந்த மாவீரர் தன்னிடமிருந்த ரகசியக் கடிதங்களை அழித்தெறிந்தார். அவரைப் பிரிட் டிஷ் ராணுவத்தினர் எவ்வளவோ துன்புறுத் தியும், அவரிடமிருந்து புரட்சிக் கூட்டத்தின் திட்டங்கள் பற்றி எந்தவிதத் தகவலையும் பெற முடியவில்லை.

**வீரச் சாவைத் தழுவிய வீரர்**

“Who carried with him several letters given by the leaders, but before he fell into the hands of the enemy he destroyed all of them.

The English Promptly placed Mohammed Hasham in irons and decided to interrogate him in order to obtain as he was, he thwarted the intention of the aliens by committing suicide on the 8th june 1800, by cutting his throat”

(B.Hardis, Board of Revenue, 16 june 1800, Proceeding Vol. 255 PP.5576-5583)

முஹம்மது ஹசமை ஆங்கிலேய ராணுவத் தினர் இரக்கமற்ற வகையில் விசாரணை செய்து கேள்விகள் கேட்ட போதும் கொள்கையில் உறுதியாக நின்ற முஹம்மது ஹசம் 8.6.1800ல் தனது கழுத்தை தானே வெட்டிக்கொண்டு வீரச் சாவினைத் தழுவிக் கொண்டார்.

அரசு ஆவணங்கள் இன்னும் அந்த வீரத் திருமகனின் வரலாற்றைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது.

**தூக்கிலே தொங்கிய தீரர்கள்**

(கோவைப் புரட்சியில் 1800) கோயம் புத்தூரை முற்றுகையிட்டு, அதன்பின் ஆங்கி லேயே இராணுவக் கோட்டையினை ஆக்கிர மித்துக் கொள்ளும் திட்டம், விடுதலைப் புரட்சி யாளர்களால் வெற்றிகரமாக நடத்திட முடியாது போயிற்று. கோவைப் புரட்சி தொடர்பாக பிடிபட்ட சுதந்திரப் போராட்டத் தளபதிகள் இராணுவ முறைப்படி விசாரணைக்கு உள்ளாக் கப்பட்டார்கள்.

**எட்வர்டு கிளைவ்**

தமிழகத்தில் கம்பெனியாரின் ஆதிக்கத்தில் அப்போது கவர்னராக இருந்தவர் லார்டு எட்வர்ட் கிளைவ் ஆவார்.

வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு இந்தியத் திருநாட்டில் வித்தூன்றிய இராபர்ட் கிளைவ் வின் (29.9.1725 - 22.11.1774) மகன்தான் எட்வர்ட் கிளைவ். சென்னையின் கவர்னராக எட்வர்ட் கிளைவ் 5-7-1799 முதல் 30-3-1803 வரை பதவியில் இருந்தார்.

(LT.Col. Henry Davison Love, Vestiges of old Madras, Indian Record Series, London, 1913, Vol.2. P. 529)

**மாவீரர்களுக்கு மரண தண்டனை**

கோவைப் புரட்சி தொடர்பாக பிடிபட்ட தேசியப் புரட்சி வாதிகளுக்கு உயர்ந்த அளவு தண்டனை வழங்குமாறும், பிடிபட்டவர்கள் அனைவரையும் இராணுவ முறைப்படி ஒரே விசாரணையில் எது அதிக அளவு தண்டனை என்று கலெக்டர் கருதுகிறாரோ அதை தண்டனையாக, அல்லது மரண தண்டனையை உடனடியாக வழங்கிடுமாறு கவர்னர் எட்வர்டு கிளைவ், சேலம் கலெக்டருக்கு ஆணை பிறப்பித்தார்.

**வில்லியம் மாக்லியார்டு**

கவர்னரின் ஆணைக்கிணங்க சேலம் மாவட்டக் கலெக்டர் வில்லியம் மாக்லியார்டு, கோவை புரட்சியாளர்கள் 42 பேர்களை இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தினார்.

**முஸ்லிம் தீரர்கள்**

ஷம்னஸ்கான் (Sumnus Khan) (Board of Revenue, 10th, July 1800, proceedings, Vol.256, PP6115-6116) மொஹைதீன்கான் (Mohe-Ud-DinKhan) (Mohiuddin khan, Declaration, 8th June

1800, Board of Revenue Proceedings, Vol. 255 PP 5752-5759)

*தாராபுரம் செய்யது இமாம்* (Syed Imam) *பீர் சாகிப்* (Peer Saib) LOIT GOT IT GOT (Mann Khan) *ஷேக்மியான்* (Sheik Mean) (Shaik Mean, 8th June 1800 declaration, Board of Revenue proceedings, Vol. 255 PP 5759-5761)

*கோவை கலீபா அமீர்தார்ருனா முஸ்டாக் கான்* (Runna Mustah Khan), *குலாம் ஹைதர் கான்* (Gulaum Boy Hyder Khan), *சுமேஷ் கான் அலி சாகிப்* (Sumash Khan Ali Seib), *கொடிக்குள் சேக் அலி* (Codikul Sheik Ali), *செலார் கான்* (Celar Khan), *அலி சாகிப்* (All Seib), *முடாஸ் சாஹிப்* (Mudda Seib), *முஹம்மது சாஹிப்* (Muhammad Selb), *மீர் கமருதீன்* (Meer Commerudeen Khan), *சேக் மொகிதீன்* (Shaik Mohilud-Deen), *கம்மரூதீன்* (Cummeru deen), *சோலைமலை அமில்தார் பதே முஹம்மது* (Futteh Mohammad), *சேக் மதார்* (Sheik Madar), *சேக்புத்தின்* (Sheik Bud-Din), *குலாம் உசேன் ஷேக் அலி* (Gulam Hussain Sheik Ali), *பீர் முஹம்மது* (Peer Moha mmad), *குலாம் அலீ* (Gulam Ali), *சோட்டார் அப்துல் காதர்* (Chottar Abdul Kader), *முஹம்மது ஷெரிப்* (Mohammad Sheriff), *ஷேக் மீரா* (Sheik Meera), *ஷேக் முஹம்மது தெலார்வர்* (Sheik Mohammed Delarvar), *பீர் முங்கப் அலி* (Peer Mungappa Ali), *பீனா சேக் மியான்* (Peena Sheik Mean), *சையத் முகர்தீன்* (Syed Mohir deen), *ஹைதர் கான்* (Hyder Khan), *மொஹிர்தீன்கான்* (Mohirdeen Khan), *சேக் முஹம்மது* (Sheik Mohamed), *டெட்வார் சேக் இமாம்* (Detawar Sheik Imam), *பீனா சேக்மியான்* (Penna Sheik Mean), *ஒசூர் பத்தேமுஹம்மது* (Futteh Moham med), *ருனனுல்லாகான்* (Ronoun-Ullah Khan).

*ஆகிய 38 முஸ்லிம் தீரர்களுடன், நான்கு ஹிந்து வீரர்களும் விசாரிக்கப்பட்டனர். அனைவருக்கும் இராணுவக் கோர்ட் மரண தண்டனையை விதித்தது.*

(Hyder Khan, 8 June 1800 declaration to the Court Matial, board of Revenue proceedings,Vol. 255 PP 5761-5766)

*புரட்சிப்பகுதி மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கையாகத் தாராபுரத்தில் எட்டு நபர் களையும் சத்தியமங்கலத்தில் ஏழு நபர்களையும் கோயம்புத்தூரில் ஆறு நபர்களையும் மற்றவர் களைப் பல்வேறு புரட்சி மையங்களிலும் பொது இடங்களிலும் வைத்து காட்டுமிராண்டித் தனமாக தூக்கிலிட்டு கொன்றார்கள் ஆங்கிலேயர்கள்.*

(Board of Revenue 18 september 1800, proceedings, Vol. 262 PP 8093-8095)

*இத்தகைய கொடிய நடவடிக்கைகளால் மக்களின் சுதந்திர தாகத்தைத் தணிக்க முடிய வில்லை.*

*சேலம், கோயம்புத்தூர் பகுதி மக்கள் தொடர்ந்து ஆங்கிலேய எதிர்ப்பு நடவடிக்கை களில் ஈடுபட்டு பல்வேறு பகுதிகளில் போராட் டங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டி ருந்தது.* (Ibid, 2 January 1801, proceeding 279.9)

*இந்திய சுதந்திரப் போரில் தர்டி இன்னு யிரைத் தாரை வார்த்தி முஸ்லிம் தீரர்களின் பங்களிப்புக்கும், எந்த விதத்திலும், எந்த எள்ளின் மூக்கின் முனையளவிலும் குறைந்த தில்லை என்பதனை செய்துக் காட்டும் வகையில் கோவைப் புரட்சியின்போது தூக்கிலே தொங்கிய தியாகிகள் 42 பேர்களில் 32 பேர்கள் என்பதனை சரித்திரத்தின் பக்கங்களிலிருந்து அறிகிறபோது மெய்சில்கிறது.*

*இவைகளை சமுதாயத்தின் முன்வைக்கும் முயற்சியாக 'இந்தியச் சுதந்திரப் போரில் தமிழக முஸ்லிம்கள்' சுமார் 500 பக்கங்களைக்கொண்ட நூலினை எழுதிட முயன்று. உடல் நலம் பொருள் நலம் இவைகள் குன்றிப்போனதால் அந்த முயற்சியும் தொடராமல் தொய்வேற்பட்டு துலங்காமல் ஆண்டுக் கணக்கில் நிற்கிறது.*

*சமுதாயத்தில் எவ்வளவோ செலவுகள், எதற்கெல்லாமோ செலவுகள் ஆனால் சரித்திர ஆய்வு மேற்கொண்டு சமுதாயத்தின் நலனுக்காக உழைத்தில் ஆ! ய்வாளார்கள் கவனிக்கப்படாது. புரவலர்களால் போற்றப்படாது போவதாதான் நம் தியாக சரித்திரம் மெல்லமெல் மறைக் கப்படும் நிலையேற்பட்டுபோது வேகமாக ஒழிக்கப்படும் நிலைக்கு வந்துள்ளது.*

*இந்த அவல நிலையினை வாய்ப்ப வசதியும் நிறைந்தவர்கள் அறிவார்களா? ஆய்வாளர் களுக்கு, அவர்தம் பணிகளுக்கு உதவுவார்களா? தான் பதில் சொல்ல வேண்டும். அனைத்தையும் அல்லாஹ் அறிந்தவன்.* **- செ.தி**


vaigarai velicham official

# ஊமைத்துரையும் முஸ்லிம்களும்



**கவியோகி** சுத்தானந்த பாரதியார் சிவ கங்கைச் சீமையில் வாழ்ந்தவர். (ஜகன் மோகினி அச்சகத்தில்) 1959 மார்ச் 13ல், சென்னை, திருவல்லிக்கேணி அச்சிட்டு, ஊமையன் சண்டை எனும் நூலை 121 பக்கங்களில் 'வர்ணனை' நிலையில் தெற்குச் சீமையில் நடைபெற்ற சுதந்திரப் போராட்ட வரலாற்று நூலாக வெளியிட்டார்.

அதில் 108, 109வது பக்கங்களில், "ஊமை யனைக் காட்டிக் கொடுத்த சையத் காதர் சாயபுக்கு ஆறு பவுனும் ஒரு ஈட்டியும் கொடுத்தார்கள். கம்பெனி வெள்ளையர் ஆட்டுக் கூடையில் ஊமையன் இருப்பதாகச் சொன்ன ராமக் கோனாருக்கு ஒரு சாய வேட்டியும் பத்துப் பணமும் கிடைத்தன. பிரான் மலையில் துப்புச் சொன்ன சோலை மலைக்குச் தொண்ணூறு பவுனும் தோடாவும் கிடைத்தன. இப்படித் துரோகிகளுக்குச் சன்மானம் செய்த வெள்ளைக்காரர் புதுக்கோட்டை அரசருக்கு விருதும் ஊர்களும் அளித்தனர்.

ஊமையன் கோட்டை கம்பெனிப் பட்டா ளத்தின் பாசறையானது. முன்னும் பின்னும் துருப்புக்கள் காவல் வர ஊமையனை மணியாச்சி வழியாக பாளையங்கோட்டைக்குக் கொண்டு சென்றனர். அங்கே அவனைக் கடுஞ் சிறையிட்டனர்.

ஊமைத்துரையை சையத் காதர் காட்டிக் கொடுத்தாரா?

பத்து சிப்பாய்கள் எப்போதும் கண்ணும் காவலுமாக அங்கே இருந்தனர். ஊமையன் பிடிபட்ட செய்தி சென்னைக் கவர்னருக்கு அறிவிக்கப்பட்டதும் உடனே அவனைத் தூக்கில் போட உத்தரவு வந்துவிட்டது. ஊரெல் லாம் தண்டோராப் போட்டு செய்தி அறிவித்து சித்திரை மாதம் 18ம் தேதி பத்து நாழிகைக்கு ஊமையனைத் தூக்கில் போட்டனர்.

முருகா! நாட்டைக் காப்பாற்று' என்று சொல்லிக்கொண்டே ஊமையன் தூக்குமேடை ஏறினான். கயிறு இறுக்கப்பட்டது, இழுக்கப் பட்டது. ஊமையனுடைய வீரஆவி பிரிந்தது.

நாட்டிற்காக உயிர் சிந்திய ஆவேச தேசபக்தன் பாரதமாதாவின் பலி பீடத்தில் தன் ஆவியை அர்ப்பணித்தான். அவனுடைய உடல் பாளையங்கோட்டையில் புதைக்கப்பட்டது என்று கூறியுள்ளார். பாரதசக்தி நிலையம் சார்பில் வீரத் தேவன், சந்தனத் தேவன், இரத்தபலி, லண்டன் புரட்சி, புதுவையில் பூத்த புதுமை, தீப ஜோதி, வழிகாட்டி, இன்னும் பலப்பல நூல்களை எழுதியுள்ள கவியோகி சுந்தானந்த பாரதியின் பல நூல்கள் மறுபதிப்புச் செய்யப்பட்டும் வருகின்றன.

இந்த நிலையில் 1959ல் எழுதிய 'ஊமையன் சண்டை' நூலும் இன்னும் தமிழகத்தின் நூலகங்களில் உள்ளது.

எனவே இதில் ஊமையனை (ஊமைத் துரையை) சையத் காதர் காட்டிக் கொடுத்தார்

என்று எழுதியுள்ள செய்தி அப்படியே உள்ளது. எனவே அது குறித்த உண்மையினை வரலாற்றின் வெளிச்சத்திற்கு கொண்டுவர வேண்டியது காலத்தின் கட்டாயமான நிலையில் கட்டுரையினைத் தொடர்கிறேன். ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சி பெருவேந்தன் வீரபாண்டிய கட்டபொம்மனுடைய தம்பி ஊமைதுரைக்கு விசயத்துரை ஆறுமுகத்தம்மாள் புதல்வராக ஊமைத் துரை பிறந்தது 10.6.1772ல்..

(ஊமைத்துரை, எஸ். ஐயர், சென்னை 1991)

பெற்றோர் வைத்த பெயர் தளவாய்க குமாரசாமி. இவருடைய மனைவி சவுந்தரவடிவு. ஊமைத்துரைக்கு பின்னர் பிறந்தவர் துரைச்சிங்கம் அதன்பின் ஈசுவரவடிவு, துரைக்கண்ணு என்ற இரு சகோதரிகளும் இருந்தனர்

தளவாய்க் குமாரசாமி என்ற ஊமைதுரை வாய்சிறிது கொன்னல், ஆதலால் யாரோடும் இவர் அதிகமாய்ப் பேசமாட்டார். பெரும்பாலும் மவுனமாக இருப்பார். அதனால் ஊமைத்துரை என்று எல்லோரும் இவரை அழைத்தனர். இவர் காது கேளாத ஊமையர் என்று ஆங்கிலேயர்கள் எழுதி வைத்துள்ளனர்.

நல்ல உயரம், சிவந்த நிறம் மெலிந்த தேகம், உடல் ஒல்லியாக இருந்ததினால் தோற்றத்தில் கம்பீரம், வாட்போர், கல் எரிதல், குதிரைச் சவாரி, சிலம்பம் ஆகிய கலைகளில் அபார தேர்ச்சி.

நோயாளி போன்ற தோற்றத்தைக் கொண்டிருந்தாலும், தொல்லைகள் ஏற்படும் வேளைகளில் மிகுந்த மன வலிமையாகத் திகழ்ந்தவர் ஊமைத்துரை.

### மக்கள் தலைவன்

வேறொரு மனிதருக்கு இந்தக் குறைபாடு இருந்திருந்தால் எவ்வளவு ஊக்கத்தை இழந்திருப்பானோ அதற்கு நேர் மாறாக, ஊமைத் துறைக்கு சாதாரண மக்களிடம் அதுவே ஒரு சக்தி வாய்ந்த தன்மையாகப்பட்டது. ஊமைத் துறையின் ஒவ்வொரு செய்கைக்கும் மக்கள் கீழ்படிந்து நடந்தனர்.

முக்கியமான ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் நடைபெற்ற போதெல்லாம் ஊமைத்துறை, கட்டபொம்மன் நடத்திய எல்லாத் தாக்குதல்களிலும் ஊமைத்துரை பங்கேற்றார்.

புகழ் வாய்ந்த ஊமைத்துரையை ஆங்கியே இராணுவ வீரர்கள் எப்படியும் அழித்துவிட வேண்டும் என்ற ஆர்வத்துடன் இருந்தபோதிலும் ஒவ்வொரு போரிலும் அதிசயமாகவே தப்பிச் சென்றவர் ஊமைத்துரை.

பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன் வெள்ளையனை எதிர்த்து வீரப்போர் நடத்தியது 1.9.1799இல் இறுதியில் கயத்தாற்றில் புலிய மரத்திலே தூக்கு கயிற்றை முத்தமிட்டது. 16.01.1799இல்

### பாளையங்கோட்டை சிறை

துரைச்சிங்கம், குமாரசாமி, முத்தையா துரையாக, இராஜ பொம்முலு முத்துக்குமர சாமி, வீரராமுலு, விஜயராகவன், கொடிமேட்டூர் சின்ன மல்லு, ரணசிங்கு, வீர பொம்மு, ஜெயராமு, இராமனால் உள்ளிட்ட உறவினர்கள் பலருடன் பாளையங்கோட்டை சிறையில் இருந்தார்.

ஊமைத்துறை 2.2.1801இல் பாளைச் சிறையைக் கடந்து வீராவேகத்தோடு வெளியேறினார்கள். 8.2.1802ல் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைத் திரும்பவும் எழுப்பினார். 9.2,1802ல் கம்பெனிப்படை வந்தது. போர் புரியமாட்டமல் 10.2.1802இல் திரும்பிச் சென்றது. வெள்யைர்கள் படை மூன்று மாதங்கழித்து வேகமாக வந்தது. 24.5.1802 பாஞ்சாலங்குறிச்சிக் கேட்டை அழிந்தது. ஊமைத்துரை காயம் ஆறி 19.8.1802 கமுதி நோக்கிச் சென்றார். 1.7,1802இல் மருது பாண்டியரோடு சேர்ந்து கொண்டார்.

20.11.19802இல் ஊமைத்துரையின் தம்பி துரைசிங்கம் வெள்ளையர்களால் தூக்கிலிடப் பட்டார். 10.11.1801இல் வெள்ளையரோடு நடந்த போரில் தம்பி அகப்பட்ட போதிலும் தான் மட்டும் தப்பிச் சென்றார்.

வீரபாண்டிய கட்டபொம்மன் பத்து வருடம் பாஞ்சாலங்குறிச்சியை ஆண்டார். அவர் தம்பி ஊமைத்துரையோ பத்து மாதங்கள் அதனை ஆட்சி செய்தார். அவரது மறைவு குறித்து வரலாற்றில் சொல்லப்படும் செய்திகள் இதோ...

1955இல் சென்னை ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட 58 பக்கங்களைக் கொண்ட,


vaigarai velicham official

நூல் ஊமைத்துரை இதை எம்.எஸ். சுப்பிரமணி ஐயர் எழுதியுள்ளார். அதிலே அவர் கூறியிருப்பதாவது...

திண்டுக்கல்லிலே தங்கியிருந்தபோது வீரலக்கான் வந்து நடந்த விவரங்களை ஊமைத்துரையிடம் அறிவித்தான்.

முன்னும் (கட்டபொம்மன்) பின்னும் (துரைசிங்கம்) போயின. பின்பு நடுவே உள்ள கரும்பின் கணுப்போல நான் இருந்து என்ன பயன்? என்று எண்ணினார்.

"வீரர் கான்? வடகாசி போகின்றேன் விடை தாருங்கள் என்று கூறிக் கிடுகி நடந்தார். வடகாசி. நோக்கிச் சென்ற ஊமைத்துரை காசி விசுவநாதரைக் கண்டு தொழுதார். பின்பு இமயமலை சார்ந்து, தவயோகிகளைக் கண்டு வணங்கினார். அப்பால் நாட்டின் நான் கருதித் தாமும் தவயாகியாக அம்மையின்பால் அமர்ந்துவிட்டார். அவர் இமயம் சார்ந்தது 16.12.1801ல் (எம்.எஸ்.சுப்ரமணிய ஐயர்)

1961இல் வீரபாண்டிய கட்டபொம்மன் எனும் நு-ல் எம்.இ. வீரபாகு பிள்ளையால் எழுதப்பட்டது. 112 பக்கங்களைக் கொண்ட அந்த நூலில் 101,102இல் கூறுகிறார்.

"ஊமைத்துரை, சிறுமலை, சுருளிமலை, திண்டுக்கல் மலை முதலிய இடங்களில் சின்னார் மறைந்திருந்து பின்னர் மாறுகோலத்தோடு காசிக்குப் போய் அங்கு சிலகாலம் தங்கியிருந்து அதற்குப் பிறகு இமயமலைக்குப் போய் விட்டான் என்று தெரிகிறது. சிலர் துரை சிங்கத்தை பிடித்த பொழுதே ஊமைத்துரையையும் பிடிபட்டு விட்டான் என்றும் இருவரும் தூக்கில் இடப்பட்டனர் என்றும் எழுதியுள்ளனர்." (மெ.இ.வீரபாகு பிள்ளை)

**பாஞ்சாலங்குறிச்சியின் வீர வரலாறு**

நெல்லை எஸ்.எஸ்.மணி எழுதிய நூல், பக்கம் 14ல் "தம்பி துரைசிங்கமும் பிடிபட்டு பாஞ்சாலங்குறிச்சியில் தூக்கிலிடப்பட்டார். இதுகண்டு மனம் நொந்த ஊமைத்துரை வடதிசை நோக்கிப் பயணமானார் என கூறுகிறது" என்று எழுதியிருக்கிறார் ம.பொ. சிவஞானம்.

வீரபாண்டிய கட்டபொம்மன் என்ற தனது நூலில் ம.பொ.சிவஞானம் (1949) ஊமைத்துரையை 1801ம் ஆண்டு ஜூன் மாதம் 10ந் தேதி பாஞ்சாலங்குறிச்சியில் பீரங்கி மேட்டில் தூக்கிலிட்டுக் கொன்றனர் என்று குறிப்பிடுகின்றன். தி.நா.சுப்பிரமணியனும், சீரஞ்சீவியும் இது மாதிரியே குறிப்பிடுகின்றார் (தேதி குறிப்பிடவில்லை)

**ஆங்கிலேயர் கால ஆவணங்கள்**

பாஞ்சாலங்குறிச்சி பாளையக்கார சாமி நாயக்கரும், ஊமை குமாரசாமி நாயக்கரும் இன்னும் அவர்களது அறுபத்து ஐந்து தோழர்களும் திண்டுக்கல் சீமையிலிருந்து பாஞ்சாலங் குறிச்சிக்குத் திரும்பும் வழியில் வத்தலக்குண்டில் பரங்கியர் கைகளில் அகப்பட்டனர்.

(Military consultations,
Vol.288, 27.10.1801, P.7108)

பரங்கிகள் தடையனிலும் அவர்களை பாஞ்சாலங்குறிச்சி கோட்டை வெளியில் வைத்து 16.11.1801 அன்று சிரச்சேதம் செய்து கொன்றனர் என்று டாக்டர் எஸ்.எம்.கமால் தனது தனது மாவீரர் மருது பாண்டியர் நூலில் பக். 160ல் தெரிவிக்கின்றனர்.

**கம்பெனித் தளபதி இன்னிஸ்**

தோற்கடிக்கப்பட்ட பல்வேறு படைப் பிரிவுகளைச் சேர்ந்த வீரஞ்செறிந்த புரட்சியாளர்கள் தணியாத ஆத்திரத்தோடும் தோல்விகளால் மனந்தளராதும் மிகக் கடுமையான போராட்டத்தை தொடர மீண்டும் மலைகளில் ஒன்று கூடினர். எதற்கும் அஞ்சாத ஊமைத் துரையின் ஆணையேற்று (COMMANDED BY THE INDOMITABLE OOMATHURAI) தாக்குவதற்கான புதிய இடங்களைத் தேடி மிக விரைவாகத் திண்டுக்கல் பள்ளத் தாக்கிற்குச் சென்றார்.

கன்னிவாடி (KANNIWADI)க்கு அருகிலுள்ள சங்குளத்தில் (SHANKULAM) மேஜர் பரோஸ் (MAJOR BURROWS) தலைமையின் கீழ் நாட்டுக்கு தரைப் படையின் இரண்டாவது பிரிவு (SECOND REGIMENT OF NATIVE CAVALRY) கம்பெனித் தளபதி இன்ஸ் (INNES) நிறுத்தி வைத்தனர்.

ஆயுதம் தாங்கிய புரட்சியாளர்கள் மலையிலிருந்து சமவெளிக்கு இறங்கி விட்டார்கள் என்ற தகவல் தெரிந்ததும் ஆங்கிலப்படை நெருக்கமாக அவர்களைத் தொடர்ந்தது. 51

மைல்கள் சண்டையிட்டுக் கொண்டே சென்றனர். இறுதியாக வத்தலக்குண்டில் மிகக் கடுமையான சண்டை நடைபெற்றது.

ஆங்கிலப்படையிலுள்ள அனைத்து வீரர்களும் எந்த ஒரு புகழ்மிக்க புரட்சித் தளபதியைக் கண்டு அஞ்சி நடுங்கி வந்தார்களோ, எந்த ஒரு புரட்சி தளபதி ஒவ்வொரு போரிலும் அதிசயிக்கத் தக்க வகையில் தப்பித்துக்கொண்டு வந்தாரோ, எந்த ஒரு புரட்சித் தளபதியை அழிக்க ஆங்கிலேயர் மிகுந்த ஆவலுடன் இருந்தார்களோ அந்த ஒரு. தளபதியான ஊமைத்துரையையும் அவர்கள் சார்ந்த 65 பேரையும் பிடித்துவிட்டனர். அப்போரில் பலர் இறந்தனர்.

(MANY OF THEN DIED IN BATTLE WHILE OOMATHURAL WITH SIXTY FIVE HIS FOLLOWERS FELL IN TO THE HANDS OF ENEMY MADRAS COUNCIL 27.10 1801. MILITARY COUSULTATIONS VOL 288, P 7116)

### ஜோசய்யா வெப்

சென்னையில் உள்ள கம்பெனித் தலைமையிடத்திற்கு, ஜோசய்யா வெப் என்பவருக்கு இன்னிஸ் எழுதிய கடிதத்தில், ஊமைத்துரையும் அவனைச் சார்ந்தவர்களும் பிடிபட்டிருப்பது தெற்கே விளைந்த தொல்லைகளுக்கு முடிவை ஏற்படுத்தும் என்று கருதுவதாக எழுதியுள்ளார்.

(INNES, 20 OCTOBER 1801, LETTER TO JOSIAH WEBB, MILITATRY CONSULTATIONS VOL. 288. P 7114)

என்ற தகவலை பேராசிரியர் கு.ராஜய்யன் தனது ‘SOUTH INDIAN RE-BELLION THE FIRST WAR OF INDIPENDENCE (1800-1801) என்ற நூலில் பக்கம், 264ல் தெரிவித்துள்ளார்.

### ஊமைத்துரை தூக்கிற்கான சான்று

அந்த நூலில் பேராசிரியர் ராஜய்யன் நவம்பர் 16,1801ல் ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சியில் தூக்கிலிடப்பட்டதற்கு கர்னல் வெல்ஷ் எழுதிய நூலில் சான்று தருகிறார்.

### கர்னல் வெல்ஷ்

கர்னல் ஜேம்ஸ் வெல்ஷ் (COLONEL) JAMES WELSH) தனது ‘MILITARY REMINIS CENCES. EXTRACTED FROM A JOURNEL OF NEARLY FORTY YEARS ACTIVE IN THE EAST INDIES’ எனும் தனது நூலில் முதல் தொகுதியில் இலண்டனில் 1830ல் அச்சிடப்பட்ட நூலில் பக்கம் 133ல்,

AND WAS TAKEN ALIVE AT THE CON- CLUSION OF THE CAMPAIGN. AND MANGED ALONG WITH HIS GALLARY AND ILL FATED RELATION, ON THE PLAIN BEFORE PUNJA என்று தெரிவித்துள்ளார்.

போர் முடிவுற்றபோது அவன் (ஊமைத்துரை) உயிருடன் கைப்பற்றப்பட்டு பாஞ்சாலங்குறிச்சிக்கு முன்னால் சமவெளியில் நாம் எழுப்பியிருந்த கோபுரத்தில் அவனுடைய வீரமிக்க உறவினரோடு தூக்கிலிடப்பட்டார் என்று தெரிவித்துள்ளார்.

கர்னல் வெல்ஷின் குறிப்புகள் மட்டுமே ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சியில் தூக்கிலிடப்பட்டதாகத் தெரிவிக்கிறது.

### நாட்டுப்புறப்பாடல்கள் தரும்செய்தி

**கட்டபொம்மன் வரலாறு ;** சென்னை அரசாங்க வெளியீடு, 1960ல் T. சந்திர சேகரன் பதிப்பித்தது. 211 பக்கங்களைக் கொண்டது. பக்கம் 204ல் ஊமைத்துரை கன்னிவாடிச் சீமையில் ஒரு கன்னி வீட்டில் ஆயுதங்களை அடகு வைத்து உணவு உண்ணுதல்...

ஊமைத்துரை உண்ட மயக்கத்தினாலும் நீண்டநாள் உறக்கமில்லாக் காரணத்தாலும் அயர்ந்து நித்திரைச் செய்தல்.

பக்கம் 205ல், கன்னி, ஊமைத்துரை என்றறிந்து தன் ஊரின் அம்பலக்காரரி டத்தில் கூறிப் பரிசு வேண்டுதல். ஊமைத்துரையை, கன்னிவாடிச் சீமை முனிசீப் போலீசு, அம்பலக்காரர் முதலியோர் ஆட்களைக் கூட்டிக்கொண்டு பிடிக்கச் சென்றது. அம்பலக்காரர், போலீசு முதலியோர் ஊமையன் தூங்குவதைப் பார்த்து அருகில் செல்ல அஞ்சுதல்.

பக்கம் 206ல் பத்துப் பேராக ஒன்றுசேர்ந்து ஊமையன் மீது விழுந்து பிடித்தல். ஊமைத்துரை நித்திரை கலைந்து, மேல் விழுந்தோரில் மூன்று பேரைக்குத்திக் கொல்லுதல். ஊமைத்துரையை எல்லோருங்கூடிப் பிடித்து விலங்கிட்டு, அக்கினி மேஜருக்குக் கடிதம் எழுதுதல், பட்டாளத்துடன் அக்கினி மேஜர் வந்து ஊமைத்துரையைக் கைது செய்தல்.

மதுரை பல்கலைக்கழக (தற்போது மதுரை காமராசர் பல்கலைக்கழகம்) நா.வான பதிப்


vaigarai velicham official

பாசிரியராகக் கொண்டு வெளியிட்ட நூல் வீரபாண்டிய கட்டபொம்மன் கதைப் பாடல் வரிகளைக் கொண்டது. 7340வது வரிகள் முதற்றிய (கட்டபொம்மன் வரலாறு) நூலில் சந்திரசேகரன் சொல்லியக் கருத்துக்கள் அடங்கிய பாடல் வரிகளே அதிகம் வருகின்றது.

### கட்டபொம்மன் கும்பிப் பாட்டல்

தூயயோவான் கல்லூரியில் தமிழ்த்துறையில் பணியாற்றும் எனது நண்பர் போராசிரியர் வே.மாணிக்கம் பதிப்பித்த "கட்டபொம்மன் கும்பிப்பாடம்" நூலினை மாநிலத் தமிழர் சங்கம் வெளியிட்டது. 87 பக்கங்களைக்கொண்ட 1246 வரிகளைக் கொண்ட இந்த நூலில் பக்கம் 81ல் பள்ளர் (தமிழர்க் குடியிலே இருக்கிறான் ஊமைத்துரை என்பதனை அறிந்து அங்கு கைது செய்யப்பட்டு, வடக்குக் கோட்டை வாசலில் தூக்கிலிடப்பட்டான் என்ற 1200 முதல் 1210 வரை இச்செய்தி சொல்லப்பட்டுள்ளது.

### கட்டபொம்மு துரை கதை

அடைக்கலபுரம் ஜூலஜூ சிதம்பர சுவாமிகள் இயற்றி மதுரையிலிருந்து 1933இல் வெளிவந்த 64 பக்கங்களைக் கொண்ட நூல் பாஞ்சாலங்குறிச்சி பொம்மு துரை கதை. இந்நூலில் ஊமைத்துரை தற்கொலை செய்து கொண்டதாகவே கூறப்பட்டுள்ளது.

ஊமைத்துரை வெள்ளையரிடமிருந்து தப்பி வீராயி என்ற தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த ஒரு பெண் வீட்டில் மறைந்திருந்ததாகவும், அப்போது வீராயியும் அவனது அக்காளும் உமைத்துரையைப் பிடித்துக் கொடுக்கத் திட்டமிட்டதாகவும் அதை அறிந்த ஊமைத் துரை வெறுப்புற்று மனம் சோர்ந்து, திண்டுக்கல் மலைமீது சென்று தற்கொலை செய்து கொண்டதாகவும் அந்தத் தெருக்கூத்துப் பாடல் கூறுகிறது.

அந்தநூல் பக்கம் 63ல் இறுதி பாரா கூறுகிறது.

இது 'அவர் வஞ்சனையைச் சக்கரேவியால் வெற்றியடைந்து திண்டுக்கல் மலையில் சுப்பிரமணியர் கோவில் வந்து எங்கோ போரு தலும் தப்பமுடியாது, பின் வாரிஸ் (வாரிசு) துலக்க நமது மனைவி (ஊமைத்துரையின் மனைவி) தப்பினார், நாம் தற்கொலைசெய்ய வேண்டுமென உடனே தற்கொலையாலிறந்தார்.

தேவர்கள் புஷ்ப மாரி பொழிந்தார்கள் சுபம். சுபம் சுபம்.

### மன்னை சம்பத்

1995ல் 'ஊமைத்துரை' எனும் 80 பக்கங் களைக் கொண்ட நூலை எழுதிய மன்னை சம்பத் இது குறித்து சுருத்து தெரிவித்துள்ளதாவது:

இந்நூலாசிரியர் (சிதம்பரசுவாமிகள்) வாழ்ந்த காலம் 1900 என்பதால் ஊமைத்துரை காலத்தில் வாழ்ந்தவர்களையோ, வாழ்ந்தவர் களின் பிள்ளைகளையோ இவர் சந்தித்திருக்க முடியும். ஊமைத்துரை தூக்கில் போடப்பட்டி ருந்தால் அம்மக்களுக்கு நிச்சயம் தெரிந்திருக் கும். அவர்கள் வழியே இவரும் உண்மை அறிந் திருப்பார் ஒருவேளை இவரது கூற்றுப்படி ஊமைத்துரை தற்கொலை செய்து கொண்டது தான் உண்மையாக இருக்குமோ என்று எண்ணத்தோன்றுகிறது.

மேலும் ஊமைத்துரையை தூக்கிலிடப் பட்டதற்கு அதிகாரப்பூர்வமான ஆவணம் எதுவும் இல்லை என்பதாலும், ஊமைத்துரை புதுக்கோட்டை தொண்டைமானுக்கு எழுதிய கடிதத்தில் வெள்ளையர் "என்னை உயிரோடு பிடிக்க முடியாது. முடியுமட்டும் போராடுவேன். ஆங்கிலேயர்கள் அழிக்கப்பட வேண்டும். அது முடியாவிட்டால் என் வாழ்வை நானே முடித்துக் கொள்வேன் அகப்படமாட்டேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆக ஆங்கிலேயரிடம் தோல்வியுற் றால் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் முன்பே ஊமைத்துரைக்கு இருந்திருக்கின்றது என்பது புலனாகிறது என்பார் மன்னை சம்பத்,

### சி வித்வான் ந. சண்முகம்

ஊமைத்துரை அல்லது தன்னலம் கருதாத தியாகி' எனும் 95 பக்கங்களைக் கொண்ட நூலினை 1954ல் வித்வான் ந. சண்முகம் வெளி யிட்டுள்ளார். அதில் பக்கம் 91ல் திருமயத்தி லிருந்து தப்பிச்சென்ற ஊமைத்துரை, திண்டுக்கல் மலைக்குகைகளில் மறைந்து வாழ்ந்தார்.

தம்பிக்கு யாது நேர்ந்ததோ எனக் கவலை கொண்டார். அந்நாளில் ஓர் உறவினர் அவரைக் கண்டு துரைச் சிங்கம் தூக்கிலிடப்பட்ட

செய்தியை அறிந்தார். கலங்காத அவர் உள்ளம் கலங்கி நின்றது. துயரைத் தாங்க முடியாது துடிதுடித்துப் புலம்பினார். பின்பு தேர்ந்து, உயிரையும் உலகையும் வெறுத்து காசி மாநகரை யடைந்து, அங்கே சின்னாட்கள் தங்கி உலக நாதனை வழிபட்டுப் பின் இமயம் சார்ந்து துறவியானார். அப்பொழுது அவருக்கு வயது முப்பது. ஊமைத்துரை. தனது முப்பதாம் வயதில் துறவுபூண்டு இமயம் சார்ந்தார் என்ற வரலாறு.

**தி.சு.கலியபெருமாள்**

67 பக்கங்களைக் கொண்ட நாட்டுக்கு ஊழைத்த நல்லவர் ஊமைத்து என்ற நூலில் (1984) பக்கம் 65 "சிறுமலையை விட்டு ஊமைத்து புறப்பட்டார் மீண்டும் வடதிசைக நோக்கி நடந்தார். காசியை அடைந்த அங்கும் சிலகாலம் தங்கி விசுவநாதக் கடவுளை வணங்கி மன அமைதி பெற்றார். பிறகு இமயமலை பகுதிக்குச் சென்று மறைந்தர் ஊமைத்துரைப் பற்றிய விஷயங்கள் ஒன்றும் தெரியவில்லை குறிப்பிட்டுள்ளார்.

**கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியனார்**

கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியனார் பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரதிய எனும் இரண்டு பாகங்களாக பெல்ல அளவில் வெளி யிட்டுள்ளார். அதில் உற்றது. இரண்டாவது 1950ல் வெளிவந்தது. நுரை மிகச்சிறந்தஅளவில் வீரபான்மைத் கட்டபொம்மனது சரித்திரத்தை தமிழ்ம் இமய எழுதிய மேதை இவர்,

அவர் பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம் இரண்டாவது பக்கம் 346இல் தெளிவாகச் சொல்கிறார்:

"தம்பி துரைசிங்கம்தான் கம்பெனி யார் கையில் அகப்பட்டு மாண்டர் ஊமைத்துரை எவரிடமும் பிடிபட வேயில்லை. இவரும் எதிரிகளிடம் சிக்கி இறந்தார் என்பது பெருந் தவறு." பக்கம் 354ல் உயிரை வெறுத்து நின்ற இவர், உலகத்தை வெறுத்தர்ன தென்திசை நோக்காமல் வடதிசை நோக்கிக் காசிப் பகுதிக் குப் போக வேண்டும் என்று கருதித் துணிந்தார். காசியை நோக்கி நடந்து உ நிலைகளை சேர்ந்து உணர்ந்து முடி காசி நகரை அடைந்தார்.

பக்கம் 355ல் புண்ணியத்தலம் என போற்றப் படும் பகுதியில் நாளும் கங்கையில் நீராடி விசுவநாதத்தை தரிசித்து வந்தார். நீண்ட நாள் அங்குத் தங்கியிருந்தார். பின்பு இமயமலையை அடைந்தார். அங்கேதவயோகிகளைக்கண்டார். அவருடைய போதனைகளைக் கேட்டார். உலக ஆசையை மறந்தார், துறவு நெறியை தழுவினார். அப்போது இவருக்கு வயது ஐம்பது.

பிறந்தது 10.6.1772ல், மறைந்தது 10.12.1801ல் அதிசய வீரரான இவரது வாழ்வும் இவ்வாறு முடிந்து. கவிராஜ ஜெக வீரபாண்டியனார் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

1967ல் தான் எழுதி வெளியிட்ட "வீரபாண்டியம்" எனும் வீரகாவிய நூலில், ஊமைத்துரை காசி செல்ல நினைப்பது முதல் பேரின்பம் பெற்றது வரை பாடல் 3672 முதல் 3808 வரை பாடியுள்ளார். பக்கம் 784ல் ஊமைத்துரை உலகாசையை வெறுத்து இமய மலையை அடைய விரும்பி வடதிசையை நோக்கி உறுதியுடன் உள்ளடக்கிப் போனார் (16.12.1801) என்று தெளிவாகச் சொல்லி யுள்ளார்.

ஊமைத்துரையை தூக்கிலிடப்பட்டதற்கான தெளிவான சரித்திரச் சான்றுகள் இல்லை. திண்டுக்கல்லில் தற்கொலை செய்து கொண்டார் என்றும், காசி சென்று பின் இமயமலையில் தவநிலையில் உயிர் துறந்தார் என்றும் தெளி வாகச் சொல்லியுள்ள நிலையில், ஊமைத் துரையை சையத் காதர் என்ற முஸ்லிம் காட்டிக் கொடுத்தார் என்று சுத்தானந்த பாரதி எனது "உண்மையின் உண்மை" என்ற நூலில் எழுதியிருப்பது சரியா? தவறா? நடுநிலை யாளர்கள் முடிவுக்கு விட்டுவிடுகிறேன்.

**ஊமைத்துறையும் முஸ்லிம்களும்**

வெள்ளையர் மத்தியில் ஊமைச் சகோ தரர்கள் என்று அறியப்பட்டவர். முஸ்லிம்கள் 'மூக்கா' என்று அழைத்தனர், இந்துக்கள் 'ஊமை' என்று அழைத்தனர் என்கிறார் கர்னல் வெல்ஷ். சுதந்திரப்போரில் முஸ்லிம்கள் கட்டபொம்மன் கலெக்டர் ஜாக்சனை இராமநாதபுரத்தில் சந்திக்கச் சென்றது 24.8.1798. துரைசிங்கமும் ஊமத்துரையும் கட்டபொம்மனுடன் 4000 வீரர்களுடன் இங்கு சென்றனர். அந்தப் படையில் முஹம்மது தம்பி, யூசுப் லெப்பை, குப்பராவுத்தர், இஸ்மாயில் ராவுத்தர் என்ற


vaigarai velicham official

தளபதிகள் ஊமைத்துரையோடு அணிவகுத்து சென்றனர். படையில் மேலும் சில முஸ்லிம் வீரர்களும் இருந்தனர்.

இரண்டாவது பாஞ்சாலங்குறிச்சி போரின் போதும் ஊமைத்துரை பெரு வீரங்காட்டிப் போரடியபோது அவரது படையில் ஊக்கத் துடன் முஸ்லிம்கள் போராடியுள்ளனர்.

ஊமைத்துரையின் இறுதி குறித்தே வரலாறுகள் சரிவர இல்லாத நிலையில் ஊமைத்துரையோடு இணைந்து வெள்ளையரை எதிர்து வீரச்சுதந்திரப் போர் நடத்திய முஸ்லிம் இளைஞர்களின் வரலாற்றுக் குறிப்புகள் செவிவழிச் செய்திகளும் அதனை உலகிற்கு அறிவிக்கின்றன.

உமைத்துரையோடும் இணைந்து முஸ்லிம்கள் ஆங்கிலேயரை எதித்துப் போராடினார்கள் என்பது தெள்ளத் தெளிவாக உள்ளது.

**பகதூர் வெள்ளை**

வீரமறக்குலத்தின் வழித்தோன்றல் - வெள்ளை யத் தேவன். காட்டில் சிறு குழந்தையாயிருந்த போது சேற்றில் சிக்கித் தவித்த வேளை வீரபாண்டியக் கட்டபொம்மன் அக்குழந் தையை எடுத்துச் சென்று தனது அரண்மனையில் வளர்த்தான். 'பகதூர் வெள்ளை' நூலில் (1954) கோ.நீ. அண்ணாமலை இதுபற்றி எழுதியுள்ளார்.

வெள்ளையரை எதிர்த்த இறுதிப் போரில் கோட்டையின் தென்புற வாயிலில் தளபதியாக விளங்கிப் போரிட்டு, வீரசுதந்திரம் வேண்டி வீர மரணத்தைத் தழுவினான் பகதூர் வெள்ளை.

(தியாகநெருப்பில்வை.கோ.,செ.திவான், பக்168)

**ப. முகையத்தீன் பிச்சைசாயிபு**


முத்தமிழ் ஷேத்திரம் P.R.M. சாமி காணேணுக் கோனார் இயற்றியது 'பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மு கதை பாதர் வெள்ளை சண்டை' எனும் பாடல் நூல். 1933ல் 15 சதம் விலையில், கொழும்பு நீகல் அச்சியந்திர விலையில் இதனைப் பதிப்பித்து வெளியிட்டவர் ப. முகையத்தின் பிச்சை சாயபு.

78, செட்டியார் தெரு, கொழும்பில் புத்தகம் படம் வியாபாரம் செய்து வந்த ப. முகையத்தீன் பிச்சை சாயபு, நாடு விடுதலைக்குப் போராடிக் கொண்டிருந்த வேளையில் 1933ல், வெள்ளை யரை எதிர்த்து சுதந்திர உணர்வுடன் 'கட்ட பொம்மு கதை பாதர் வெள்ளை சண்டை' நூலினை அச்சிட்டு வெளியிட்டு திர உணர்வைத் தூண்டியுள் வரலாற்றின் பக்கங்கள் சாற்றுகின்றன.

**இந்திய சுதந்திரப் போரில்**

பாளையக்காரர்கள் ஆட்சி காலத்திலும் வீரபாண்டிய கட்டபொம்பன் காலத்திலும் அவரோடு உறுதுணை இருந்த தம்பி ஊமைத் துரை காலத்திலும் சுதந்திரத்திற்காகப் போராடி யவர்களில் முஸ்லிம் தீரர்களும் அடங்குவர். 1801க்குப் பிறகு 1933ல் அதே சுதந்திர உணர்வுடன் கட்டபொ கதை பாதர் வெள்ளை சண்டை நூலிலை கொழும்பில் வெளியிட்டு தனது சுதந்தி உணர்வை ப. முகையத்தீன் பிச்சை சாயபு உலகிற்கு பறைசாற்றியுள்ளார். இந்திய சுதந்திரப் போரில் காலகட்டங்களிலும் முஸ்லிம் களின் பங்களிப்பு இருந்துள்ளது. அது எவருக்கும் குறைந்திடாத அளவில் இருந்துள்ளது என்பதனை உலகம் உணர்ந்துகொண்டு தான் வருகிறது.





# சாவர்க்கரின் சாயம் வெளுத்தது...

## குடியரசுத் தலைவரிடம் குமுறிய ஒரு சுதந்திரப் போராட்ட வீரர்

**ஆகஸ்ட்** 10 குடியரசுத் தலைவர் மாளிகையின் தோட்டம் பரபரப்பாக இருந்தது. இந்திய சுதந்திரத்திற்காகப் போராடிய மாவீரர்களை அழைத்து விருந்தளித்து, அவர்களைக் கௌரவப்படுத்தினார் குடியரசுத் தலைவர். கோல்கத்தாவிலிருந்து தினேஸ் தாஸ் குப்தா என்ற 92 வயது சுதந்திரப் போராட்ட வீரர் வந்திருந்தார். இவர் அந்தமான் சிறையில் 1933 முதல் 1938 வரை 5 ஆண்டுகள் சித்ரவதைப்பட்டவர். இவர் ஆங்கிலேயரின் சிட்டகாங்க் ஆயுதக் கிடங்கைக் கைப்பற்றிய குழுவில் இடம் பெற்றவர்.

இவர் சமீபத்தில் அந்தமான் சென்றிருந்தார். அங்கு போர்ட் பிளேரில் தியாகிகள் பூங்காவைப் பார்வையிட்ட அவர், அதிர்ச்சியில் உறைந்து போனார். அங்கு வைக்கப்பட்டிருந்த தியாகிகள் சிலைகளோடு சாவர்க்கரின் சிலையும் வைக்கப் பட்டிருந்ததுதான் அவரது அதிர்ச்சிக்குக் காரணம்.

“அங்கிருந்த 8 சிலைகளுக்குச் சொந்தக் காரர்களும் மிருகத்தனமான சித்திரவதைகளை அனுபவித்தனர். அவர்கள் கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்தனர். ஆங்கிலேயரிடம் அவர்கள் உயிர்ப்பிச்சைக் கேட்கவில்லை. மாறாக, சாவைச் சலனமின்றி ஏற்றுக்கொண்டனர். ஆனால் சாவர்க் கரோ ஆங்கிலேயர்களுக்கு உதவுவதாக கடிதம் எழுதிக் கொடுத்தார். அதனால் அவரை விடுதலை செய்தனர்.” என்று கூறிய தினேஷ் தாஸ் குப்தா, “அந்தத் தியாகச் சீலர்களோடு சாவர்க்கரின் சிலையை வைத்தது, அவர்களையும் அவர்களது தியாகத்தையும் அவமதித்ததாகும்” என்று காட்டமாகக் கூறினார்.

“நானும் சாவர்க்கரும் ஒன்றாகத்தான் சிறையில் அடைபட்டோம். நானும் விடுதலை செய்யப்பட்டேன். சாவர்க்கரும் விடுதலை செய்யப்பட்டார். இப்படியிருக்க சாவர்க்கர் எப்படி தியாகியாவார்?” என்று அவர் கேள்வி எழுப்பினார்.

கடந்த பிப்ரவரி மாதம் பாசிச பா.ஜ.க. அரசு சாவர்க்கரின் உருவ படத்தை பாராளுமன்றத்தில் வைத்தது. இந்தச் சிலையை வைத்ததற்கு ஒரு வகையில் உதவியாக இருந்த குடியரசுத் தலைவர்மேல் தினேஷ் தாஸ் குப்தாவுக்கு கொஞ்சம் வருத்தம் இருந்தது.

ஆனால் சமீபத்தில் அந்தமான் சென்றிருந்த பொழுது தியாகிகள் சிலைகளோடு சாவர்க்கரின் சிலையையும் பார்த்த பிறகுதான் தாஸ் குப்தாவுக்குப் பொறுக்க முடியவில்லை. உடனே இதற்குதான் ஏதாவது செய்தாக வேண்டும் என்று முடிவெடுத்தார்.

அந்தச் சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தார். அப்பொழுதுதான் குடியரசுத் தலைவரிடமிருந்து விருந்துக்கான அழைப்பு வந்தது. விருந்துக்கு வந்த தாஸ்குப்தா குடியரசுத் தலைவரிடம் தனது மனக்குமுறலைக் கொட்டித் தீர்த்தார்.

“என்னால் இதற்கெதிராக ஒன்றும் செய்ய முடியாது. ஏனெனில் என்னிடம் எந்த அதிகாரமும் இல்லை. என்னால் முடிந்ததெல்லாம் குடியரசுத் தலைவரிடம் தெரிவிப்பதுதான். அதனை நான் செய்துவிட்டேன்.” என்று விரக்தியோடு கூறுகிறார் தாஸ் குப்தா.

அந்தமான் தலைநகர் போர்ட் பிளேரின் விமான நிலையத்திற்கு சாவர்க்கரின் பெயரைச் சூட்டியதையும் கவலையோடு குறிப்பிடும் இவர், “இப்படிச் செய்தால் பின்னால் வரும் தலைமுறையினருக்கு உண்மையில் என்ன நடந்தது என்று எப்படித் தெரியும்?” என்று அப்பாவித்தனமாகக் கேட்கிறார்.

(ஆதாரம்: 11-8-2003 THE HINDU)


vaigarai velicham official

# காங்கிரஸ் - முஸ்லிம்கள் - அவநம்பிக்கை - தேசப்பிரிவினை...

**- அல்லாமா அபுல் ஹசன் அலி நத்வி (ரஹ்)**

**- தமிழில் மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி**

**அதேபோல** அல்லாமா பஜ்லுல் ஹக் ஹய்ராபாதி, முஃப்தி இனாயத் அஹ்மத் காகோர்வி,முஃப்தி மள்ஹர் கரீம் தர்யாபாதி போன்ற சங்கைக்குரிய பல உலமாக்களை அந்தமான் தீவிற்கு நாடு கடத்தினர். நாடு கடத்தும் போதே மௌலானா பஜ்லுல் ஹக் ஹய்ராபாதி மரணித்தார். மற்ற இரண்டு ஆலிம்களும் நீண்ட நெடுங்காலம் அந்தமானில் வாழ்க்கையை கழித்து தாயகம் திரும்பினார்கள்.

ஆங்கிலேயர்கள் முஸ்லிம்களின் மீது நீண்ட காலமாக கொண்டிருந்த இந்த விரோதமே முஸ்லிம்கள் கல்வியில் பின்தங்கியதற்கு முக்கியமான காரணம். மேலும் அரசாங்கத்தின் அனைத்து நிர்வாக பொறுப்பிலிருந்தும் தடுக்கப் பட்டார்கள்.

நாட்டின் அரசியலில் பங்கெடுப்பதை விடவும், வேகமாக முன்னேறி தேசப்பற்றை வெளிப்படுத்தி, அரசாங்கத்திடமிருந்து ஒவ்வொரு ஊக்கத்தையும், அனுதாபத்தையும் பெற்ற பிற சமூகங்களுக்கு ஈடுகொடுப்பதை விடவும் தங்களை பாதுகாப்பதிலும், தங்கள் மீது புனையப்படும் அவதூறுகளை எதிர்கொள் வதிலுமே முஸ்லிம்கள் தங்களது வாழ்வை கழிக்க வேண்டியிருந்தது.

இந்திய தேசிய காங்கிரஸின் முதல் அமர்வு 1884ஆம் ஆண்டு நடைபெற்றது. இதில் சில முக்கிய முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 1887 ஆம் ஆண்டு மதராஸில் (சென்னை) நடைபெற்ற நான்காவது அமர்வு பத்ருதீன் தய்யப்ஜி தலைமையில் நடை பெற்றது, மேலும் பல்வேறு தரப்புகளைச் சேர்ந்த முஸ்லிம் பிரதிநிதிகள் அதில் கலந்து கொண்டனர்.குறிப்பாக மரியாதைக்குரிய மீர் ஹுமாயூன் ஜா கலந்துகொண்டு அந்த அமர்வில் தனது நன்கொடையாக ரூ. 5,000 காங்கிரசுக்கு வழங்கினார்.



இஸ்லாமிய கல்வி இயக்கத்தின் தலைவரும் அலிகர் பல்கலைக்கழகத்தின் நிறுவனருமான ஸர் ஸய்யத் அஹ்மத் கான், ஆரம்பத்தில்

ஒரு பொதுவான அரசியல் தளத்தின் ஆதரவாளராக இருந்தார். கல்வி, பொருளா தாரம், அரசியல் ஆகியவற்றில் மிகப்பெரிய அளவில் பின்தங்கியுள்ள முஸ்லிம்களது பரிதாப மான நிலைமையின் காரணமாக தனது நிலைப் பாட்டை மாற்றிக் கொண்டார்.

காங்கிரஸ் இயக்கத்திலிருந்து முஸ்லிம்கள் தங்களை விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும், ஆங்கிலேய அரசை விமர்சித்து தங்களது உரிமைகள் தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று ஆங்கிலயே அரசை எதிர்த்து போராடும் வங்காளத்தின் தீவிரவாதிகள் மற்றும் பிற இந்து கிளர்ச்சியாளர்களுடன் கைகோர்த்து பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அதிருப்தியை பெறுவதை தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

முஸ்லிம்களது நலன்களில் அக்கறை எடுப்பதற்கு தனி அரசியல் சார்பற்ற அமைப்பு நிறுவப்பட வேண்டும் என்று கூறினார். அதே நேரத்தில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக இந்துக் களுடன் அரசியல் ஒத்துழைப்பு என்பது பழைய விரோதங்களை தூண்டி விடும் அதனுடன் முஸ்லிம்களுக்கு புதிய சிக்கல்களை உருவாக்கும் அபாயம் உள்ளதாக எண்ணினார்.

ஆனால் சுதந்திரத்தை விரும்பும் பல முஸ்லிம் சிந்தனையாளர்கள் குறிப்பாக அதன் முன்னணி யில் இருந்த உலமாக்கள் அனைவரும் தேசியவாத நடவடிக்கைகளுக்கும், காங்கிரசிற்கும் முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளித்தனர். இவர்கள் அனைவரும் அரசியலை இந்திய முஸ்லிம்களுக்கு தடுக்கப்பட்ட மரமாக கருதவில்லை.

ஷைகு அப்துல் காதர் லூதியானவி, காங்கிரஸிற்கு முஸ்லிம்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று ஃபத்வாக்களை உள்ளடக்கிய "நுஸ்ரதுல் அப்ரார்" என்ற நூலை வெளியிட்டார். அதில் இந்தியாவின் மூத்த உலமாக்களான ரஷீத் அஹ்மத் கங்கோஹி, மௌலானா லுத்ஃபுல்லாஹ் அலிகரி, மட்டுமல்லாமல் மதீனா மற்றும் பக்தாதை சேர்ந்த மூத்த ஆலிம்களும் அதில் கையெழுத்திட்டனர்.

1888ஆம் ஆண்டு அலகாபாத்தில் நடைபெற்ற காங்கிரஸின் ஐந்தாவது அமர்வில் பல மூத்த உலமாக்கள் கலந்துகொண்டனர். இவ்வாறே காங்கிரஸின் செயல்பாட்டிற்கு முஸ்லிம்கள் தொடர்ந்து பங்களித்து வந்தனர்.

1912 ஆம் ஆண்டு "பால்கன் போர்" வெடித் தவுடன் ஐரோப்பிய சக்தி மற்றும் அதற்கு தலைமை தாங்கிக் கொண்டிருந்த பிரிட்டனிற்கு எதிராக முஸ்லிம்களிடையே மிகப்பெரிய வெறுப்பு அலை எழுந்தது. கிழக்கில் நீண்ட நாட்களாக நிலையாக வலுப்பெற்று கொதித்துக் கொண்டிருந்த இஸ்லாமிய அரசியல் சிந்தனை உச்சக்கட்டத்தை அடைந்து வெடித்தது.

இந்த சமயத்தில் மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்கள் "ஹிலால்" என்னும் வாராந்திர பத்திரிகையை துவக்கினார். தனது அனல் பறக்கும் சிந்தனைகளை கட்டுரைகளை அதில் பிரசுரித்தார். அதற்கு ஈடான கட்டுரை எழுதப் படவில்லை என்று கூறுமளவிற்கு அந்த கட்டுரைகளில் இலக்கிய நயத்தோடு ஐரோப்பிய சிலுவை அரசை கடுமையாக விமர்சனம் செய்து எழுதினார்.

இது வெளியாகிய சில நாட்களிலேயே மக்களது பெரும் வரவேற்பை பெற்றதால் சொற்ப காலத்தில் இதன் வாசகர்கள் லட்சக்கணக்கில் பெருகினர். கல்கத்தாவில் துவங்கப்பட்டு பிறகு டில்லிக்கு மாற்றப்பட்ட மௌலானா முஹம்மத் அலி அவர்களால் துவங்கப்பட்ட "காம்ரேட்" என்னும் பத்திரிக்கையிலும் கவர்ந்திழுக்கும் இலக்கிய நடையில் ஆங்கிலேய அரசை விமர்சனம் செய்து கட்டுரைகள் வெளியாகின.

அதேபோல மௌலானா ஸஃபர் அலி கான் அவர்களால் துவங்கப்பட்ட "ஜமீன்தார்" என்னும் பத்திரிகையிலும் இன்னும் இது போன்ற மற்ற இஸ்லாமிய பத்திரிகைகளிலும் இதுபோன்ற கட்டுரைகள் வெளியாகின.

இவ்வாறாக ஆங்கிலேய அரசுக்கு எதிரான சிந்தனை தீயை, சுடர் விடச் செய்ததில் இந்த பத்திரிக்கைகளுக்கு மிகப் பெரிய பங்கு உண்டு. இதன் காரணமாகவே முஸ்லிம் தலைவர்களான முஹம்மத் அலி, ஷவ்கத் அலி , அபுல் கலாம் ஆசாத் மௌலானா ஹஸ்ரத் மோஹானி ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

தியோபந்த் மதரஸாவின் முதல்வரும் இந்தியவின் ஷைகு என்று பிரபல்யமாக அறியப்படும் மௌலானா மஹ்மூத் ஹஸன் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திய அரசின் பரம எதிரி. திப்பு சுல்தானின் காலத்திற்குப் பிறகு திப்புவை போன்று ஆங்கிலேயர்களின் கடுமை யான வெறுப்பை சம்பாதித்தவராக மௌலானா மட்டுமே விளங்கினார். இஸ்லாமிய உலகத் திற்கு தலைமை வகித்து கொண்டிருந்த கிலாஃபத் ஆட்சியின் கொடியை உயர்த்தி பிடித்து கொண்டிருந்த உஸ்மானிய பேரரசின் மிகப் பெரிய ஆதரவாளர். இந்தியா சுதந்திரம் பெற வேண்டும். சுதந்திரமான நாடு நிறுவப்பட வேண்டும் என்பதற்காக பிரிட்டிஷ் பேரரசை அழிக்கவே முழு வாழ்க்கையையும் அர்ப் பணித்தார்.

ஆப்கானிஸ்தான் அரசாங்கத்துடனும், அன்வர் பாஷா போன்ற துருக்கியின் புரட்சிகர தலைவர்களுடனும் இரகசிய தொடர்புகளை ஏற்படுத்தினார். 1916 ஆம் ஆண்டு ஷெரீப் ஹுசைனின் அரசு, மதீனா முனவ்வராவில் இவரை கைது செய்து, ஆங்கிலேயர்களிடம்



vaigarai velicham official

ஒப்படைத்தனர். ஆங்கிலேய அரசு மௌலானா மற்றும் அவரது தோழர்களான மௌலானா ஹுசைன் அஹ்மத் மதனி, மௌலானா உசைர் குல், ஹக்கீம் நுஸ்ரத் ஹுசைன் மற்றும் உஸ்தாத் வஹீத் அஹ்மத் ஆகியோர்களை 1917ஆம் ஆண்டு மத்திய தரைக்கடல் தீவான மால்டா விற்கு நாடு கடத்தினர், அங்கு அவர்கள் 1920ஆம் ஆண்டு வரை இருந்தனர்.

மௌலானா அப்துல் பாரி ஃபிரங்கி மஹல்லி இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் இஸ்லாமிய அறிஞர்களை (உலமாக்களை) ஒருங்கிணைக்க ஜமியத்-இ-உலேமா-இ-ஹிந்த் என்ற அமைப்பை நிறுவினார். கிலாஃபத் இயக்க போராட்டத்திலும் முன்னணிப் பங்கு வகித்தார்.

பிறகு 1918 ஆம் ஆண்டு ரௌலட் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதில் முஸ்லிம்களை முக்கிய இலக்காக வைத்து கடுமையாக தண்டித்தனர். மேலும் பிரிட்டிஷ் அரசை எதிர்த்து கிளர்ச்சி செய்தவர்களும் கடுமையாக துன்புறுத்தப்பட்டார்கள். இந்தியா முழுக்க இந்த சட்டத்திற்கான எதிர்ப்பும் வலுவாகவே இருந்தது.

1919ஆம் ஆண்டு முஹம்மத் அலி மற்றும் ஷவ்கத் அலி இருவரும் விடுதலை செய்யப் பட்டனர்.இந்துகள் மற்றும் முஸ்லிம்கள் இருத் தரப்பும் ஒன்று சேர்ந்து ஓரணியில் திரண்ட அற்புதமான தருணம் அரங்கேறியது. ஆங்கிலேய அரசை எதிர்ப்பதற்காகவும் உஸ்மானிய பேரரசின் தலைமையின் கீழான ஆட்சி தொடர்வதற்காகவும் இந்தியா சுதந்திரம் பெற்று ஒரு சுதந்திரமான அரசு நிறுவப்பட்ட வேண்டும் என்று ஓரணியில் இருத்தரப்பினரும் கடுமையாக போராடினர்.

அரசியல் விழிப்புணர்வு, தேசப்பற்று, ஆங்கிலேய வெறுப்பு ஆகியவைகளை உருவாக்கு வதை நோக்கமாகக் கொண்ட இந்த போராட் டத்தில் காந்தியும் முழு முனைப்புடன் கலந்து கொண்டார். முஹம்மத் அலி மற்றும் ஷவ்கத் அலி அவர்களோடு நாடு முழுக்க பயணம் மேற்கொண்டு பெரும் திரளான மக்களுக்கு மத்தியில் பல்வேறு நிகழ்வுகளில் உரையாற்றி னார் இதுபோன்ற திரளான மக்கள் கூட்டத்தை இந்திய கண்டதில்லை. இதற்கு பிறகும் இந்தளவிற் கான மக்கள் கூட்டம் கூடுவார்களா என்று நான் நினைக்கவில்லை.இந்த மக்கள் கூட்டம் இந்த தலைவர்களை மிகப்பெரும் ஆரவாரத்துடன் பேரார்வத்துடன் வரவேற்றனர்.

1920 ஆம் ஆண்டு மஹாத்மா காந்தி மற்றும் அபுல் கலாம் ஆசாத் இருவரும் அந்நிய நாட்டு பொருட்களை, ஆங்கிலேய அரசை, இராணுவம் போன்ற ஆங்கிலேயர்களுக்கு உதவியாக விளங்க கூடிய அனைத்து பொறுப்புகளையும் புறக்கணிக்க வேண்டும் என்று பரப்புரையை மேற்கொண்டனர்.

இந்த பரப்புரை சுதந்திர போராட்ட இயக்கத்தின் கூர்மையான ஆயுதமாக மாறியது. அரசாங்கம் அவற்றை முழுமையாகக் கண்காணிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆங்கிலேய அதிகார கேந்திரமே ஆட்டம் கண்டது. இந்த புரட்சி எங்கும் பரவியது.

இவை அனைத்தும் ஆங்கிலேய அரசிற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக விடுக்கப்பட்ட எச்சரிக்கையே.தொலை தூர நாட்டில் ஏற்பட்ட இதன் பாதிப்பை பிரிட்டிஷ் அரசு நன்றாக உணர்ந்தது. ஆனாலும் ஆங்கிலேயர்கள் கிழக்கு நாடுகளில் பெரியளவு வெற்றி பெறாத தங்களது அரசியல் சூழ்ச்சிகளின் கடைசி அம்பை எறிந்தனர்.

அதுவே "பிரித்தாளும் தந்திரம்" அப்போதைய ஆங்கிலேய அரசின் வைஸ்ராய், இந்து சமூகத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரை அழைத்து இந்து மதத்தை நோக்கி மக்களை நீங்கள் அழைக்க வேண்டும், இஸ்லாத்தைத் தழுவியவர்களை மீண்டும் அவர்களது பழமையான இந்து மதத்திற்குக் கொண்டுவர வேண்டும்.இதனால் சக்திவாய்ந்த இந்து இயக்கத்தைத் துவக்க வேண்டியதன் அவசியத்தை அவரிடம் கூறி அவரை நம்ப வைத்தார்.

அதேபோல கிலாஃபத் போராட்டத்தில் முஸ்லிம்கள் தங்களது பலம், மத வெறி மற்றும் அமைப்பு திறன் ஆகியவற்றை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்த பிறகு, தனது சமூகத்தை ஒரு போர்க்குணமிக்க அடிப்படையில் அமைப்பது எவ்வளவு இன்றியமையாதது என்பதையும் வைஸ்ராய் அவருக்கு அறிவுறுத்தினார்.

முஸ்லிம்களிடத்தில் தான் முழு அரசியல் அதிகாரம் இருந்தது. முழுக்க முழுக்க முஸ்லீம்களது விவகாரமான கிலாஃபத் பிரச்சினையில் பொதுவான காரணத்தை

முன்வைத்து இந்துக்களை சேர்த்து கொண்டனர்.

பிராமண ஆரிய இனத்தின் இந்துமத மறுமலர்ச்சி நடவடிக்கைகளின் தொடக்கப் புள்ளி இதுவாகும். இந்தியா முழுவதும் அதன் அழைப்பாளர்கள் சென்றார்கள். இதற்கு எதிர்வினையாக முஸ்லிம்களும் இஸ்லாத்தை நோக்கி மக்களை அழைத்து கொண்டிருந்தனர். முஸ்லிம்களை தனித்துவத்தின் அடிப்படையில் ஒன்று சேர்த்தனர். இதனால் மத சார்ந்த விவாதங்கள் உணர்வுபூர்வமான உரைகள் ஆகியன எங்கும் நிறைந்தது. மதக் கலவரங்கள் இந்தியா முழுக்க வெடித்தது.

இதுவொரு பக்கம் நிகழ்ந்துக் கொண்டிருக்க காங்கிரஸின் பணிகளும் நிகழ்ச்சிகளும் நிகழ்ந்த வண்ணமே இருந்தன. 1923 ஆம் ஆண்டு டில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்திற்கு அபுல்கலாம் ஆசாத் தலைமை தாங்கினார். அதே ஆண்டில் காக்கிநாடாவில் (ஆந்திரா) நடைபெற்ற வருடாந்திர அமர்விற்கு மௌலானா முஹம்மத் அலி தலைமை தாங்கினார்.

கலவரங்கள் தொடர்ந்துகொண்டே இருந்தது. 1927ஆம் ஆண்டு ஒரு சில மாதங்களுக்குள் 26 கலவரங்கள் நிகழ்ந்தன.

வீதிகள், பத்திரிகைகள் என அனைத்திலும் இதுவே விவாதமாக தொடர்ந்தது. காங்கிரஸ் தலைவர்கள் கிலாஃபத் இயக்க தலைவர்கள் யாராலும் இந்த கலவரங்களை நிறுத்த முடியவில்லை. இருதரப்பினருக்கும் மத்தியிலான இந்த பிரிவினையின் விரிசல் வளர்ந்து விரிவடைந்து கொண்டே சென்றது. எந்தளவிற்கு என்றால் இறுதியில், இந்துக்கள் முஸ்லிம்கள் மத்தியிலான பிரவினை என்பது தவிர்க்க முடியாதது என்ற ‘சிந்தனை நோய்’ இரு சமூகங்களின் தலைவர்களையும் தொற்றி கொண்டது.

தலைவர்களிடத்தில் விடுதலை வேட்கை குறைந்து இரு சமூகங்களில் மதப்பிரச்சினைகளில் அவர்களது முழு கவனமும் இருந்ததாகவே மக்கள் உணர்ந்தார்கள். இந்துத் தலைவர்கள் அனைவரும் அதிலும் அவர்களின் முக்கிய தலைவரான காந்தி இந்த கலவரங்களை தடுப்பதற்கான ஒரு முயற்சியும் எடுக்கவில்லை, இந்தியாவில் பெரும்பான்மையாக வாழக் கூடிய அவர்களது சமூகம் செய்யகூடிய எதற்கும் எதிர்ப்பு காட்டவில்லை, வகுப்புவாத அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடுவதற்கு போதுமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டார்கள், நாட்டின் முக்கிய தலைவர்களிடம் இருக்க வேண்டிய திறந்த மனப்பான்மை, பக்கச்சார்பற்ற தன்மை மற்றும் உறுதியை அவர்கள் முன்வைக்கவில்லை என்றே பெருபான்மையான முஸ்லிம் தலைவர்கள் தங்கள் இதயங்களில் உணர்ந்தனர்.

இந்த எண்ணம் சரியானதாக அல்லது தவறான புரிதலாக இருக்கலாம்.

ஆனால் அனல் பறக்கும் விடுதலை வேட்கை கொண்டிருந்த, ஆங்கிலேயர்களை எதிர்த்து கடுமையாக போராடி அழியா தடங்களை ஏற்படுத்திய மௌலானா முஹம்மத் அலி போன்ற தலைவர்கள் காங்கிரஸ் மீது கொண்டிருந்த நம்பிக்கை குறைவதற்கு இது வழிவகுத்தது. காங்கிரஸ் தலைவர்கள் முஸ்லிம்களை தங்களிடம் தஞ்சம் புகுந்தவர்கள் போல நடத்துவதாக, முஸ்லிம்களது விவகாரங்களில் குறுகிய மனப்பான்மையோடு செயல்படுகிறார்களோ என்றே முஸ்லிம் தலைவர்கள் சந்தேகித்தார்கள்.

இதனால் மௌலானா முஹம்மத் அலி மற்றும் அவர்களது தோழர்கள் காங்கிரஸை விட்டு வெளியேறினார்கள். முஸ்லிம்களுக்கு ஓர் அரசியல் கட்சி துவங்கப்பட்டது. முகமது அலி ஜின்னா முஸ்லீம் லீக்கை நிறுவி அதற்கு தலைமை தாங்கினார்.சில ஆண்டுகளில் அது இந்திய முஸ்லிம்களின் மிகவும் சக்திவாய்ந்த பிரதிநிதித்துவ அமைப்பாக உயர்ந்தது. கடைசியில் இந்தியாவை பிரித்து , பாகிஸ்தானை முஸ்லிம்களுக்கு என்று தனியாக வழங்கப்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்தது.

பெருபான்மையின் குறுகிய மனப்பான்மை, வகுப்புவாத பாகுபாடுகளின் கசப்பான அனுபவம், சமூகங்களுக்கிடையேயான அச்சங்கள் மற்றும் சந்தேகங்கள் ஆகியவற்றின் காரணமாக, இதில் வெற்றியும் கண்டது.

இதே வேளையில் மௌலானா ஆசாத் மற்றும் ஜம்இய்யதுல் உலமா அமைப்பின் நிறைய உலமாக்கள் காங்கிரஸிற்கான தங்களது முழு ஆதரவை வழக்கம்போல தொடர்ந்து கொண்டிருந்தார்கள். இவர்களில் முன்னணியில் இருந்தவர் மிகப்பெரிய ஆலிம் பெருந்தகை மௌலானா ஹுசைன் அஹ்மத்


vaigarai velicham official

மதனி, ஆங்கிலேயர் மீதான தனது சமரசமற்ற விரோதப் போக்காலும், அசாதாரணமான தேசபற்றாலும், லட்சியத்தின் நேர்மையாலும், தனது ஆசிரியரும் வழிகாட்டியுமான மௌலானா மஹ்மூத் ஹசன் தியோபந்தியின் தகுதியான வாரிசாக தன்னை நிரூபித்தார்.

இவரும் இவரது நிலைப்பாட்டை கொண்டிருந்த உலமாக்கள் அனைவரும் முஸ்லிம் லீகின் ஆதரவை பெற்ற பெரும்பான்மையான முஸ்லிம்களது எதிர்ப்பையும் வெறுப்பையும் சம்பாதித்தனர். இருந்தும் தங்களது நிலைப் பாட்டில் உறுதியாக ஆக்கப்பூர்வமான பணிகளை கடைசி வரை தொடர்ந்தனர்.

ஷைகு அவர்களின் நேர்மையைப் பாராட்டுவதில் நண்பரும் எதிரியும் ஒருமனதாக இருந்தனர். சுதந்திரத்திற்குப் பிறகும், அரசாங்கத்திடமிருந்து பல வாய்ப்புகள் மற்றும் ஊக்கங்களின் வாசல்கள் திறக்கப்பட்டபோது, அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை திட்டவட்டமாக மறுத்துவிட்டார். இதன் காரணமாகவே அவர் 1954 ஆம் ஆண்டு இந்திய அரசு வழங்கிய பத்ம விபூஷண் விருதை ஏற்க மறுத்துவிட்டார். அரசாங்கத்திடம் இருந்து மரியாதை பெறுவது தனது முன்னோடிகளின் மரபுகளுக்கு எதிரானது என்று கூறினார்.

சுதந்திரத்தின் மூலம் அவர் அடைய விரும்பிய உயர்ந்த இலட்சியங்கள் பெரும்பாலும் நிறைவேறாமல் போய்விட்டது. சுதந்திரத்தின் சமயத்தில் அவர் விரக்தியடைந்து, மனம் உடைந்து போனார். இருந்தாலும் இந்தியர்களை அடிமைப்படுத்திய ஆங்கிலேயர்களின் ஆட்சியை எதிர்த்து ஒரு பாறையைப் போல எவ்வாறு உறுதியாக போராடினாரோ, சுதந்திரம் பெற்ற பிறகும் அவரது மனநிலையில், அரசியல் நிலைப்பாட்டில், நம்பிக்கைகளிலும் எந்த மாற்றமும் இல்லாமல் உறுதியாக இருந்தார்.

மௌலானா அபுல் கலாம் ஆசாத் காங்கிரஸின் தலைவராக அதிக ஆண்டுகள் பொறுப்பு வகித்தார். இவர் தலைவர் பொறுப்பு வகித்த காலங்களில் நாட்டின் மிக முக்கியமான தருணங்களில் பணியாற்றினார். மேலும் இந்திய நாட்டின் சுதந்திரம் குறித்து இரண்டு முக்கிய பிரிட்டிஷ் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுக்கள் இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்தியாவிற்கு விஜயம் செய்தனர். காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் மௌலானா பேச்சுவார்த்தையில் தீவிரமாக பங்கேற்றார்.


சர் ஸ்ட்ராஃபோர்ட் கிரிப்ஸ் உட்பட பிரதிநிதிகள், அவரது தீவிர அரசியல் தொலைநோக்கு மற்றும் புத்திசாலித்தனத்தால் ஆழமாக ஈர்க்கப்பட்டனர்.

மௌலானா காங்கிரஸின் தலைவராக இருந்த காலத்தில்தான் இந்தியா சுதந்திரம் அடைந்தது.

அவரது நூலான

"இந்திய விடுதலை வெற்றி" (India Wins Freedom) என்ற நூல் காங்கிரஸ் கட்சியின் இயந்திரத்தில் அவர் ஒரு அறிவு கூர்மை மிகுந்த சிந்தனையாளர் என்பதைக் காட்டுகிறது. அவர் தனது புத்திசாலித்தனம், அரசியல் நுண்ணறிவு, தொலைநோக்கு பார்வை, அறிவாற்றல், ஆளுமைத் திறன் ஆகியவற்றைக் கொண்டு தன் சகத்தோழர்கள் மீது செல்வாக்கு செலுத்தினார். நாட்டின் தலைவர் என்று போற்றும் அளவிற்கு சுதந்திரத்திற்கான அவரது மிகப்பெரிய பங்களிப்பு அலாதியானது.

தொடரும்.....


நூலைப்பெற


போன்:
7401213394
7358278146
8148129887

விலை
ரூ.25/-

இந்த சித்திரவதைக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள், தாங்கள் எங்கே அழைத்துச் செல்லப்படுகின்றோம் என்பதை அறிந்திடவே மாட்டார்கள். அவர்களின் கண்களை கட்டித்தான் அழைத்துச் செல்வார்கள். அவர்களை யாரும் சந்திக்க இயலாது. அவர்கள் தங்களை சித்திரவதைப் படுத்துபவர்களை மட்டுமே பார்த்திட இயலும். இவற்றில் முக்கிய சித்திரவதைக் கூடம் மும்பையிலுள்ளது. ஹயசநல – ஆய்ரி வசதி கூடம் என இதற்குப் பெயர். இங்கே நான்கு அறைகள் இருக்கின்றன. இங்கே வைத்துதான் 2006 மாலேகான் குண்டு வெடிப்போடு சம்மந்தப்பட்ட செய்யத் கான் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்பவர் விசாரிக்கப்பட்டார். சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்.

- நூலிலிருந்து

ஆங்கிலம் : JOHN FEFFER
தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




# காஸா..

## விழும் பிணங்களும்! இஸ்லாமோஃபோபியாவும்!

**புகுமுன்**

**இஸ்லாமோ** ஃபோபியா என்ற இஸ்லாத்தின் மேல் வளர்க்கப்படும் வெறுப்பு, எந்த அளவுக்கு தலைவிரித்தாடுகின்றது என்பதை நாம் இப்போது காஸாவில் கண்டு வருகின்றோம்.

இன்றளவும் காஸாவிலுள்ள ஆரோக்கிய அமைச்சகம் தருகின்ற ஷஹீத்களின் எண்ணிக்கை 40.000

ஆனால் களத்தில் காஸாவில் இடிபாடு களுக்கிடையேயும் இடிந்து, நொறுங்கியும் போன மருத்துவமனைகளிலும் பணியாற்றிடும் 45 மருத்துவர்கள், அங்கே கொலை செய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை 25.7.2024 வரை 92,000 என தங்கள் கடிதம் ஒன்றின் குறிப்பிட்டி ருந்தார்கள். இந்தக் கடிதம் அமெரிக்காவின் முக்கியப் பிரதிநிதிகளுக்கு அனுப்பப்பட்டது.

இந்த எண்ணிக்கைதான் சரியாக இருக்கும் வாய்ப்புகள் அதிகம். இந்த 45 மருத்துவர்களும், நடுவு நிலையானவர்கள். அவர்கள், தன்னலமற்று சேவை செய்திட வந்தவர்கள். உலகின் பல்வேறு நாடுகளையும் சேர்ந்தவர்கள்.

அத்தனை குரூரமான இஸ்ரேலிய தாக்குத லிடையேயும், அந்த மக்களுக்கு மருத்துவம் செய்து கொண்டிருப்பவர்கள்.

அடுத்து இந்த மருத்துவர்கள் நாங்களும், இருக்கின்றோம் எனக் காட்டிக்கொள்வதற்காக விட்ட அறிக்கை அல்ல. மாறாக, அவர்கள் இஸ்ரேலியப் பிரதமர் நெத்யான்ஹூ அமெரிக் காவில் இருந்தபோது (24.7.2024 முதல் 27.7.2024 வரை) அமெரிக்காவின் முதல் பெண்மணி (First Lady) என அறியப்படுகின்ற Jill Biden அமெரிக்க அதிபரின் மனைவி ஜில் பைடனுக்கும் அடுத்து, அமெரிக்காவின் அதிபர் எனப் பேசப்படுகின்ற கமலா ஹாரி ஸுக்கும் ஆகியோருக்கு அனுப்பிய கடிதம்.

அந்தக் கடிதம் பல மாற்றங்களை கமலா ஹாரிஸ் இடம் கொண்டு வந்தது.

மெல்லக் கசிந்த இந்தக் கடிதம், டிரம்ப் வரை சென்றடைந்தது. அதனால் நெத்யான்ஹூ அமெரிக்காவிலிருந்தபோது எல்லோரும் காஸாவில் போரை நிறுத்திட வேண்டும் என நெத்யான்ஹூவிடம் முறையிட்டார்கள்.

கமலா ஹாரிஸ் காஸாப் படுகொலைகளைப் பற்றி நாம் கண்ணை மூடிக்கொண்டிருக்க முடியாது என்றார். தான் ஏற்கெனவே எடுத்திருந்த முடிவில் உறுதியாக நின்றார்.

இந்த மருத்துவர்கள் எழுதியக் கடிதத்தில் பல விஷயங்களைக் குறிப்பிட்டார்கள் அவை:-

1) பெண்களும் குழந்தைகளும் குறிவைத் துக் கொலை செய்யப்படுகின்றார்கள்.

2) பெண்களுடைய தலையிலும், மார்பிலும் குண்டுகள் பாய்ந்திருக்கின்றன. எல்லாப் பெண்களும் ஒன்றுபோலவே இதேபோல் குறிவைத்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.


vaigarai velicham official

*3) குழந்தைகளுக்கும், தலையிலும் நெத்தியிலும் இதேபோல் காயம்பட்டி ருக்கின்றது. அதாவது நெத்தியிலும் மார்பிலும் காயம்பட்டிருக்கின்றது. இது குழந்தைகளுக்கு மருத்துவம் செய்த மருத்துவர்கள் அந்த கடிதத்தில் குறிப் பிட்டது. இவையெல்லாம் அவர் களைக் கொலை செய்தவர்கள் மிகவும் Close range அருகாமையிலிருந்துதான் சுட்டுக் கொன்றிருக்கின்றார்கள் என்பது உறுதி செய்தது.*

*4) காயம் பட்டவர்கள் அல்லாமல் இறந்துபோனவர்கள் விவகாரத்திலும் இதுவே நடந்திருக்கின்றது. அதாவது நெத்தியிலும் மார்பிலும் கட்டு இருக்கின்றார்கள்.*

*5) இப்படிக் கொலை செய்யப்பட்ட வர்களின் எண்ணிக்கை 92,000 (இதுதான் உண்மையாக இருக்க முடியும் என்பது எமது கணிப்பு)*

கடந்த காலங்களை வைத்துப் பார்த்தால் இப்போது, காஸாவில் நடக்கும் இந்தக் குழந்தை கொலைகளுக்கு யாரும் குற்றம் பிடிக்கப்படமாட்டார்கள், யாரும் நீதியின் முன்பும் நிறுத்தப்படமாட்டார்கள்.

இந்தக் கடிதம் இஸ்ரேலிலும், அமெரிக் காவிலும் முதலில் அதிர்வுகளை ஏற்படுத்தியது. அதனால் அந்த அதிர்வுகள் முன்னுக்குப் பின் முரணாண சிலபல அறிக்கைகளோடு நின்று விட்டன.

எல்லா நிலைகளிலும் அமெரிக்கா இதுபோன்ற பம்மாத்துக்களுக்குப் பின் உறுதியாக இஸ்ரேலுக்கு பக்கத்தில் நிற்கும், நின்றும் வருகின்றது.

**அமெரிக்க ஆயுதங்கள்**

45 மருத்துவர்களும் எழுதியக் கடிதத்தின்படி பெண்களும் குழந்தைகளும்தான் அதிமாகக் கொலை செய்யப்பட்டார்கள். அதுவும் குரூரமாகக் கொலை செய்யப்பட்டார்கள்.

ஆனால், அவை அனைத்தும் அமெரிக்கா வழங்கிய ஆயுதங்களால்தான் எனக் குறிப்பிட வில்லை.

ஒவ்வொரு முறையும் அமெரிக்கா இஸ்ரேலுக்கு அனுப்பும் பத்து லட்சம் டன் குண்டுகளும் மனித இனத்திற்கு எதிராக பயன் படுத்திடக்கூடாது என உலக அளவில் ஒத்துக் கொள்ளப்பட்டவை.

இதனை ஐக்கிய நாடுகள் சபை குறிப்பான சட்டங்கள் வழி தடுக்கின்றது. ஆனால் அதைப்பற்றியெல்லாம் கவலைப் படாமல் குண்டுகளை அனுப்பும் அமெரிக்கா. இஸ்ரேல் அவற்றைப் பயன்படுத்தி பாலஸ்தீன முஸ்லிம்களை குறிப்பாக குழந்தைகளையும் பெண்களையும் கொலை செய்யும். இந்தக் குண்டுகளை வீச அமெரிக்காவே போதுமான விமானங்களை அனுப்பித் தருகிறது.

**பெண்கள், குழந்தைகள் கொலை ஏன்?**

முஸ்லிம் பெண்களையும், குழந்தைகளையும் திட்டமிட்டுக் கொலை செய்திட வேண்டும் என்பது அமெரிக்காவின் திட்டங்களுள் ஒன்று. இது 1987 முதல் 1990 வரை அமெரிக்காவிலும் ஐரோப்பியநாடுகளிலும்பேசப்பட்டும், விவாதிக் கப்பட்டும் வந்தது. 1993இல் ஒரு திட்டமாக வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.



இதனை 1997இல் சாமுவேல் பி.ஹண்டிங் டன் என்பவர் தன்னுடைய நூலாகிய “The Clash of Civilizations and the remaking of the new world order) கலாச்சாரங்களின் மோதலும், உலகின் புதிய மறு உருவாக்கமும் என்ற போர்த்திட்ட முன்வரைவில் குறிப்பிட்டிருந்தான்.

இந்தப் போர்த்திட்டத்தின்படி எதிர்கால இஸ்லாமியப் போர் வீரர்களைப் பெற்றுத்தரும் முஸ்லிம் பெண்களையும் அழிக்க வேண்டும் அவர்களின் கருப்பையிலிருந்தே இந்தத் திட்டத்தைத் தொடங்கிட வேண்டும்.



வளரும் குழந்தைகளையும் கொலை செய்திட வேண்டும்.

இந்த நூலையும், அதில் இடம்பெற்ற Youth Buldge என்ற திட்டத்தையும் பற்றி ஏற்கெனவே வைகறை வாசகர்களுக்குத் விரிவாக தந்துள்ளோம்.

இதை இன்று காஸாப் போர்க் களத்தில் நிற்கும் இஸ்ரேலிய இராணுவத்தினரிடம், அவர்களின் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலண்ட் குறிப்பிட்டார் இப்படி...

நீங்கள் இதற்கு முன்னால் 2014இல் கொலை செய்யாமல் விட்டுவிட்ட குழந்தைகளும், இளைஞர்களும்தான் இப்போது உங்களோடு போருக்கு நிற்கின்றார்கள். ஆகவே இப்போதும் குழந்தைகளைக் கொன்று விடுங்கள் என்றார்.

காஸாவில் பெண்களை அதிமாகக் கொலை செய்வதற்கும், இதே காரணத்தையே சொன்னார்கள். அதாவது அவர்கள் எதிர்காலப் போர் வீரர்களைப் பெற்றுத் தருவார்கள்.

**தற்கொலை செய்துகொண்ட இஸ்ரேலிய இராணுவத்தினர்**

307 நாட்களாக நடந்து கொண்டிருக்கும் - காஸா போரில், பல இஸ்ரேலிய இராணுவத்தினர் தற்கொலை செய்துகொண்டார்கள். அவர்களிடம் காரணம் கேட்டோம். அவர்கள், எங்களை, பெண்களையும் குழந்தைகளையும் கொலை செய்திடச் சொன்னார்கள். அதைச் செய்தது எங்களை உறுத்திக் கொண்டு இருந்தது என்றார்கள்.

இந்த அளவுக்கு பெண்களும் குழந்தைகளும் கொலை செய்யப்பட்டார்கள்.

மேலே நாம் விவரித்தவற்றிலிருந்து எந்த அளவுக்கு இஸ்லாமோஃபோபியா என்ற இஸ்லாமிய வெறுப்பு இவர்களின் அடிமனதில் இருந்தது என்பது தெளிவாகும்.

இவற்றையெல்லாம் இன்னும் ஆழமாகப் புரிந்திட ஜான் பெஃபர் கூறுபவை மிகவும் முக்கியமானவை..

ஜான் பெஃபர் கூறுகின்றார்,

இஸ்லாத்தையும் - பாசிசத்தையும் இணைத்து பரப்புவது மேலை நாட்டவர்களுக்கு ஒன்றும் புதிதல்ல.

இரண்டாம் உலகப் போரின் ஒரு பகுதியில் முஸ்லிம்கள் நாஜிகளோடு (ஜென்மனியோடு) தொடர்பு வைத்திருந்தார்கள். அதனால் இஸ்லாமோ ஃபாசிசம் என்றொன்று உலகிலிருக் கின்றது என்றார்.

ஜார்ஜ் புஷ் அடிக்கடி சொல்லிக்கொண்டி ருந்த இந்தப் பொய் சற்றே எடுபடத் தொடங்கி இருந்தது. உண்மையைச் சொன்னால் இந்த இஸ்லாமோ ஃபாசிசம் என்ற சொல்லாட்சியை வடிவமைத்துத் தந்தவர், Malise Ruthuven - மெலைஸ் ருத்துவான். 1990இல் ஒரு கட்டுரை யில் இந்தச் சொல்லாட்சியைக் கையாண்டார்.

அதற்கு புஷ்ஷும் ஏனையோரும் காரணங் களையும் வரலாறுகளையும் வடிவமைத்தார்கள்.

பின்னர் இந்த இஸ்லாமோ ஃபாசிசத்திற்கு எதிராக உலக மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்திட வேண்டும். இந்த பாசிஸ்ட்டுகள் 200 கோடி பேர் உலகில் வாழ்ந்து கொண்டிருக் கின்றார்கள். அப்படியானால் நாம் எவ்வளவு பெரியதொரு எதிரியை எதிர்கொள்கின்றோம் என்பதை அனைவரும் அறிந்திட வேண்டும், தெளிந்திட வேண்டும். காலந்தாழ்த்தாமல் தாக்கிட வேண்டும் என்றெல்லாம் கர்ஜித்தார் - புஷ்.

அவருடைய அடிவருடிகளான தீவிரவாத வலதுசாரிகள் இன்னும் இதை அதிகமா நீட்டி முழக்கினார்கள். குறிப்பாக நோர்மேன் ஸ்டோரக்ஸ் என்பவர் ஒரு நூலை எழுதினார். அதன் பெயர் நான்காம் உலகப் போர், எப்படி



vaigarai velicham official

அன்றைய ஃபாசிசத்திற்கு எதிராக உலகம் திரண்டெழுந்ததோ எப்படி அன்றைய கம்யூனி சத்திற்கெதிராக உலகம் திரண்டெழுந்ததோ அப்படியே இஸ்லாமோ ஃபாசிசத்திற்கெதி ராகவும் திரண்டெழுந்திட வேண்டும் என்றார். இவர் "Commentry" என்றொரு இதழையும் நடத்திவந்தார். இந்த இதழ் அறிவார்ந்தவர்களின் வட்டத்தில் அதிகமாகப் படிக்கப்பட்டது.

இவர், இந்த நோர்மேன் ஸ்டோரக் என்பவர், தொடர்ந்து இன்னொரு படிமேலே போனார். அதில் இப்படிக் குறிப்பிட்டார்.

> எப்படி போப் அர்பன்-II என்பவர் சிலுலைப்போர்களின் போது, என்னென்ன உத்திகளைக் கையாண்டார்களோ, அதே உத்திகளையும் அதைவிட அதிமான உத்திகளையும் கையாண்டிட வேண்டும். காரணம் நாம் எதிர்கொள்வது ஓர் உலகமகா எதிரியை என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என எழுதிக் குவித்தார். இல்லை சண்டப் பிரகடனம் செய்தார்.
>
> இன்றைய நிலையில் இவர்கள் (இஸ்லாமோஃபாசிஸ்ட்டு) எண்ணிக்கை யில் மிகவும் அதிகமானவர்கள். கிருஸ்தவர் களின் எண்ணிக்கையை வைத்துப் பார்த்திடும்போது நாம் மலைத்துப் போகும் அளவிற்கு அதிகமானவர்கள்.
>
> ஆகவே (இஸ்லாத்திற்கும், முஸ்லிம் களுக்கும்) எதிரானப் போரை உடனேயே தொடங்கி ஆக வேண்டும்" என்றார்.

பிறக்கும்போதே இஸ்லாமோ ஃபோபியா வோடு பிறந்த டேனியல் பைப்ஸ் தன்னால் இயன்ற அளவு எகிறிக் குதித்தார்.

இஸ்லாத்திற்கெதிரான பிரச்சாரம், உலகின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் பரவிட வேண்டும்.

இஸ்லாம்தான் உலகின் மிகப்பெரிய எதிரி என்றார். அது கம்யூனிஸம் தந்த சவால்களைவிட அதிகமான சவால்களை நமக்குத் தருகின்றது. ஆகவே அகிலமே ஆர்த்தெழுந்திட வேண்டும் என்றார்.


இஸ்லாம் நமது வாழ்க்கை முறைகளை மாற்றி அமைத்திட முயற்சி செய்கின்றது. நமது அரசியல் முறைகளை மாற்றிட முனைகிறது. நம்முடைய அதாவது, மேலை நாடுகளின் கொள்கைகள் அனைத்தையும் எதிர்க்கிறது. வெற்றிக்கொள்ள வேண்டும் என்கின்றது. அது, நாம் இதுவரை சந்தித்த எதிரிகளைவிட மிகவும் ஆபத்தான எதிரி. ஆகவே நாம் வேகமாக விரைந்து செயல்பட்டிட வேண்டும் என்றார்.


ஜான் பெஃபர் கூறுவதை இன்ஷா அல்லாஹ், அடுத்த இதழிலும் பார்ப்போம்...

இப்படி அவசரத்தில் அள்ளித்தெளித்த கோலமாய், இஸ்லாத்தை எதிர்க்கத் தலைப் பட்டார்கள்.

இந்தப் பின்னணியில்தான் இப்போது காஸாவில் நடக்கும் படுகொலைகளைப் பர்த்திட வேண்டும்.

**- MGM**



# 1940, கைஃபா துறைமுகத் தாக்குதல்

## தங்களைத் தாங்களே கொலை செய்து அனுதாபத்தை தேடிய ஜியோனிஸ்ட்டுகள்

**ஜியோனிஸ்ட்டுகள்,** யூதத் தீவிரவாதிகள் தங்களுக்கு ஒரு தனிநாடு வேண்டும் என்பதை எப்படியேனும் அடைந்திட வேண்டும் என்பதற்காக பல்வேறு உத்திகளைக் கையாண்டார்கள்.

அவற்றுள் ஒன்று குரூரம் நிறைந்த தீவிரம். இந்தத் தீவிரவாதம் என்ற வழிமுறையைப் பயன்படுத்திட எத்தனையோ தாக்குதல்களை நடத்தினார்கள். பின்னர் பழியை முஸ்லிம்கள் மேல் போட்டார்கள். அப்போது ஜியோசினத்தின் தொடக்க நாள்களின் அரபுக்களையே அதிகமாக தங்களுடைய எதிரிகளாகக் காட்டினார்கள். அதனால் அரபுக்களையே தீவிரவாதிகளாகக் காட்டினார்கள்.

தாங்கள் அப்போது பெற்றிருந்த ஊடகப் பலத்தாலும், அமெரிக்க, ஆங்கில நாடுகளின் பின்பலத்தாலும், இந்தப் பிரச்சாரங்களை மிகவும் எளிதாகவே செய்தார்கள்.

இந்தத் தீவிரவாதத்தில் எந்த அளவுக்குச் சென்றார்கள் என்றால், யூதர்களையே கொலை செய்துவிட்டு முஸ்லிம்கள் மேல் அதாவது, அரபுக்கள் மேல் சுமத்தினார்கள்.

இப்படி 1940 நவம்பர் 25இல் ஓர் தீவிரவாத செயலை அரங்கேற்றினார்கள்.

அங்கே தீவிரவாதம் இன்றைக்குப் பெரிதாக பேசப்படுகின்ற இஸ்ரேலிலுள்ள ‘ஹைஃபா துறைமுகத்தில் நிறைவேறியது. இந்தத் துறைமுகத்தில் ஓர் சதியை கொண்டிருந்தது. அதன் பெயர் SS Patria எஸ்.எஸ். பாட்ரியா என்பதாகும். அதில் 1800 யூதர்கள் இருந்தார்கள்.

இந்த யூதர்கள், உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், பாலஸ்தீனில் வந்து சட்ட விரோதமாக குடியேறிவர்கள்.

அப்போது (1940களில்) பாலஸ்தீனம், ஆங்கில நாட்டின், பிரிட்டன் நாட்டின் ஆதிக்கத்தில்தான் இருந்தது. இந்த பிரிட்டன் உலகெங்கிலுமிருந்து வந்து பாலஸ்தீனில் குடியேறும் யூதர்களை வரவேற்றது. இன்னும் சொன்னால் கொண்டுவந்து குடியேற்றியது. ஆனால், வந்து குடியேறியவர்கள் சில சாங்கியங்களைப் பின்பற்றிட வேண்டும் என அறிவித்திருந்தது. இந்தச் சாங்கியங்களைப் பின்பற்றிட உதவியும் செய்தது.

அந்த சாங்கியங்களுக்குள் ஒன்று அவர்கள், ஆங்கில நாட்டின் அனுமதியைப் பெற்றுத்தான் வந்திட வேண்டும். அத்தோடு அனுமதிக்கான ஆணைகளையும் கையில் வைத்திருக்க வேண்டும். இதனை பாலஸ்தீனில் வாழ்ந்த அரபுக்கள் எதிர்த்தார்கள்.


அதேபோல் கண்ட இடங்களிளெல்லாம் தங்கிடலாம் என்றில்லை. ஆங்கிலேயே அதிகாரிகள் சொல்லுமிடங்களில்தாம் தங்கிட


vaigarai velicham official

வேண்டும். இப்படி இன்னும் சிலபல நிபந்தனை களை விதித்திருந்தார்கள். இந்த விதிமுறைகளை பின்பற்றாதவர்களை பாலஸ்தீனிலிருந்து வெளியேற்றி மொதிசியல் என்ற இடத்தில் (தீவில்) கொண்டு குடியேற்றினார்கள்.

இப்படி தங்களுடைய சாங்கியங்களையும் நிபந்தனைகளையும் பின்பற்றாத யூதர்கள் 1800 பேரைத்தான் அந்த கப்பலில் ஏற்றினார்கள். ஆங்கிலேய அதிகாரிகள்.

ஆனால் யூதத் தீவிரவாதிகளுக்கு பாலஸ்தீனுக்கு வந்துவிட்ட யூதர்களை வெளியேற்றுவது பிடிக்கவில்லை. யூதத் தீவிரவாதிக விரும்பவில்லை. அதனால் அந்தக் கப்பலைத் தகர்த்து, யூதர்களைக் கொலை செய்ய வேண்டும். பழியை அப்பாவி முஸ்லிம்கள் அதாவது அரபுக்கள் மேல் போட்டிட வேண்டும் என முடிவு செய்தார்கள்.




ஹைஃபா துறைமுகத்தில் நின்ற அந்தக் கப்பலை SS Patria வை குண்டு வைத்துத் தகர்த்தார்கள். பழியை பாலஸ்தீனில் வாழ்ந்த முஸ்லிம்கள்மேல் போட்டார்கள். இந்த முஸ்லிம்கள் அங்குள்ள பூர்வகுடிகள்.

கப்பலிலிருந்த யூதர்கள் 267 பேர் இறந் தார்கள். 172 பேர் காயம்பட்டார்கள். எஞ்சியோர் மீட்கப்பட்டார்கள். கப்பல் கடலில் மூழ்கியது,

உலகில் தங்கள் மக்களைக் கொலை செய்து விட்டு, பழியை எதிரிகள்மேல் போடும் மாபாதகச் செயல்களைச் செய்வது யூதப் பயங்கரவாதமாகிய ஜியோனிசத்திலிருந்தான் தொடங்குகின்றது.

இந்த யுக்தியைத்தான் நம் நாட்டு சங்கப் பரிவாரத்தினர் கடைபிடித்து வருகின்றர்கள். பாலஸ்தீனத்தில் யூதர்கள், இதுபோன்ற தீவிர வாதத்தின் மூலம் அரபுலகத்தை குற்றவாளி களாகக் காட்டி தங்களுக்கென ஒரு நாட்டை பிடுங்கிக்கொண்டார்கள். பாலஸ்தீனில் இங்கே இந்தியாவில் சங்கிகள் EVMS-ன் உதவியோடு ஆட்சியைப் விடாப்பிடியாக பிடித்துக் கொண்டார்கள்.

இதில் வேடிக்கையும் வேதனையும் என்னவெனில்

1940 நவம்பர் 25ஆம் நாள்முதல் அரபுக்களே இந்தப் பழியை சுமந்தார்கள்.

பாலஸ்தீனி பெருநிலத்தை, தங்கள் கிடுக்கிப் பிடிக்குள் வைத்திருந்த ஆங்கிலேயே ஏகாதி பத்தியம் அரபுப்களை எந்த ஆதாரமுமில்லாமல், கெடுபிடிகளுக்கு ஆளாக்கியது. யூதத் தீவிரவாதி களான ஜியோனிஸ்ட்டுகளிடம் மிகவும் கருணையுடன் நடந்து கொண்டார்கள்.

இந்த நிலை 1957 வரை தொடர்ந்தது. 1957இல் SS Patria எஸ்.எஸ்.பாட்ரியா கப்பலில் குண்டு வைத்த ஜியோனிஸ்ட் விபரமாக ஒரு நூலை எழுதி வெளியிட்டான். அதில, அவன் எல்லா உண்மைகளையும் ஒத்துக்கொண்டான்.

அதன்பின்னரே அரபுக்கள் வீழ்ந்த பழி அகன்றது. ஆனால் அதற்குள் ஜியோனிஸ்ட்டுகள் தாங்கள் எண்ணியதையெல்லாம் சாதித்துக் கொண்டார்கள். அந்தத் தீவிரவாதத்திலிருந்து கூட்டுப் படுகொலைகளிலிருந்து இன்றளவும் பாலஸ்தீன முஸ்லிம்கள் தப்பித்திட இயலவில்லை.

அன்று பெயர் முனியா மர்டோர் Munya Mardor இவன்தான் கப்பலில் குண்டுகளை வைத்தான். இவன் ஹாகானாக் என்ற யூதத் தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர்.

Source Book : Mardor Munya Meir (19710/1957) Shelihut alumah pirke mivtsain meyuhadim be - maarkhot HA-Haganah in he-bren tel aviv - tseva haganahle yisrael, hotsaat, misrad ha-bitahon.

"Patria Isreal Arnold Zweig"
இது இந்த சம்பவத்தை தழுவிய புதினம்.

குழந்தை வளர்ப்பு

# எல்லாம் அல்லாஹ்வுக்காக



**குழந்தைகளை** வளர்ப்பதில் பெற்றோர்கள் கண்ணும் கருத்துமாக இருந்திட வேண்டும்.

அவர்களின் இயல்பையும், பண்பு நலன் களையும் அறிந்து பக்குவமாய் அவர்களை வளர்த்தெடுத்திட வேண்டும்.

முடிந்தளவிற்கு அவர்களுக்கு வசதிகளைச் செய்து தரவேண்டும். அவர்களின் ஆரோக்கி யத்தில், உடல் வளர்ச்சியில் போதிய கவனம் செலுத்த வேண்டும்.

அவர்களின் மன வளர்ச்சியைப் பாதிக்கும் பண்பற்ற செயல்கள் எதையும் அவர்கள் முன் பெற்றோர்கள் காட்டிக்கொள்ளக்கூடாது.

இந்த வகையில் குடும்பச் சண்டைகளை அவர்கள் முன் போடுவதைத் தவிர்த்திட வேண்டும். எடுத்ததற்கெல்லாம் கடிந்து விழுவதையும், சில்லறை தவறுகளுக்கெல்லாம் அடிப்பதையும் கைவிட்டுவிட வேண்டும்.

இப்படி நல்ல ஆரோக்கியத்துடனும், ஆரோக்கியமானதொரு சூழ்நிலையிலும் அவர்களை வளர்த்திட வேண்டும்.

அவர்களின் வளமான எதிர்காலத்தை மனதில் கொண்டு சிறந்த கல்வி அவர்களுக்குக் கிடைத்திட, நம்மால் இயற்தையெல்லாம் செய்திட வேண்டும். இவையல்லாமல் அவர் களின் மன நிலைகள் பாதிக்கப்பட்டிருந்தால் என்ன செய்ய வேண்டும்?

அவர்கள் சுட்டிப்பிள்ளைகளாய் இருந்தால் என்ன என்ன செய்ய வேண்டும்? என்பன பற்றியெல்லாம் விளக்கமாகத் தந்துள்ளோம்.

இப்படி தங்கள் ஓர் ஆரோக்கியமானதொரு சூழ்நிலையில் வளர்க்கப்படுவதும், தங்களு டைய தேவைகளைப் பெற்றுக் கொள்வதும் குழந்தைகளின் உரிமைகள்

இவற்றை ஏற்பாடு செய்து தந்திட வேண்டியது பெற்றோரின் கடமைகள். இவை இஸ்லாத்தின் வழிகாட்டுதல்கள். இத்தனைக்கும் மேலாக அவர்கள் அல்லாஹ்வை அஞ்சி வாழ்பவர்களாக ஆகிட வேண்டும் உண்மையைச் சொன்னால், அவர்கள் அல்லாஹ்வை அஞ்சி, இறையச்சத்தோடு வாழ்பவர்களாக நாம் ஆக்கிடவேண்டும்.

அதற்கான அனைத்து முயற்சிகளையும் நாம் எடுத்திட வேண்டும். இதுவே குழந்தை வளர்ப்பில் நாம் கவனம். செலுத்திட வேண்டிய முக்கிய பகுதி,

இஃதல்லாதபோது குழந்தைகள் நிரந்தர நஷ்டங்களுக்கு ஆளாகிவிடும். எந்த நிலை யிலும் குழந்தைகளை நாம் அடிக்கக் கூடாது தான். மட்டுமல்ல அவர்களோடு நாம் அன்பும், பாசமும் செலுத்துபவர்களாக இருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் தாங்கள் குறித்த வயதில்



vaigarai velicham official

இறைவணக்கத்தில் ஈடுபட மறுத்தால் நாம் அவர்களை லேசாக அடிக்கலாம். எழு வயதில் அவர்களைத் தொழுகைக்காகத் தூண்ட வேண்டும். 10 வயதில் அவர்கள் தொழவில்லை என் றால் அடிக்கலாம்.

ஆக இங்கே ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். நாம் குழந்தைகள்பால் கொள்ளும் அன்பு, அரவணைப்பு அனைத்தும் அந்த அல்லாஹ்வுக்காகத் தான். அந்த அல்லாஹ்வின், திருப்தியும் மகிழ்ச்சியும்தான் நமது இறுதி இலக்கு.

நாம் குழந்தைகளிடம் அன்பாய், பண் பாய் நடக்க வேண்டும். இது நமது கடமை அவர்களின் உரிமை..

அந்த அன்பும், பாசமும் நாம் அல்லாஹ் விடம் காட்டும் பணிவுக்குப் பின்னர்தான் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

நம்மை உறுதியாகவும் இறுதியாகவும் மறுமை என்ற இறப்பிற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் காப்பாற்றப்போவது அந்த அல்லாஹ்வுக்காக நாம் ஆற்றிடும் பணிவே, நாம் நமது சூழந்தைகளின்பால் கொள்ளும் பாசமும் பற்றும் அல்லாஹ்வுக்காகத்தான்.

அல்லாஹ்வின் விருப்பத்திற்குப் பின்னால் தான் ஏனையவையெல்லாம்.

இறைவன் தன் இறைமறையில் இப்படிக் குறிப்பிடுகிறான் :


“செல்வமும் பிள்ளைகளும் இவ்வுலக வாழ்க்கையில் அலங்காரங்களேயாகும். என்றும் நிலைத்திருக்கக்கூடிய நற்கருமங்களே உம்மு டைய இறைவனிடத்தில் பலனுடையதாகவும் (அவனிடத்தில்) நம்பிக்கையுடன் ஆதரவு வைக்கத்தக்கவையாகவும் இருக்கின்றன.

- அல்குர்ஆன்.

இன்னும் அல்லாஹ் கூறுகிறான் :

(நபியே!) நீர் கூறும், உங்களுடைய தந்தை மார்களும், உங்களுடைய பிள்ளைமார்களம், சகோதரர்களும், உங்களுடைய மனைவிமார் களும், உங்களுடைய குடும்பத்தார்களும் நீங்கள் திரட்டிய செல்வமும், நஷ்டம் ஏற்பட்டு விடுமோ என்று நீங்கள் அஞ்சுகின்ற (உங்கள்) வியாபாரமும், நீங்கள் விருப்பத்துடன் வசிக்கும் வீடுகளும் அல்லாஹ்வையும் அவன் தூதரையும், அவனுடைய வழியில் அறப்போர் புரிவதைவிட உங்களுக்குப் பிரியமானவையாக இருக்குமானால் அல்லாஹ் அவனுடைய (வேதனையை)க் கொண்டு வருவதை எதிர்பார்த்திருங்கள். அல்லாஹ் பாவிகளை நேர் வழியில் செலுத்துவதில்லை. - அல்குர்ஆன்

ஆக, மழலைச் செல்வங்களைவிட மகத்தாக நாம் விரும்ப வேண்டியது அல்லாஹ்வைத்தான்.


அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத். தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்திரமாக மீட்டார்.

“ஹஜ்“ பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தோடு.

16 ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். லட்சக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, "கேசியஸ் கிளே" என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குழு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்-X அவர்களை பிப்ரவரி 21-1965 இல் கொலை செய்து விட்டார்கள்.

தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887



# பற்சொத்தையின் அறிகுறிகளும் தடுக்கும் முறைகளும்

**மருத்துவர் முரளி கார்த்தி,**
பல் மருத்துவர், சென்னை.

**பல்** போனால் சொல் போகும்! உலக மக்கள் தொகையில் சதவிகித மக்கள் பல் சொத்தையினால் பாதிக்கப்படுகிறார்கள் என்கின்றன ஆய்வுகள். இதற்கு முக்கியக் காரணம், இனிப்புப் பண்டங்களைச் சாப்பிட்டுவிட்டுச் சரியாக வாய் கொப்பளிக்காமல் இருப்பதும், பற்களைச் சரியாகப் பராமரிக்காமல் இருப்பதும்தான்.

பற்களில் ஏற்கனவே உள்ள பாக்டீரியாக்கள் சாப்பிட்ட பிறகு வாயைச் சரியாகக் கொப்பளிக்காமல் அல்லது பல் துலக்காமல் இருந்தால், உணவுத் துகள்கள் மூலம் கலந்து லாக்டிக் அமிலத்தைச் சுரக்கச் செய்துவிடும். இந்த அமிலம் பற்களின் எனாமலை அழிக்கத் தொடங்கும். இதன் தொடர்ச்சியாகப் பற்கள் சொத்தையாகி விடும். பல் சொத்தையைச் சரியாகக் கவனிக்கா விட்டால் பல் வலி வந்து பல்லை எடுக்கக்கூடிய நிலை வரும்.

**பல் சொத்தைக்கான முக்கிய அறிகுறிகள்**

1. பற்களின் இடுக்குகளில் சிக்கிக்கொள்வது.

2. சூடாக அல்லது குளிர்ச்சியாக உணவு உண்ணும்போது பல் கூச்சம் ஏற்படுவது.

3. பல்லின் நிறம் கருப்பாக மாறுவது.

4. உணவைக் கடித்து உண்ணும்போது வலி ஏற்படுவது.

5. ஈறு மற்றும் முகத்தில் வீக்கம் வருவது.

**பல் சொத்தையின் நிலைகள்**

ஆரம்பக் கனிம நீக்கம் நிலை உணவுத் துகள்கள் நம் பற்களில் இருக்கும் பாக்டீரியாவுடன் சேர்ந்து அமிலத்தை உருவாக்கும். அமிலங்கள் வெளிப்படும்போது பற்சிப்பி தாதுக்களை இழக்கும். அப்போது பற்களின் மேல் வெள்ளைப் புள்ளிகள் தோன்றலாம். இது பற்சிதைவின் ஆரம்ப நிலை. இதை சரிசெய்ய ஃப்ளூரைடு சிகிச்சை உதவும்.

பல்லின் வெள்ளைப் புள்ளி, பழுப்பு நிறத்துக்குக் கருமையாக மாறும்போது பற்சிப்பி பல வீனமடைகிறது. இந்த துளைகள் மருத்துவரால் நிரப்பப்படும்

டென்டின் என்பது பற்சிப்பிக்கு அதாவது, அடியில் இருக்கும் திசு. இது பாதிப்படைந்தால் சூடாகவோ, குளிர்ச்சியாக உணவை உட்கொள்ளும்போது பல் கூச்சம் உண்டாகும். அப்போது உடனடியாக மருத்துவரை அணுகிப் பல்லை அடைத்துக்கொள்ள வேண்டும்.

பற்களின் ஆழமான வேராக உள் அடுக்காக இந்தக் கூழ் இருக்கிறது. பல் கூழ் சேதமடையும் போது அது எரிச்சலடைந்து வீங்கத் தொடங்கும். இதற்கு வேர் சிகிச்சை மட்டுமே பலனளிக்கும்.

பல் சிதைவு கூழ் பகுதி சிதைவிலிருந்து முன்னேறும்போது இது தொற்றாகப் பரவத் தொடங்கிப் பற்களில் கீழ்வரைத் தொடங்கும். இந்தத் தொற்று தடைகளின் எலும்புகள் மற்றும் தலை, கழுத்துப் பகுதிகளுக்கு பரவத் தொடங்கும். அப்போது உடனடியாக மருத்துவரை அணுகிச் சிகிச்சை பெற வேண்டும்.

1. நார்ச்சத்து அதிகம் சார்ந்த உணவுகளை எடுத்துக்கொள்ளுங்கள்.

2. சர்க்கரை அதிகம் உள்ள உணவுகளைத் தவிர்க்கவும்.

3. இரண்டு முறை பல் துலக்குவது அவசியம்.


4. நல்லெண்ணெய்யை வாயில் ஊற்றி 20 நிமிடங்கள் கொப்பளித்து துப்பிய பின் பல் துலக்க வேண்டும்.

5. வருடத்தில் இருமுறை மருத்துவரை அணுகிப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

**நன்றி : முதுமை எனும் பூங்காற்று**



vaigarai velicham official



# சர்க்கரையால் வரும் குழி புண் தீர சித்த மருத்துவம்!

**Dr. S.அருள் சொரூபி,** M.D.(S),M.A., (Yoga), சித்த மருத்துவர்

**இன்று** எங்கு பார்த்தாலும் சர்க்கரை 'நோய் தான். மருத்துவர்கள் சர்க்கரை வந்த முதியோர் களைப் பார்த்தவுடன் கால்களைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும் என்று பரிந்துரை செய்வார்கள்.

சர்க்கரை நோய் கட்டுக்கடங்காமல் இருந்தால் கால்களில் மதமதப்பு, மரத்துப் போதல், சாணியில் கால் மிதித்தால் என்ன உணர்வு வருமோ அதுபோல் கால்களில் உணர்ச்சி குறைந்து வருவதாலும், அடிபட்டால் ரணம் ஆறாமல் போவதாலும், ரத்த ஓட்டம் குறைவதாலும் காலில் புண்கள் தோன்றும். இது ஆறாமல் ரணமாகிக் குழியாக மாறுவதும் உண்டு. சர்க்கரையில் புண் புரையோடும் நிலையில், திசுக்கள் அழுக ஆரம்பித்த பின், விரலையோ காலையோ வெட்டியெடுக்கும் நிலை ஏற்படுகிறது.

இவ்வாறு புண் ஏற்படும்போதே ரத்தச் சர்க்கரை அளவைக் குறைத்து நிஷா ஆம்லாக்கி (மஞ்சள், நெல்லிக்காய்), மதுமேக மாத்திரை, கீழாநெல்லி மாத்திரை ஆகியவற்றை மருத்து வரின் அறிவுரையின் பேரில் எடுக்கலாம். புரையோடிக் குழி விழுந்த புண்களை திரிபலா பொடியைக் கஷாயமாக்கி அந்தக் கஷாயத்தால் கழுவலாம். படிகாரத்தை வெந்நீரில் கரைத்து அதை வெதுவெதுப்பான சூட்டில் வைத்துப் புண்களை கழுவலாம்.

கடுக்காய் ஓடுகளை நீரில் இழைத்து குழிப் புண்களின் மேல் போட, புதிய திசுப் படலம் எளிதில் உருவாகும்.

கை வைத்தியமாகப் பாக்குக் கொட்டையை நீரில் இழைத்துக் குழிப்புண்கள் மேல் பூசி வர ரணம் ஆறும். இது கிராமங்களில் இன்றளவும் பின்பற்றபடும் நடைமுறை. பாக்கு துவர்ப்புத் தன்மை உடையது. Astrigent தன்மை உடைய பாக்கு, புண்களை ஆற்றும் தன்மை உடையது.



கடைகளில் விற்கப்படும் மத்தன் தைலத்தைக் கட்டுத் துணியில் நனைத்துப் புண்களின் மேல் லேசாகச் சுற்றி வைக்க ரணம் எளிதில் ஆறும். இன்றளவும் அரசு சித்த மருத்துவமனைகளில் இதையே பெரும்பாலும் பின்பற்றுகின்றனர்.

கொய்யா இலைகளைக் கொதிக்க வைத்து ஆறாத புண்களைக் கழுவும் வழக்கத்தை இன்றும் சில கிராமங்களில் பின்பற்றுகின்றனர் விரலை வெட்டும் (ஆம்புடேஷன்) சூழல் இருப்பின் அதைத் தவிர்க்க சித்த மருத்துவத்தைப் பயன்படுத்தி நம் விரல், கால்களைக் காப்போம்.

நன்றி : புதுமை எனும் பூங்காற்று

# அல்லாஹ்வின் பக்கம் அழைத்தல்

மனித குலம் நேர்வழி பெற வேண்டும் என்பதற்காக அவர்களிலிருந்தே அல்லாஹ் ஒரு நபியை தேர்ந்தெடுத்து அந்த நபியின் மூலம் அல்லாஹ்வைப் பற்றியும் அவன் கட்டளைகளைப் பற்றியும் போதிக்கச் செய்தான்.

"மெய்யாகவே நாம் ஒவ்வொரு சமூகத்தாரிடத்திலும் அல்லாஹ்வையே வணங்குங்கள், ஷைத்தான்களை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள் என்று (போதிக்குமாறு) நம் தூதர்களை அனுப்பி வைத்தோம்" (அந்நஹ்ல் : *36*)

இந்த உலகில் தோன்றிய எல்லா நபிமார்களும் செய்த முக்கியமான தலையாயப் பணி லாயிலாஹ இல்லல்லாஹ், வணக்ககத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை என்று அறிவிக்கின்ற அழைப்புப் பணி. இந்த வரிசையில் இறுதியாக வந்தவர்தான் முஹம்மது நபி (ஸல்) அவர்கள். நாளை மறுமை நாளில் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் ஏற்றுக்கொண்ட மக்கள் அந்தந்த நபியின் பின்னால் இருப்பார்கள். ஆனால் எல்லா நபிமார்களையும்விடவும் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பின்னால்தான் மிகப்பெரிய கூட்டம் இருக்கும். அந்தளவிற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாஃவா பணியை செய்துள்ளார்கள். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் நபித்துவம் பெற்றதி லிருந்து இடைவிடாமல் தொடர்ச்சியாக, தான் மரணிக்கின்ற வரை அழைப்புப் பணியை செய்து வந்தார்கள்.

எந்தளவிற்க்கென்றால் தங்களில் உடல் நலத்தைவிட, ஓய்வைவிட, மனைவி மக்களைவிட, சம்பாத்தியத்தைவிட, உறவுகளைவிட அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் பணிக்குத்தான் அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்தார்கள்.

எல்லா சூழ்நிலைகளிலும் தாஃவாவிற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அபுதாலிபுக்கு அவரின் மரண சமயம் கலிமாவை எடுத்துச் சொன்னார்கள். "என் சிறிய தந்தையே" லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுங்கள். நான் அதுபற்றிக் கியாமத் நாளில் உங்களுக்கு சாட்சி கூறுவேன் என்று கூறினார்கள். அதற்கவர் மரணத்தின் பயம்தான் இவரை இவ்வாறு செய்யத் தூண்டியது என்று குறைஷிகள் என்னைப் பழித்துக்கூற மாட்டார்கள் என்றிருந்தால் இந்த கலிமாவை கூறி உங்களுடைய கண்களைக் குளிரச் செய்து விடுவேன். அதே வேளையில் உங்களுடைய கண்களை குளிர செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே தவிர வேறு எதர்க்காகவும் இந்த கலிமாவை என்னால் கூற முடியாது என்று கூறிவிட்டார்.

அனஸ் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள் :

முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு யூத மதத்தை சேர்ந்த ஒரு சிறுவன் பணிவிடை செய்து கொண்டிருந்தான். அவன் நோயுற்ற பொழுது அவனை முஹம்மது நபி (ஸல்) அவர்கள் நோய் விசாரிக்கச் சென்று அவனின் தலைமாட்டில் உட்கார்ந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வாயாக என்று சொன்னார்கள். அந்த சிறுவன் தன் தந்தையை உற்று நோக்கினான். அவனின் தந்தை அபுல்காஸிம், (ஸல்) அவர்களுக்கு கீழ்ப்படிவாயாக என்று


vaigarai velicham official

சொன்னார்கள். உடனே அவன் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டான். பின்னர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் "நரகத்தை விட்டும் இவரை பாதுகாத்த அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும் எனக் கூறியவர்களாக அங்கிருந்து வெளியேறினார்கள்.

அப்துல்லாஹ் இப்னி கஃப் இப்னி மாலிக் (ரழி) அவர்கள் அறிவிப்பதாவது முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பனூ வுஃபா கோத்திரத்தினர் தங்கியிருந்த இடங்களுக்கு வந்து அவர்களை அல்லாஹ்வின் பால் அழைத்து தன்னை அவர்களுடன் அழைததுச் செல்லுமாறு அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்கள். எனினும் அரபிகளில் எவருமே இந்தக் கூட்டத்தினரை விட மிகக் கேவலமான முறையில் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு மறுப்பு தெரிவிக்கவில்லை.

ஜாஹிலியா எனும் அறியாமைக்காலத்தில் வாழ்ந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பனுத்தீல் கோத்திரத்தைச் சேர்ந்த ரபீஆ இப்னு அபாத் (ரழி) அவர்கள் கூறினார்கள். நான் ஜாஹில்லாய காலத்தில் துல்மகாஸ் எனும் கடைத் தெருவில் முஹம்மது நபி (ஸல்) அவர்களை பார்த்தேன். அவர்கள், மக்களே லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுங்கள். வெற்றி பெறுவீர்கள் எனக் கூறிக் கொண்டிருந்தார்கள். மக்களெல்லாம் அவர்களிடம் கூடி நின்றார்கள். அப்பொழுது முகம் அழகான மாறு கண்கள் உடைய தலையின் முன்பக்க முடியின் இரு பின்னல்கள் முகத்தின் இரு மருங்கிலும் தொங்கிக் கொண்டிருந்த ஒரு மனிதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் செல்லு மிடங்களிளெல்லாம் பின் தொடர்ந்து சென்று "இவர் மதம் மாறியவர், பொய்யர் எனக் கூறிக் கொண்டிருந்தான். நான் அவனைப் பற்றி மனிதர்களிடம் விசாரித்த போத அவன் நபியவர்களின் சிறிய தந்தை அபூலஹப் ... என மக்கள் கூறினர்.

ஆயிஷா (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்

"நபியே உங்கள் நெருங்கிய உறவினர் களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக" *(அஷ்ஷுஅரா: 214)*

என்ற வசனம் இறங்கியபோது முஹம்மது நபி (ஸல்) அவர்கள் எழுந்து சென்று முஹம்மதின் மகள் ஃபாத்திமாவே, அப்துல் முத்தலிபின் மகள் ஸபியாவே, அப்துல் முத்தலிபின் மக்களே உங்களக்கு அல்லாஹ்விடமிருந்து எதனையும் பெற்றுத்தர நான் ஒருபோதும் சக்திபெற மாட்டேன், என்னுடைய செல்வத்திலிருந்து நீங்கள் விரும்பியதை என்னிடம் கேளுங்கள் என்றார்.

இப்படி முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தனிப்பட்ட மனிதர்கள், கோத்திரங்கள், கடைவீதி உறவினர்கள், மன்னர்கள், ஊர் ஊராக என எல்லாரிடமும் எல்லா சூழ்நிலைகளிலும் அல்லாஹ்வின் பால் மக்களை அழைத்தார்கள். இன்னும் சொல்லப்போனால் ஜிஹாதுடைய காலத்திலும் தாஃவா செய்தார்கள்.

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் எந்த சமூகத்தினரையும் அல்லாஹ் வின் பக்கம் அழைக்காதவரை அவர்களோடு போர் செய்ததில்லை.

எல்லா சமூகங்களுக்கும் தூதத்துவப் பணியை அந்த சமூகத்தின் தூதுவர்களிடம் அல்லாஹ் கொடுத்தான். ஆனால் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு மட்டும் தூதுத்துவ பணியை அவரோடு நின்றுவிடாமல் அந்த பணி மறுமை வரை தொடரச் செய்தான். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தன்னுடைய இறுதிப் பேருரையில் கூறுகையில்...

முஹம்மது நபி (ஸல்) அவர்களிடமிருந்து கற்றுக்கேட்ட விஷயங்கள் பிற மக்களுக்கு எடுத்துரைக்கும்படி கட்டளையிட்டார்கள். அதன் அடிப்படையில் அங்கு கூடியிருந்த ஸஹாபாக்கள் உலகின் பல்வேறு இடங் களுக்கு சென்று அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைத்தார்கள். தீனை நிலை நாட்டினார்கள். இந்த வரிசையில் இன்று நம்மிடம் இந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட் டுள்ளது. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து ஒவ்வொரு முஸ்லிமும் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்க வேண்டும்.

"அல்லாஹ்வின் பக்கம் அழைத்து நல்லறம் செய்து நான் முஸ்லிம் என்று கூறியவனைவிட அழகிய சொல்லைக் கூறுபவன் யார்? (ஹாமீம் ஸஜ்தா : 33)

# தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் சார்பில் பெருநாள் சந்திப்பு மற்றும் சமூக நல்லிணக்க கூட்டம் 1.0.2024


















தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் சார்பில் பெருநாள் சந்திப்பு மற்றும் சமூக நல்லிணக்க கூட்டம் சென்னை காத்பட மெயின் ரோடு (மின்ட்)-ல் உள்ள சமுதாயக் கூடத்தில் 1.07.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெற்றது.



# பெரியார் தொண்டர் பன்னீர்செல்வம் (எ) அமீர் பாஷாவை அல்லாஹ் அழைத்துக் கொண்டான்



**நம்முடைய** மூத்த சகோதரர் அமீர் பாஷா அவர்கள் 20.7.2024 அன்று இறைவனின் அழைப்பை ஏற்றுக் கொண்டார். அவருக்காக நாம் அல்லாஹ்விடத்தில் துவா செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்

இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள். மேலும் நீங்கள் முஸ்லிம்களாக அன்றி மரணமடைய வேண்டாம்.

(அல்குர்ஆன் : 3:102)

76 வயதில் வாழ்வை முடித்துக் கொண்ட அமீர் பாஷா அவர்கள் இஸ்லாத்திற்கு வந்து சுமார் இரண்டரை ஆண்டுகள் ஆயிற்று. அவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட விதம் ஒரு சுவாரசியமான சம்பவம்

நம்முடைய தெருவில் இருந்த ஒரு ஏழை ஊனமுற்ற முதிய சகோதரர் அரசாங்கத்தில் வீடு வேண்டி விண்ணப்பித்து இருந்தார். அவருக்கு தேவையான உதவிகளை அமீர் பாஷா அவர் என்கின்ற பன்னீர்செல்வம் செய்து வந்தார். இந்த இஸ்லாமிய சகோதரர் பன்னீர்செல்வம் அவர்களை அறிமுகப்படுத்தி இவர் தனக்கு பலவகையில் உதவி செய்து வருவதாகவும் தன்னுடைய நண்பர் என்றும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

**கருஞ்சட்டை**

பன்னீர்செல்வம் கருஞ்சட்டையுடன் முறுக்கு மீசையுடன் இருந்தபோதே தெரிந்து விட்டது அவர் ஒரு பெரியார்ஸ்ட் என்று. அவர் தன்னுடைய பெயர் ராவணன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார் அவரை அந்தப் பகுதியில் மக்களும் அவ்வாறே அறிவர். பெரியாரைப் பின்பற்றி திருமணம் கூட அவர் செய்து கொள்ளவில்லை, தன்னுடைய இளைய சகோதரர் இரண்டு பெண் பிள்ளைகளுடன் சிறு வயதிலேயே இறந்துவிட்டார். அப்பிள்ளை களை இவரே கவனித்து அவர்களை வளர்த் தெடுத்து அவர்களை திருமணமும் செய்து கொடுத்துள்ளார். அவர்கள்தான் இவருடைய ரத்த உறவுகளும் கூட. அவரிடம் பேசிய சில நிமிடங்களில் பெரியார் இஸ்லாத்தை தான் பல ஆண்டுகள் பிரச்சாரம் செய்தார் தெரியுமா உங்களுக்கு என்று கேட்டபோது அதற்கு அவர் உடனே அளித்த பதில் இன இழிவு நீங்க இஸ்லாமிய நன்மருந்து என்று பெரியார் கூறியதாகவும் அதனால்தான் தானும் பலரை இஸ்லாத்துக்கு செல்லுங்கள் என்று கூறியுள்ள தாகவும் அவர் சொன்னார்.

பிறகு அவரிடம் பின்பு நீங்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கேட்டதற்கு. சில நிமிடங்களில் அமைதி காத்து பின்பு இஸ்லாம் தன் மனதிற்கு நெருங்கிய மார்க்கம் என்றும் தான் ஏற்றுக்கொள்ள விரும்புவதாகவும் அவர் கூறினார். அவரை மறுநாள் அதே இடத்தில் அதே நேரத்தில் சந்திப்பதாக சொல்லி சென்று விட்டோம் அதேபோல் அவரும் நமக்காக காத்திருந்தார் அதேநாளில் அவர் உறுதிமொழி ஏற்று இஸ்லாத்தை தன் வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொண்டார் அல்ஹம்துலில்லாஹ்.

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட அன்றே தலையில் தொப்பியுடன் தான் அவர் வீட்டுக்கு



vaigarai velicham official

சென்றார். பள்ளிவாசலுக்கு செல்ல ஏதேனும் ஐடி கார்டு வேண்டுமா என்று கேட்ட அவர், மறுவாரம் நாம் அவரை சந்தித்தபோது வாருங்கள் தொழுகைக்கு நேரமாயிற்று என்று நம்மிடம் கூறினார். வாங்க பக்கத்துல இருக்க இந்த பள்ளிக்கு போவோம் என்று சொன்ன தற்கு நாம் இந்த சின்ன பள்ளியில் எல்லாம் தொழுவதில்லை வாருங்கள் பெரிய பள்ளி வாசலுக்கு செல்வோம் என்றார்.

பள்ளியில் உள்ள பலரும் அவரை அறிந்து உள்ளனர் தொழுகை முடித்து பலரிடம் சலாம் கொடுத்து சென்றார். அப்பகுதி மக்கள் அவரை பலர்நேசத்துடன்அணுகினர். அவர்இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதில் மகிழ்ச்சி அடைந்தோறும் பலர்.

**காரணம்**

அவர் அதே பகுதியில் திமுக நகர செயலாள ராக இருந்துள்ளார், அவர் வசிக்கும் பெரியார் நகர் குடியிருப்பு கூட அவர் திமுக தலைவராக இருந்தபோது கலைஞரை அழைத்து திறப்பு விழா நடத்தி உள்ளார். மிஷா காலத்தில் ஸ்டாலினுடன் சிறையில் இருந்துள்ளார்.

பல வழக்குகளை கட்சிக்காகவும் கொள்கைக் காகவும் சந்தித்துள்ளார் உதாரணமாக அனுமதியில்லாமல் பொது இடத்தில் கட்டிய கோவிலை காவல்துறை புகார் தெரிவித்து அரசு கவனத்திற்கு கொண்டு சென்று அதனை தடுத்துள்ளார் மேலும் காவல் நிலையத்தில் ஏன் ஒரு குறிப்பிட்ட தெய்வ நம்பிக்கை படங்கள் மட்டும் உள்ளது இது மத சார்பற்ற நாடு என்று விவாதம் செய்து அதையும் அகற்றி உள்ளார்.

சுமார் ஆறு மாதத்திற்கு முன்பு புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது அதுவும் கடைசி கட்ட தருவாயில். அவரை நாம் பஜர் வீட்டி லேயே தொழுது கொள்ளுங்கள் உடல்நிலை சரியில்லை என்று கூறியபோது அவர் அளித்த பதில் இந்த உடல் வலியை விட பள்ளிக்கு சென்று தொழுகவில்லை என்றால்தான் அதிக வலி தனக்கு ஏற்படுகிறது என்று கூறினார்.

அந்தப் பகுதியில் உள்ள அனைவரிடம் இஸ்லாத்தை பிரச்சாரம் செய்துள்ளார் பல இலக்கியங்களை மக்களுக்கும் கொடுத்துள்ளார் நம்முடைய நோட்டீஸ் வாழ்வின் நோக்கம் திரு உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரத்திற்கு வந்தபோது அவரிடமும் கொடுத்துள்ளார். இவரின் பிரச்சார வேகத்தை பார்த்த அங்குள்ள ஒரு இஸ்லாமிய டீக்கடைக்காரர் இப்படி எல்லாம் செய்யாதீங்க



பாய் என்று கூறியதற்கு இன்னும் சில நாட்களில் இஸ்லாத்தை நோக்கி மக்களை அழைக்கும் பிரம்மாண்ட கூட்டம் அவரின் கடை வாசல் முன்பு தான் திட்டமிட்டுள்ளதாக கூறி அவரை வாயடைத்தார்.

**சில சம்பவங்கள்**

அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோது ஒரு மருத்துவர் ஏன் உங்கள் நெற்றியில் கருப்பு அச்சு உள்ளது என்று கேட்டதற்கு அவர் "நான் நிறைய படிச்சிருக்கேன் சார் அதனால இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளேன். இஸ்லாத்தில் தொழுகை கடமையாக உள்ளது இது தொழுகையின் அச்சு தான்" என்று கூறியுள்ளார். அதற்கு அந்த மருத்துவர் தானும் நிறைய படித்துள்ளதாகவும் ஆனால் இஸ்லாத்தை தான் இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லையே என்று கூறியதற்கு "இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றால் பரந்த மனப்பான்மையும் நற்சிந்தனைகளும் கூட வேண்டும் என்று கூறியுள்ளார்". மருத்துவமனையிலும் கூட இஸ்லாமிய இலக்கியங்களை மக்களுக்கு கொடுத்துள்ளார். அவரை நாம் தாஃவா களத்திற்கு காலை 7 மணிக்கு வாங்கள் என்று கூறினால் பஜர் தொழுத உடனேயே வந்து நின்று விடுவார். சில நிமிடங்கள் அவருடன் உரையாடினாலே நம்முடைய தக்வா அதிகரிப்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

ஒரே நொடியில் தீண்டாமை ஒளிந்து விடும் புத்தகம் அவருக்கு மிகவும் நெருக்கமாக இருந்தது அதனை மக்கள் அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என்று நம்மிடம் அடிக்கடி சொல்லிக் கொண்டே இருப்பார்.

**ஈத் மிலன்**

2023 ஆம் ஆண்டு நடந்த பெருநாள் சந்திப்பு கூட்டத்தில் அவர் சிறப்பு உரையும்

மாற்றினார். வந்த பிறகு முழு மகிழ்ச்சியாக இருப்பதை மக்களிடம் பிரகடனப்படுத்தினர் சில பாடல்கள் கூட பாடினார் அல்லாஹ் என்று.

இறுதி காலத்தில் அவரை வீட்டில் சந்தித்த போது அவர்களுடைய குடும்பத்தார் "பாய் நீங்க எல்லாம் வந்தா தான் அவருக்கு கொஞ்சம் நல்லா இருக்காரு அடிக்கடி வாங்க பாய் என்று கூறுவார்கள்".

இரண்டு மூன்று நாட்களாக கூட எதுவும் உணவில்லாமல் படுத்திருப்பார் புற்றுநோய் பாதிப்பால். நாம் அப்போது வீட்டிற்கு சென்ற போது பாய்க்காவது கொஞ்சம் சாப்பிடுங்க என்று அவருக்கு உணவு கொடுத்தபோது மிகவும் சிரமப்பட்டு எழுந்து அமர்ந்து உணவை கையில் எடுத்து கூறிய முதல் வார்த்தை பிஸ்மில்லா தான்



அவர் இறப்பதற்கு முன்பே தன் குடும்பத்தார்களிடம் அவரை இஸ்லாமிய முறைப்படி தான் அடக்கம் செய்ய வேண்டும் என்று கூறி அதை நமக்கும் தெரியப்படுத்தி இருந்தார் அவரே 20.7.2024 அன்று இறைய அழைப்பை ஏற்றுக் கொண்டார்

தாருல் இஸ்லாம் சகோதரர்களே அவரது உடலைப் பெற்று அவர் இஸ்லாமிய முறைப்படி அடக்கம் செய்தனர்.


இப்பொழுது பரபரப்பான விற்பனையில்







நூலைப் பெற்றிட : 8148129887, 74012 13394



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002